பெரிய
வெள்ளியன்று
சிலுவையில்
அறைந்து
அருட்தந்தை
படுகொலை
பக். 16-17

விலை
ரூபா 20

பக்கங்கள்
32

# உதயன்

34°c - 26°c
தெளிவான
வானிலை

Free Copy

சுடர் 31 கதிர் 125 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 17, புதன்கிழமை 30.03.2016

முச்சந்தி முரளி



அப்ப இனிமேல் போதைப்பொருள் மாத்திரம் தான் பிடிபடுமோ...

## ஒருமைப்பாட்டுக்கு பாதிப்பு ஏற்படாமல் அதிகாரப் பகிர்வு

### வழங்க நடவடிக்கை என்கிறார் பிரதமர் ரணில்




கொழும்பு, மார்ச் 30
நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் ஐக்கியத்துக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளவேண்டும். அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன் போன்ற நாடுகள் ஒவ்வொரு முறையில் அதிகாரப் பகிர்வை மேற்கொண்டுள்ளன. நாம் எமது நாட்டுக்குப் பொருத்தமான சித்தாந்தத்துக்கு அமைய அதிகாரப் பகிர்வை மேற்கொள்வோம் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
பத்தரமுல்லையிலுள்ள வோட்டர்ஸ் ஏஜ் விடுதியில் நேற்று நடைபெற்ற அரசமைப்பு தொடர்பான கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது பிரதமர் தனது உரையில்,
தற்போது நாடாளுமன்றத்தில் எந்த ஒரு கட்சிக்கும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை அதிகாரம் இல்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தேசிய பக். 27

### நல்லிணக்க செயலக செயலாளர் நாயகமாக மனோ தித்தவெல



கொழும்பு, மார்ச் 30
நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகத்தின் செயலாளர் நாயகமாக மனோ தித்தவெல நியமிக்கப்பட்டுள்ளார்.
உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள நிகழாமை என்பவற்றை அடைவ
தற்கான பொறி பக். 28

### முறிகண்டி விபத்தில் யாழ். இளைஞன் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 30
ஏ-9வீதி, முறிகண்டிப்பிள்ளையார் ஆலயத்துக்கு அண்மையில் நேற்று மாலை 6 மணியளவில் லொறி ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் பரிதாபமாக உயிரிழந்தார்.
இந்த விபத்துச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் - பண்டத்தரிப்பைச் சேர்ந்த செல்வராசா கதிர்ச்செல்வன்
(வயது - 26) பக். 27

### மைத்திரி பங்குபற்றிய நிகழ்வில் மின்தடை

கொழும்பு, மார்ச் 30
வட மேல் மாகாணத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்ட விருது வழங்கும் நிகழ்வு இருளில் மூழ்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.
குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஜனாதிபதி, உரையாற்ற ஆரம்பித்து சிறிது நேரத்தில் மின்சாரம் துண்
டிக்கப்பட்டது. பக். 30

## இளைஞனின் சடலம் காயங்களுடன் மீட்பு

### கொலை செய்யப்பட்டாரா எனச் சந்தேகம் கோண்டாவிலில் நேற்றிரவு பரபரப்பு

யாழ்ப்பாணம். மார்ச் 30
கோண்டாவிலில் உடலில் இரத்தக் காயங்களுடன் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞன் ஒருவரின் சடலத்தைக் கண்டறிந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த இளைஞனின் உடலில் காணப்படும் பக். 30

## சரணடைந்தவர்களின் விவரத்தை வெளியிடவேண்டும் இராணுவம்

### ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் முன்னாள் போராளியின் மனைவி உருக்கம்



முல்லைத்தீவு, மார்ச் 30
முல்லைத்தீவு நீதிமன்றில் இராணுவம் தெரிவித்தது போன்று, அருட்தந்தை பிரான்சிஸ் யோசப் தலைமையில் சரணடைந்தவர்களின் பெயர் விவரம் வெளியிடப்படவேண்டும். அதனூடாக எனது கணவனை ஜனாதிபதி ஆணைக்குழு கண்டுபிடித்துத் தரவேண்டும்.
இவ்வாறு காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் கண்ணீர்மல்க வேண்டுகோள் விடுத்துள்ளார் முன்னாள் போராளி பரராஜசிங்
கம் உமாபதியின் பக். 30

## வேண்டாம் பொருத்து வீடு; தீர்மானம் ஜனாதிபதிக்கு

### அனுப்பிவைத்தார் வடக்கு அவைத் தலைவர்

யாழ்ப்பாணம், மார்ச் 30
பொருத்து வீட்டுத் திட்டத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண பக். 30

## ஞாயிறன்று வவுனியா வருகிறார் ஜனாதிபதி

வவுனியா, மார்ச் 30
வவுனியாவில் அமைக்கப்பட்ட இராணுவத்தினருக்கான வீட்டுத்திட்டம் மற்றும் வித்தியா குடும்பத்துக்காக அமைக்கப்பட்ட வீடு என்பனவற்றை எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி கையளிக்கவுள்ளார்.
வவுனியா மாவட்டத்தின் இரு வேறு பிரதேசங்களில் அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களைக் கையளிக்கும் நிகழ்வுக்காக, எதிர்வரும் 3ஆம்
திகதி ஜனாதிபதி பக். 29

## விக்கியையும் சந்திக்கும் மக்கள் கருத்தறியும் குழு

### புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து அபிப்பிராயம் பெறுவதற்காக

கொழும்பு, மார்ச் 30
புதிய அரசமைப்பு எவ்வாறு அமையவேண்டும் என்பது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் கருத்து எதிர்வரும் 6 ஆம் திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக, மக்கள் கருத்தறியும் குழு
வின் உறுப்பினர் பக். 27

## பூட்டிய வீட்டுக்குள் 44 கிலோ கஞ்சா

### மன்னார் நீதிமன்றின் அனுமதியுடன் கதவை உடைத்து மீட்டனர் பொலிஸார்

மன்னார், மார்ச் 30
மன்னார் - பேசாலை முருகன் கோவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 44 கிலோ கேரளக் கஞ்சாப் பொதிகளை,
நீதிமன்ற பக். 29



## மகிந்த வாங்கிய கடன்களை மக்கள் மீதே சுமத்தவேண்டும்

### சிக்கல்களைத் தீர்க்க இதுதான் ஒரே வழி என்கிறார் ஹரீன்

கொழும்பு, மார்ச் 30
மகிந்த அரசு பெற்றுக் கொண்ட கடனை அடைக்கவேண்டுமாயின், நாட்டு மக்களுக்குச் சற்றுக் கடினமான சுமையைக் கொடுத்தே ஆகவேண்டும்.
இவ்வாறு அமைச்
சர் ஹரீன் பக். 30



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மூன்றாம் பங்குனித் திங்களான நேற்று முன்தினம் திங்கட்கிழமை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் நாக பாம்பு ஒன்று காட்சியளித்துள்ளது. நேற்று முன்தினம் மூன்றாவது பங்குனித் திங்கள் ஆகையால், அதிகளவான பக்தர்கள் கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு வருகை தந்திருந்தனர். இதன் போது ஆலயத்தில் உள்ள மரம் ஒன்றின் முன்னால் வைக்கப்பட்டிருந்த பானையில் நாகபாம்பு தோன்றியுள்ளது. இதைப் பார்த்த பக்தர்கள் கைகூப்பி வணங்கியதுடன் பால் வைத்து வழிபட்டனர். (ஐ-21)

# வெள்ளை வானில் வந்தோர் எனது கணவரை கடத்தினர்

## ஆணைக்குழு முன்பாக மனைவி சாட்சியம்

வவுனியா,மார்ச் 30

சாரதியாகப் பணிபுரிந்த எனது கணவர் விஜியலாதன் 2007 ஆம் ஆண்டு வவுனியா குருமன் காட்டுப் பகுதியில் வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்தப்பட்டார். அவரைத் தேடி அலைந்து சலித்துப் போய் விட்டது. இன்று வரை எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. வாழ்வாதாரத்துக்கு வழி இல்லாது மில்லில் வேலை பார்க்கின்றேன். எனது கணவரைக் கண்டுபிடித்துத் தாருங்கள் - இவ்வாறு பெண் ஒருவர் ஆணைக்குழு முன் சாட்சியமளித்தார்.

காணாமற் போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு நேற்று வவுனியாவில் நடைபெற்றது. அதில் சாட்சியம் அளிக்கையிலேயே அந்தப் பெண் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் சாட்சியத்தில் தெரிவித்ததாவது-

சாரதியாகப் பணிபுரிந்த எனது கணவர் விஜியலாதன் 2007 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வேலையில் ஈடுபட்டு கொண்டிருந்த போது, வவுனியா குருமன்காட்டுப் பகுதியில் வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்தப்பட்டார். இதைப் பலர் பார்த்துள்ளார்கள். ஆனால் அவர்களால் மீட்க முடியவில்லை. அவர் காணாமற் போய் எட்டு வருடங்கள் ஆகிவிட்டன. இன்று வரை எந்தத் தகவலும் இல்லை. அனைத்து இடங்களுக்கும் தேடி அலைந்து விட்டேன். இது வரை எந்தப் பதிலும் இல்லை. எனக்கு ஒரு குழந்தை. அந்தக் குழந்தையை வளர்ப்பதற்காக எந்தவித உதவியும் இல்லாமல் ஒரு மில்லில் பணிபுரிந்து வருகின்றேன். எனது கணவரைக் கண்டு பிடித்து தாருங்கள் - என்று அந்தப் பெண் கோரிக்கை விடுத்தார். (ற-ஐ-21)

# பொருத்து வீட்டைப் பெறுவதற்கு வவுனியா மக்கள் முண்டியடிப்பு



வவுனியா, மார்ச் 30

மீள்குடியேற்ற அமைச்சால் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படும் 65 ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் வீடுகளைப் பெறுவதற்கு வவுனியா மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் மற்றும் தபால் நிலையங்களை முற்றுகையிட்ட பொது மக்கள் பசி, களைப்பு எனப் பார்க்காது செயலாளர்களின் கையொப்பத்துக்காகக் காத்திருந்துகையொப்பத்தைப் பெற்றுச் சென்றனர்.



கடந்த மூன்று நாள்களாக வவுனியா நகரப்பகுதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்று வருகின்றது.

மீள்குடியேற்ற அமைச்சால் 65 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கான விண்ணப்ப படிவங்கள் மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்த விண்ணப்பப் படிவங்கள் பொதுமக்களால் பூர்த்தி செய்யப்பட்டு பிரதேச செயலர் மற்றும் மாவட்ட அரச அதிபர் ஆகியோரிடம் கையொப்பம் பெறப்பட வேண்டும் என்றும் அந்த விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேச செயலாளரின் கையொப்பம் பெற வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான பொது மக்கள் வவுனியா பிரதேச செயலகத்தை முற்றுகை யிட்டிருந்தனர்.

பிரதேச செயலகம் மட்டுமல்லாது வவுனியா மாவட்டச் செயலகம், மற்றும் விண்ணப்பப் படிவத்தை அனுப்புவதற்காக தபால் நிலையங்கள் என்பவற்றிலும் வவுனியாவில் மக்கள் முண்டியடித்தனர்.

மீள் குடியேற்ற அமைச்சின் வீட்டுத்திட்டத்தை எப்படியாவது பெற்றுகொள்ள வேண்டும் என்ற நோக்குடன் நேற்றும், நேற்று முன்தினமும் வவுனியா நகரப் பகுதிகளில் மக்கள் கூட்டம் கூட்டமாகக் காணப்பட்டனர். மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள், மற்றும் தபால் நிலையங்களை முற்றுகையிட்டும் தங்களுடைய பதிவுகளை மேற்கொண்டனர்.

மக்களைக் கட்டுப்படுத்த முடியாத அரச உத்தியோகத்தர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. விண்ணப்பத் திகதி முடிவடையவுள்ளதால் மக்களின் நலன் கருதி கடமையைச் செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (ற-ஐ-21)

# அலைபேசி ஒளியில் சடலங்களை இனம் காணும் அவலமான நிலை

## மல்லாவி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறைக்கு மின் இணைப்பு இல்லாததால்

முல்லைத்தீவு, மார்ச் 30

மல்லாவி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறைக்கு மின் இணைப்பு இல்லாததால் அலைபேசிகளின் ஒளியிலேயே சடலங்களை இனம் காணும் நிலை காணப்படுகின்றது என்றும் இதனால் பல அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்றும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.



முல்லைத்தீவு மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கு மின்சாரம் உள்ள போதிலும், அதே வளாகத்தில் அமைந்துள்ள பிரேத அறைக் கட்டடம் சற்றுத் தொலைவிலேயே உள்ளது. பிரேத அறையானது போதிய அடிப்படை வசதிகள் இன்றியே காணப்படுகிறது.

பிரேத அறைக்கு இன்றுவரை மின்சார வசதிகள் எவையும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. அதனால் இரவு நேரங்களில் கொண்டு வரப்படும் சடலங்களைப் பராமரிப்பது மற்றும் இனம் காண்பதில் பெரும் நெருக்கடி நிலை காணப்படுகின்றது. இரவு நேரத்தில் கொண்டு வரப்படும் உடல்கள் அலைபேசிகளின் ஒளி மூலம் அல்லது வைத்தியசாலைப் பணியாளர்களின் ரோச் லைற்றின் ஒளி மூலமே இனம் காணப்படுகின்றது என மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் பிரேத அறையின் முகப்பு வாசல் கதவுக்கு நிரந்தரமான பூட்டும் போடப்படாமையால், கதவு கயிற்றால் கட்டப்படுகிறது. இதன் மூலம் ஏற்படக்கூடிய அசௌகரியங்களைப் போக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் ஆவன செய்ய முன்வரவேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அது தொடர்பில் மல்லாவி வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

குறித்த பிரேத அறைக்கு மின் இணைப்பு ஆரம்பத்தில் இருந்தது. இருப்பினும் அண்மைக் காலமாகவே தடைப்பட்டுள்ளது. வைத்தியசாலைக் கட்டத்தில் இருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் பிரேத அறை உள்ளது. அதனாலேயே அதனை உடன் சீர் செய்ய முடியாமல் போயுள்ளது.

வைத்தியசாலையில் தற்போது ஏனைய புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்து விட்டோம். அதன் ஒரு கட்டமாக இந்த பிரேத அறையும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது - என்று தெரிவித்தனர். (ற-ஐ-101.21)

# கஞ்சா வைத்திருந்த இருவருக்கு மூன்று மாதங்கள் கடூழியச் சிறை

## யாழ். நீதிவான் நீதிமன்று தீர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30

கஞ்சா வைத்திருந்த இருவருக்கு யாழ்.நீதிவான் நீதிமன்று 3 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

யாழ்.பிரதான வீதியில் பழைய சிறைச்சாலைக்கு அருகில் வைத்துக் கடந்த 14 ஆம் திகதி இளைஞர்கள் இருவரைப் பொலிஸார் சோதனையிட்டபோது அவர்களிடமிருந்து 6 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

அந்தக் குற்றச்சாட்டில் இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

நேற்றுமுன்தினம் அவர்கள் தொடர்பான வழக்கு நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போது குறித்த 2 சந்தேக நபர்களும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் மீதான குற்றச்சாட்டுப் பத்திரம் வாசித்துக் காட்டப்பட்ட போது இருவரும் தம் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

அதையடுத்து அவர்களுக்கு 3 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. அவர்கள் இருவரும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

உங்கள் வீடுகள், வியாபார ஸ்தாபனங்களில் உள்ள சீமெந்திலான கூரைகள், நீர்த் தொட்டிகள் அல்லது நீர்த்தாங்கிகள் ஆகியவற்றில் ஏற்படும் நீர்க் கசிவை நிரந்தரமாகத் தடுப்பதற்கும் மற்றும் கம்பி துருப்பிடிப்பதால் விழுந்துள்ள சீமெந்து படையை உத்தரவாதத்துடன் சீர் செய்துகொள்வதற்கும் நாடுங்கள்.

## Water Proofing

Waterproofing of - Roof Slabs / Terrace / Blind Walls / Water Tanks / Bathrooms / Sun Shed / Sump / Concrete Repairs / Hairline Crack Repairs...

**Sky Blue**
**Engineering Construction**
Head Office : Amuthasurabi, School Lane, Nelliady East, Karaveddy.
Email : skyblueconstruction53@gmail.com
Sky Blue with Finco Products
**0776589434 / 0778437750 / 021 226 3054**



## TRADE FINANCE & INVESTMENTS PLC
(Licensed by the Monetary Board Of the Central Bank of Sri Lanka Under the Finance Business Act No 42 of 2011)

### விற்பனைக்குண்டு

**மோட்டார் சைக்கிள்கள்**

1. TVS APACHE RTR - NPBCI-XXXX
2. TVS WEGO - NPBBX-XXXX
3. YAMAHA RAY - NPBDD-XXX
4. HERO GLAMOUR - NPBCI-XXXX
5. BAJAJ PLUSAR 135 - WPBAG-XXXX
6. BAJAJ DISCOVER 150 - NPBCD - XXXX
7. TVS SCOOTY STREAK - NPBAY - XXXX

**முச்சக்கர வண்டி (BAJAJ)**

1. NPQT - XXXX (AUTO RE 4 STROKE)

தொடர்புகளுக்கு : மேனகாந் - 077 0608074
077 3644409

TRADE FINANCE AND INVESTMENTS PLC
74, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 221 9997
021 222 1898



## சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள்/ உதவியாளர்கள் தேவை

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டங்களுக்கு **"இந்திரா குறூப்ஸ்"** நிறுவனத்துக்கு சந்தைப்படுத்தும் பிரிவுக்கு ஆர்வமும் துடிப்பும் உள்ள இளைஞர்கள், யுவதிகள் தேவை.

**தகைமை - க.பொ.த.(சா/த) குறைந்தது.**
**50,000/= மேல் சம்பாதிக்கும் வாய்ப்பு!**

தொடர்புகள்
**077 790 6383, 021 228 5052**
inthiragroups@gmail.com
138, இந்திரா குறூப்ஸ்,
இரத்தினபுரம், கிளிநொச்சி.



## வடமாகாண ஒப்பந்தகாரர்களுக்கான கருத்தரங்கு

இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்க வடமாகாண கிளையானது வடமாகாண நிர்மாணத்துறையைக் கட்டியெழுப்பும் நோக்குடன் பல செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளது. அதன் ஒரு அங்கமாக வடமாகாணத்திலுள்ள சகல ஒப்பந்த காரர்களுக்கான கருத்தரங்கு ஒன்றினை பின்வரும் தலைப்புக்களில் நடத்தவுள்ளது.

01. CIDA நிறுவனத்தில் பதிவு செய்வதற்கான புதிய வழிகாட்டியின் விளக்கம்.
02. நிர்மாண விருது (Construction Exceellence Award) இற்கான வழிகாட்டல்
03. NCASL-NBஇன் செயற்பாடுகளும் சங்கத்தினூடாக வேலைகளைப் பெற்றுக் கொள்ளுதலும்.

**இடம்**: மாவட்ட முகாமைத்துவ பயிற்சி நிலையம். பழைய பூங்கா வீதி,சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
**காலம்**: 03.04.2016
**நேரம்**: பி.ப 3.00- பி.ப 5.00

**அனுசரணை** : Nation Trust Bank

அனைவரையும் பங்கு பற்றிப் பயனடையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்



## 7ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 23.09.1959
மறைவு 18.03.2009

அமரர் திருமதி
**நாகராணி மாயவன்**

ஆண்டுகள் ஏழு ஓடி மறைந்தும்
ஆறவில்லை நெஞ்சம் அம்மா
நித்தம் நித்தம் எம் நினைவுகளில்
நீக்கமற இருந்தெம்மை
வழிகாட்டும் தெய்வம் அம்மா

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
அண்ணா சிலையடி,
கரணவாய்.



## நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



வையத்துள் வாழ்வாங்குவாழ்ந்து
எம்மை வாழவைத்த
அன்பு தெய்வம்

மலர்வு 17.10.1927
உதிர்வு 03.03.2016

அமரர் கந்தையா
**புண்ணியமூர்த்தி**

**ஓய்வுபெற்ற தபால் அதிபர் (சிரேஷ்ட மேற்பார்வை அலுவலகர்)**

கடந்த 03.03.2016 அன்று அமரத்துவம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் மறைவுச் செய்திகேட்டு எமது துயரில் நேரில் கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், அயலவர்கள், யாழ். பல்கலைக்கழக சமூகத்தினர், சக பணியாளர்கள் (Mount Breeze Hotel-Colombo, Sri Lanka Telecom-Vavuniya). நண்பர்கள் மற்றும் அனுதாபச் செய்திகளை தொலைபேசி, மின்னஞ்சல், முகப்புத்தகம் மூலம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள் பதாகைகள் மலர்வளையங்கள் மூலம் தங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியை, இரங்கல் உரை வழங்கியோருக்கும் மேலும் பல்வேறு வழிகளில் எமக்கு உதவிகள் பல புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு நாளை (31.03. 2016) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும், அத்துடன் 02.04. 2016 சனிக்கிழமை 10.00 மணியளவில் 92, கற்குழி வவுனியாவிலுள்ள அவரது ஏகப்புத்திரியின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

92, கற்குழி, வவுனியா.
024 2222 529, 071 8561 715
குடும்பத்தினர்.


## வெடிமருந்துகள் நேற்று அழிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30

நல்லூரில் நேற்றுமுன்தினம் கண்டறியப்பட்ட 3 பரல் வெடிமருந்துகள் நீதிமன்ற உத்தரவுக்கமைய நேற்று செம்மணியில் வைத்து அழிக்கப்பட்டன.

நல்லூர் யமுனா வீதியில் உள்ள தனியார் காணியொன்றில்கிணறு வெட்டமுற்பட்டபோது, குறித்த வெடிபொருள்கள் கண்டறியப்பட்டன. அவை தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றுக்கு அறிவித்தனர்.

இந்த நிலையில் யாழ்.நீதிவானின் அனுமதியுடன், மீட்கப்பட்ட 3 பரல் வெடிமருந்துகளும் செம்மணி வெளியில் வைத்து நேற்று அழிக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,101)


## வேலையாள் தேவை

கொடிகாமத்தில் இயங்கும் அச்சகம் ஒன்றிற்கு வேலை செய்வதற்கு கணினி மற்றும் புத்தகம் கட்டுநர் என்பவற்றுக்கு அனுபவம் உள்ளவர்கள், பழக விரும்புப வர்கள் உடனடியாகத் தேவை.

ஆண்,பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : 0777682131
0212050303



சிவமயம்
ஓம் ஸ்ரீராம் ஜெய்ராம் ஜெய் ஜெய் ராம்

# கண்ணீர் அஞ்சலி



தாய்மடி
29
03
1932

இறையடி
27
03
2016

# அமரர் ஸ்ரீ.சீவரத்தினம்

27.03.2016 ஞாயிற்றுக்கிழமை வைகுந்தமேவிய ஸ்ரீ.சீவரத்தினம் அவர்கள் எம் நல்லாசானாய் எம்மையெல்லாம் தன் இனிய இராம நாம ஸ்மரணத்தினாலும் பட்டர்பிரான் கோதை சொன்ன திருப்பாவை பாராயணத்தினாலும் ஆத்மிக வழியில் அரவணைத்துச் சென்று இப்பிறப்பின் பயனை உணரத்தூண்டிய அன்புத்தந்தையின் தூய மலர் பாதங்களை ஏக சிந்தையுடன் அனுவிரதமும் பூஜிக்கின்றோம்.

எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உந்தனோடு உற்றோமேயாவோம் உமக்கே யாம் ஆட்செய்வோம்

**இவ்வண்ணம் குரு சேவையில்**
**நிறைவேற்று உறுப்பினர்களும், பணியாளர்களும்**

ஸ்ரீ முன்னீஸ்வரம் தேவஸ்தானம் - சிலாபம்
ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம் - மட்டக்களப்பு
ஸ்ரீ பாலாம்பிகா தேவஸ்தானம் - திருநெல்வேலி
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் - கொட்டகலை
ஸ்ரீ நாகேஸ்வரர் தேவஸ்தானம் - புளியந்தீவு, அனலைத்தீவு
ஆனந்த சாகரம் - கொழும்பு 04
ஆனந்த சாகரம் - கொட்டகலை
ஆனந்த சாகரம் - யாழ்ப்பாணம்
சுவாமி சச்சிதானந்தா மருத்துவமனை - மைலம்பாவெளி
கருணாலயம் சிறுவர் இல்லம் - மைலம்பாவெளி
கருணாலயம் சிறுவர் இல்லம் - சுரந்தன், நீர்வேலி
கருணாலயம் இல்லம் - டூட்டன் கில்ஸ், கொட்டகலை

அன்னை கிருஷ்ணாபாய் மகளிர் இல்லாம் - திருநெல்வேலி
பரம்பூஜ்ய பப்பா ஆச்ரம் - இயக்கச்சி
ஸ்ரீ கிருஷ்ணா மாநகர் நலிந்தோர்க்கான இல்லங்கள் - இயக்கச்சி
ஸ்ரீ காமாக்ஷி நகர் நலிந்தோர்க்கான இல்லங்கள் - ஓதியமலை
ஸ்ரீ இராம்நகர் நலிந்தோருக்கான இல்லங்கள் - மைலம்பாவெளி
கொம்பனார் குளம் மந்தைகட்கான காப்பகம் - மைலம்பாவெளி
ஸ்ரீ காமாக்ஷி பீடம் - அனலைதீவு
அக்ஷதை சாத்வீக உணவகம் - யாழ்ப்பாணம்
அக்ஷதை சாத்வீக உணவகம் - மட்டக்களப்பு
Northshore College of Business & Technology - Colombo 15
வித்யாசாகரா தொழில் பயிற்சி நிறுவனம் - Colombo 15
Grand Nallur Hotel & Restaurant - Jaffna
(Under Construction)

**SWAMI RAMDAS FOUNDATION SRI LANKA**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவிசைவு காலாவதியான இலங்கையர் பலர் இந்தியாவில்

கொழும்பு, மார்ச் 30
நுழைவிசைவு (விசா) காலாவதியான பின்னரும், இந்தியாவில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களின் பட்டியலில், இலங்கையர்கள் இரண்டாமிடத்தில் உள்ளனர் என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சு வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
2014 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி, முறையான நுழைவிசைவு பெற்றுக் கொண்டு இந்தியாவுக்குள் நுழைந்த 28 ஆயிரத்து 500 வெளிநாட்டவர்கள், நுழை விசைவு காலாவதியான பின்னரும், இந்தியாவில் தங்கியுள்ளனர் என்று மத்திய உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.
இவ்வாறு மேலதிக காலம் இந்தியாவில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களில் பாகிஸ்தானியர்களே முதலிடத்தில் உள்ளனர். அவ்விதம் தங்கியுள்ள பாகிஸ்தானியர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 335 ஆகும். இரண்டாமிடத்தில் இலங்கையர்கள் உள்ளனர். 3 ஆயிரத்து 857 இலங்கையர்கள் இவ்வாறு தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
நுழைவிசைவு காலாவதியான வெளிநாட்டவர்கள் அதிகம் தங்கியுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முதல் இடத்தில் உள்ளது. இங்கு 20 ஆயிரத்து 539 வெளிநாட்டவர்கள் நுழை விசைவு காலாவதியான பின்னரும் தங்கியுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 72 வீதமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-5)

உ
சிவமயம்
நந்திக்கொடி வணக்கம்

**வதை செய்யப்பட்ட ஆவினங்களுக்கான ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதைத் தொடர்ந்து மதியபோசனமும் இடம்பெறும்**



**இடம்:**
**திருக்கேதீஸ்வர ஆலய முன்றில்**
**காலம்:**
**03.04.2016 ஞாயிறு காலை 8.00 மணியிலிருந்து**

சிவதர்மத்துக்கு முரணாக ஆலயத்துக்குரிய சிசுக்களுடன் கூடிய பசுக்களும் ஏனைய எருதுகளும் ஆலய நிர்வாகத்தால் விற்கப்பட்டு வதை செய்யப்பட்ட ஆவினங்களின் ஆத்ம சாந்திக்காக ஒன்று கூடிப் பிரார்த்திப்போம்.

**சிவனடியார்கள் திரண்டுவருவீர்....!**

(அ22279)(1.8)

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் திறந்த கேள்விகோரல்

மருதனார்மடம் சந்தைத் தொகுதியில் சபையினால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கீழ்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்ட கடைகளை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகைத்தொகைக்கு அமைவாக வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக்கூடிய ஒரே தடவையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக வலிகாமம் தெற்கு பிரதேச சபையினால் கோரப்படுகின்றது.

| தொடர் இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (NBT,VAT வரி தவிர்ந்த தொகை) |
|---|---|---|
| 01 | 01 | 1800000.00 |
| 02 | 13 | 1800000.00 |
| 03 | 01A | 1200000.00 |
| 04 | 02A | 1200000.00 |
| 05 | 08A | 1200000.00 |
| 06 | 09A | 1200000.00 |
| 07 | 11A | 1200000.00 |

இடம்: வலிதெற்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், சுன்னாகம்.
காலம்: 06.04.2016 புதன்கிழமை.
நேரம்: காலை 10.00 மணி

நிபந்தனைகள்
1. திறந்த கேள்வி மூலம் கேள்விதாரர்கள் கடைக்கான ஆகக்குறைந்த தொகையிலிருந்து கேட்கலாம்.
2. கேள்விதாரர்கள் தங்களை மீளப்பெறமுடியாத பணம் ரூபா 1000.00 ஐ செலுத்தி பதிவுசெய்யவேண்டும் .
3. ஆகக்கூடிய தொகை கோரும் கேள்விதாரருக்கே வழங்கப்படும்.
4. சகல நிபந்தனைகளும் பிரதேசசபைகள் சட்டத்திற்கு உட்பட்டதாகும்.

தி.சுதர்சன்
செயலாளர்
வலிதெற்கு பிரதேசசபை
சுன்னாகம்.

விற்பனைக்கும் வாடகைக்கும்
சணல் யமுனா பாரி கிடாய், மறி ஆடு என்பன விற்பனைக்கும் Luxury வீடு வாடகைக்கும் உண்டு. (78547) (14,18,28)
தொடர்பு: 077 687 4839

விற்பனைக்கு
100 அடி பந்தல் மற்றும் மணவறைசெற், அலங்காரப் பொருள்கள் என்பன உடன் விற்பனைக்கு உண்டு.
சு. தெய்வலிங்கம்
077 8087 430

Personal Classes
5 மாதங்களில் இலக்கணப்பிழையின்றி ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி வகுப்புக்கள் சங்கானை, யாழ்ப்பாணம்.
077 675 1649

விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்
- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல் நிரந்தரமாக பற்களைப்
- பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## புத்தளம் பிரதேச சபையில் பெண்கள் குடுமிச்சண்டை

கொழும்பு, மார்ச் 30
புத்தளம் பிரதேச சபையின் உதவிப் பெண் உத்தியோகத்தரொருவர், சக உதவிப் பெண் உத்தியோகத்தர்களான இரு பெண்களால் குடுமியில் பிடித்துத் தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
தனிப்பட்ட ரீதியாக ஏற்பட்ட மனக் கசப்புகளே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. இந்தத் தாக்குதல் சம்பவம், புத்தளம் பிரதேச சபையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது. தரக்குறைவான வார்த்தைகளால் பேசியது மட்டுமன்றி, பெண் உத்தியோகத்தரை குடுமியில் பிடித்து வைத்துக்கொண்டு இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு இலக்கான உதவிப் பெண் உத்தியோகத்தர், முந்தல் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார். (ற-ஐ-5)

## ஆக்கப் பொருள்களின் காட்சிப்படுத்தல் நிகழ்வு

தென்மராட்சிப் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்திப் பிரிவினரால் வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கொடிகாமத்தில் நடத்தப்பட்ட தொழிற்றிறன் பயிற்சிகளின் பயிலுநர்களால் உருவாக்கப்பட்ட ஆக்கப் பொருள்களின் காட்சிப்படுத்தல் நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடிகாமம் சந்தியில் உள்ள நிலையத்தில் நடைபெறவுள்ளது. பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலர் ப.சதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு காட்சிக் கூடத்தை திறந்து வைக்கவுள்ளார். பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றி பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)

## வலி.கிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - அச்சுவேலி

**கூறுவிலைகோரல்**

மேற்படி சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பின்வரும் வேலைகள் மேற்கொள்ளவேண்டி இருப்பதால் தகைமையுடையோர் **06.04.2016** ஆம் திகதி முற்பகல் **10** மணிக்கு மேற்படி எரிபொருள் நிலையத்தில் வேலை விவரங்களினை நேரில் பார்வையிட்ட பின் தங்கள் கூறுவிலைகளை மூடி ஒட்டிய தபாலுறையில் **தலைவர் வலி.கிழக்கு (வ.ப) ப.நோ.கூ.சங்கம் அச்சுவேலி** என்னும் முகவரிக்கு **15.04.2016** ஆம் திகதி அன்று நண்பகல் **12** மணிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**வேலை விவரம்**
1. மண்ணெண்ணெய் பம்புக்குக் கூடாரம் அமைத்தல்
2. அலுமினியப் பொத்துக்களாலான இறாக்கை அமைத்தல்
3. மேல்மாடிக்குச் செல்லும் பாதைக்குப் பாதுகாப்புக் கைபிடி அமைத்தல்

தி.தாமரைச்செல்வன்,
தலைவர், வலி.கிழக்கு வட பகுதி ப.நோ.கூ.சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அபிவிருத்திகளைப் பின்தள்ளி புத்தர் சிலை அமைப்பது அவசியமா?

## வடக்கு மாகாண உறுப்பினர் விந்தன் கேள்வி

யாழ்ப்பாணம், மார்ச் 30
போரால் பாதிக்கப்பட்ட வடக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஏராளம் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கின்றன. அவற்றையெல்லாம் விடுத்து, வடக்கில் தமிழில் பிரித் ஓதி வெசாக் கொண்டாடுவதிலும், பௌத்தர்களே இல்லாத நயினாதீவில் புத்தர் சிலை அமைப்பதிலும் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே அவசரம் காட்டுவது ஏன்?- இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் கேள்வி எழுப்பியுள்ளார்.

நயினாதீவில் புத்தர் சிலை அமைக்கப்படுவதை நியாயப்படுத்தியும், வடக்கில் தென்பகுதி மக்களையும் அழைத்து வந்து தமிழில் பிரித் ஓதி வெசாக் கொண்டாடப்படுவது தொடர்பிலும் வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் கூரே ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் விந்தன் கனகரத்தினம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நயினாதீவு இந்துக்களின் பிரசித்தி பெற்ற பிரதேசம். நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம் இந்துக்களின் முக்கிய ஆலயங்களில் ஒன்றாகும். நயினாதீவில் 90 சதவீதமான இந்து மக்கள் வாழ்கின்றனர். கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் சொற்ப அளவில் வாழ்கின்றனர். இலங்கைக்கு புத்தபிரான் வந்த போது நயினாதீவில் தங்கிச் சென்றார் என்று தெரிவிக்கப்பட்டு முன்னைய ஆட்சியாளர்களால் அங்கு ஒரு விகாரை நிறுவப்பட்டது.

இந்த விகாரைக்கு தென்னிலங்கையிலிருந்த யாத்திரிகர்கள் வந்து செல்கின்றனர். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் விகாரைக்கும், நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்துக்கும் இடைப்பட்ட கடல் பிரதேசத்தில் 75 அடியில் புத்தர் சிலை வைப்பதுதான் பிரச்சினைக்குரியது. பௌத்த மக்களே இல்லாத இடத்தில் ஏன் இவ்வாறு பிரமாண்டமான சிலை அமைக்க வேண்டும்.

30 வருடகாலப் போரினால் வீடுகள், காணிகள் இல்லாது ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இன்றுவரை உறவினர் வீடுகளிலும், நண்பர்கள் வீடுகளிலும் அகதி முகாம்களிலும் வசித்து வருகின்றார்கள். அவர்கள் மீது கவனம் செலுத்தி வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தும் உதவி தேவைப்படுபவர்கள், தொழில் வாய்ப்பைத் தேடுபவர்களுக்கு உதவிகளை வழங்கியும் வடக்கு மாகாண அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

அதற்கு மாறாக பௌத்த மதத்தை திணித்து பேரினவாதச் செயற்பாட்டை மேலோங்கச் செய்ய ஈடுபடுவோர் எவராக இருந்தாலும் வடக்குமாகாண சபையின் எதிர்ப்பையும் வடக்கு மக்களின் கடும் அதிருப்தியையும் எதிர்கொள்ள நேரிடும். நாம் பௌத்தத்துக்கு ஒருபோதும் எதிரானவர்கள் அல்ல. அரச படைகளால் நூறுக்கும் மேற்பட்ட இந்து ஆலயங்கள், தேவாலயங்கள் அழிக்கப்பட்டன. அவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயங்களில் பல இன்று வரை புனரமைப்பு இன்றி இருக்கின்ற நிலையில் நயினாதீவில் புத்தர்சிலை அமைக்கப்படவுள்ளமை வேதனையான விடயம் - என்றுள்ளது.(ற-ஐ-5-ரி)


### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி ஜெகஜோதி இராஜமகேந்திரன்
அவர்களின் அன்புத் தாயாரும் எமது கல்லூரியில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றிய அதிபர் திரு. இ.இராஜமகேந்திரன் அவர்களின் மாமியாருமாகிய
திருமதி நடராசா இராசமணி அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.



நலன்புரி கழகம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

### நினைவஞ்சலி

06 ஆம் ஆண்டு | முதலாம் ஆண்டு





அமரர் தம்பு
மார்க்கண்டு
மண்ணில் 25.03.1931
விண்ணில் 18.06.2010

அமரர் மார்க்கண்டு
செல்லம்மா
மண்ணில் 10.02.1936
விண்ணில் 12.03.2015

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் அன்பின் திருவுருவாய் எமக்கு நல்கல்வியையும் நற்பண்புகளையும் ஊட்டி, வழிகாட்டியாய் வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து ஓர் ஆண்டு மற்றும் ஆறு ஆண்டுகள் சென்றாலும் நாம் இவ்வுலகை விட்டுப் பிரியும்வரை உங்கள் நினைவுகள் எம்மைவிட்டகலாது. உங்கள் இருவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல செல்வச்சந்நிதி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

A9கண்டிவீதி,
தபாற்கட்டைச் சந்தி,
அரியாலை.

குடும்பத்தினர்

### கண்ணீர் அஞ்சலி

எமது யாழ் பிரதேச செயலகத்தில் J/69 கிராம சேவகராக கடமையாற்றும் திரு. எஸ். யூலன் அவர்களின் தாயார்
**செபஸ்தியாம்பிள்ளை றீற்றாம்மா**
அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
நலன்புரிசங்கம் ,பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்

### கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின் ஆசிரியர்
திருமதி ஜஸ்ரீனா கஜநேசன் அவர்களின் அன்புத் தந்தையார்
**அந்தோனிப்பிள்ளை கிளமென்ற**
அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
பாடசாலை சமூகத்தினர்
யா/ வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம். வேலணை.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திருமதி
## இராசமணி கந்தையா



தோற்றம் 05.06.1924
மறைவு 11.04.2015

திதி: ஸப்தமி (30.03.2016)

"ஊனும் உயிரும் தந்து
தரணியில் தலை நிமிர்ந்து வாழவைத்த
எங்கள் உயிரினும் மேலான அன்புத் தெய்வமே!
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எம் இதயங்களிலெல்லாம்
என்றென்றும் தோன்றாத் துணையாய்
நிலைத்திருக்கும்"
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கும் அன்புள்ளங்கள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்.

தகவல்:
க.யோகேஸ்வரராஜா (மகன்)
குமரகோட்டம், கோண்டாவில்.

(070364) (13.18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்பு உற்பத்தி அச்செழுவில் தாராளம்; நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 30

அச்செழுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி தற்போது தாராளமாக இடம்பெற்று வருகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் கிராம சேவையாளரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூலசிட்டி, கொலனிப் பகுதியை மையமாக வைத்தே கசிப்பு உற்பத்தி அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் அந்தப் பகுதியில் உள்ள குடும்பங்களில் வீட்டு வன்முறைகள் இடம்பெறுவதுடன், கலாசாரத்துக்குப் பிறழ்வான விடயங்களும் இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாகப் பாடசாலை செல்லும் மாணவர்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுகின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. அச்சுவேலிப் பொலிஸார் தற்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுபவர்களைக் கைது செய்வதில் அசமந்தமாகச் செயற்படுகின்றனர் என்றும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

ஆரம்பத்தில் அதிகளவான கசிப்பு உற்பத்தியாளர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஆனால் இந்த வருட ஆரம்பத்தில் இருந்து கசிப்பு உற்பத்தியாளர்களைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துவது குறைவடைந்து செல்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரையும் இணைத்து, கசிப்பு உற்பத்தியாளர்களைக் கைது செய்ய வேண்டும் என்றும் கூட்டத்தின் போது எடுத்துக் கூறப்பட்டது.

ஆனாலும் இந்த விடயம் பொது மக்களினால் பிரஸ்தாபிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது அச்சுவேலிப் பொலிஸார் எந்தவித கருத்தையும் கூறாமல் மௌனமாக இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஐ-4,107)

## குற்றம் புரிந்த 5 பேருக்கு அபராதத்துடன் சீர்திருத்தம்

பல்வேறு குற்றங்கள்புரிந்த 5பேருக்கு அபராதத்துடன் சமுதாய சீர்திருத்தமும் வழங்குமாறு பருத்தித்துறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

எந்தவித பத்திரமும் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய 17 வயதுடைய சிறுவனுக்கு 18 ஆயிரம் ரூபா அபராதத்துடன், 50 மணித்தியால சமுதாய சீர்திருத்தம், மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு 11 ஆயிரத்து 500 ரூபா அபராதத்துடன், 100 மணித்தியால சீர்திருத்தமும், கரவெட்டியில் கள் விற்பனையில் ஈடுபட்ட 40 வயதுடைய குற்றவாளிக்கு 3 ஆயிரம் ரூபா அபராதமும், பொது இடத்தில் மதுபானம் அருந்தி அநாகரிகமாக நடந்துகொண்ட ஒருவருக்கு 100 மணித்தியால சமுதாயம் சார் சீர்திருத்தமும் விதிக்கப்பட்டது.

(ற-ஐ-4,107)


# நீங்கா நினைவுகளுடன் இரண்டு ஆண்டுகள்

அன்னை மடியில்
22 . 11 . 1944



ஆண்டவன் அணைப்பில்
23 . 03 . 2014

அமரர் **மார்க்கண்டு செல்வராசா**

(கட்டடத் திணைக்கள உத்தியோகத்தர்)

திதி: ஸப்தமி - 30.03.2016

தேனான வாழ்க்கையுடன் வந்த தெவிட்டாத
இன்பங்கள் வீணாகிப் போய்விட்டதுவே!
வற்றாப் பாசமழை பொழிந்து பற்றுடனே
வளமுடன் வளர்த்தீர்கள்!
சந்திர கிரகணமாய் உயிரில் சங்கடம் தரும்
உம் ஈராண்டு மறைவுதனை
விழி நீர் கொண்டு தொடர்கதையாய்ப் படிக்கின்றோம்
எழுத்தாளனான தந்தை இறந்துவிட்டதையும் மறந்து!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்...

கருவேலடி லேன்,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

(70322)(1L18)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**கணபதிப்பிள்ளை செல்வராசா**



பிறப்பு
1938.08.14

இறப்பு
2014.03.23

திதி: 30.03.2016

எமது தந்தையாரான அமரர் கணபதிப்பிள்ளை செல்வராசா இறைபதம் அடைந்து இரண்டாண்டுகள் கடந்த பின்னரும் அவரது இறப்பை நினைத்து துயருறும் நாம் அவரது ஆத்மசாந்திக்காக பிரார்த்தித்து நிற்கின்றோம்.

ஐயனார் கோயிலடி,
மல்லாகம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும்



அமரர்
**கோபாலபிள்ளை வேலாயுதபிள்ளை**

(யாழ்.இந்துக்கல்லூரி ஓய்வுநிலை லிகிதர்)

தோற்றம்
26.09.1918

மறைவு
29.02.2016

கடந்த 29.02.2016 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் கோபாலபிள்ளை வேலாயுதபிள்ளை அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (30.03.2016) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத் தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும். மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு துயர்பகிர்ந்தும் பல வழிகளில் பல்வேறு உதவிகள் புரிந்தும் எமது கவலைகளைப் பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரசடிவீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

ஓம் ஸ்ரீராம் ஜெய்ராம் ஜெய் ஜெய் ராம்

# இதய நெகிழ்வுடன் கண்ணீர் அஞ்சலி



புனித மண்ணில்
29.03.1932

இறை பாதத்தில்
27.03.2016

## அமரர் அப்பாத்துரை சீவரெட்ணம்

நல்லூரான் பாதம் தினம் பணிந்து யோகர் சுவாமிகள் பாதச்சுவடுகளைப் பற்றி நல்லூர் தேரடி வில்வமரத்தடியில் ஆன்மீக கலந்துரையாடல், இந்துமத விழிப்புணர்வுகளுக்கு உரமூட்டி நெறிப்படுத்தி, கருணாலயம் சிறுவர் இல்லங்களின் தோன்றலுக்கு வழிகோலி, உருவாக்கி சிறார்களின் நலன்களுக்கு வித்திட்டு சுவாமி இராமதாஸர் நிறுவன ஆக்கத்திற்கு படிக்கல்லாய் நின்று உருவாக்கியும் திருநெல்வேலி வாலை அம்பாள் ஆலய திருப்பணிகளுக்கு முன்னின்று பணியாற்றி இறைபதம் அடைந்த அமரர் அப்பாத்துரை சீவரெட்ணம் அவர்களின் இழப்பு ஈடு செய்யமுடியாத தொன்றாகும்.

அன்னாரது இழப்பால் வாடும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு இவரது ஆத்ம சாந்திக்கு எல்லோரும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

பரந்தாம் அலுவலகம் - நல்லூர்
கருணாலயம் சிறுவர் இல்லம் - நீர்வேலி
கருணாலயம் [illegible]
பணியாளர்கள் - [illegible]
பணியாளர்கள் - அனலைதீவு

சுவாமி இராமதாஸர் நிறுவனம்
யாழ் மாவட்டம் 29.03.2016

# ஆறாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் **வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை**



தோற்றம்
21.11.1930

மறைவு
06.04.2010

திதி: அபரபக்க ஸப்தமி (புதன்)
30.03.2016

ஆண்டுகள் ஆறு சென்றாலும்
ஆறவில்லை ஐயா! எம்துயர்
அருகில் இருந்து அன்புமொழிபேசி
அரவணைத்து வாழ்ந்தீரே
அறிவிடையில் வந்தானே காலனவன்
எம் உறவைப் பிரிப்பதற்கு
எத்தனை காலங்கள் சென்றாலும் எம்
உள்ளத்திலிருந்து உங்களைப் பிரிக்க முடியுமோ.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டிநிற்கின்றோம்.

[illegible]ணி தெற்கு,
[illegible]டி.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பிராய் சந்தியில் இரவில் கூடும் இளைஞர்களால் அமைதிக்குக் கேடு

## வாள்வெட்டு, அடிதடியால் மக்கள் பீதி

யாழ்ப்பாணம், மார்ச் 30
உரும்பிராய் சந்தியை மையமாகக் கொண்டு இரவில் ஒன்று கூடும் இளைஞர்கள் வாள்வெட்டு, மற்றும் அடிதடியில் ஈடு படுகின்றனர். அவர்களின் எல்லை மீறிய செயற்பாடுகள் அண்மைக் காலமாக அதிகரித்துக் காணப்படுகின்றன. கோப்பாய் பொலிஸாருக்கு இதுகுறித்துத் தெரியப் படுத்தியும் உரிய நேரத்தில் வருவதில்லை என்றும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

உரும்பிராய் சந்தியில் நிரந்தரமாக பொலிஸ் காவலரண் ஒன்றை அமைத்து பொலிஸாரைக் கடமையில் ஈடுபடுத்த வேண்டும் என உரும்பிராய் பகுதி மக்கள் கோப்பாய் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சிவில் பிரதிநிதிகளுக்கு இடையிலான கலந்துரையாடலின்போது பொலிஸ் காவலரணின் தேவை குறித்து ஆராயப்பட்டது.

குறிப்பாக இரவு 7 மணியில் இருந்து 9 மணி வரை வீண் பொழுது போக்கும் இளைஞர்கள் மது போதையில் அநாகரிமாக நடந்து கொள்வதுடன், வீதியால் செல்லும் பெண்களுக்கு அசௌகரியம் ஏற்படும் வகையிலும் நடந்து கொள்கின்றனர் என அதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பில் அந்தப் பகுதி கிராம சேவையாளருக்குப்

> இரவு 7 மணியில் இருந்து 9 மணி வரை வீண் பொழுது போக்கும் இளைஞர்கள் மது போதையில் அநாகரிமாக நடந்து கொள்வதுடன், வீதியால் செல்லும் பெண்களுக்கு அசௌகரியம் ஏற்படும் வகையிலும் நடந்து கொள்கின்றனர்.

பொதுமக்கள் பலமுறை தெரிவித்தும், பொலிஸாருக்கு கிராம சேவையாளர் மூலமாக பல முறை அறிவுறுத்தல் வழங்கினாலும் பொலிஸார் அங்கு வருவதில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

குழு மோதல், வாள் வெட்டுப்போன்ற சம்பவங்கள் இடம் பெற்று சந்தேக நபர்கள் தலைமறைவான பின்னரே, பொலிஸார் வருகின்றனர் என பகிரங்கமாகப் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

அத்துடன் பலாலி பிரதான வீதியை அண்மித்த திலீபன் வீதியில் மது பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது என்றும் கூறப்பட்டது. வீதியின் இருமருங்கிலும் நின்று இரவு வேளையில் ஒன்று கூடும் இளஞர்கள் மற்றும் மதுப் பிரியர்கள் ஆகியோர் பொதுமக்கள் சென்று வருகிறார்கள் என்பதனைக்கூடக் கண்டு கொள்ளாமல் மது அருந்துகின்றனர். அவற்றைத் தட்டிக்கேட்பதற்கு பொதுமக்கள் அஞ்சும் நிலை காணப்படுகிறது.

எனவே உரும்பிராய்ப் பகுதியை மையமாகக் கொண்டு இடம் பெறும் சகலவித குற்றச்செயல்களையும் கட்டுப்படுத்த பொலிஸ் காவலரண் ஒன்றை அமைக்குமாறு அந்தப் பகுதி மக்கள் ஒருமித்துக் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதாக கூட்டத்துக்கு வந்திருந்த கோப்பாய்ப் பொலிஸார் உறுதியளித்தனர். (ற-ஐ-4,107)

# புதிய அலுவலர்கள் நியமனத்துக்கு அரச கரும மொழித் தேர்ச்சி தேவை

யாழ்ப்பாணம் மார்ச் 30
கடந்த வருடம் திறந்த அடிப்படையில் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் 111க்கு ஆட்சேர்க்கப்பட்ட புதிய அலுவலர்கள், நியமனம் ஏற்றுக் கொள்ளப்பட்ட திகதியிலிருந்து ஐந்து வருட காலத்துக்குள் இரண்டாம் அரச கரும மொழித் தேர்ச்சியை அடைந்திருக்க வேண்டும்.

- இவ்வாறு அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் கே.வீ.பீ.எம். ஜே.கமகே சுற்றறிக்கை மூலம் திணைக்களத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

2015.09.08 மற்றும் 2015 11.18 ஆகிய திகதிகளில் நியமனக் கடிதங்களின் 9 ஆம் பிரிவில் அரச முகாமைத்துவ சுற்றறிக்கைக்கு அமைய பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

அரச முகாமைத்துவ உதவியாளருக்கான நியமனம் ஏற்றுக் கொள்ளப்பட்ட திகதி தொடக்கம், ஐந்து வருடங்கள் முடிவடையும் முன்னர் அரசகொள்கைகளுக்கு அமைவாக இரண்டாம் அரச கரும மொழித் தேர்ச்சியை அடைந் துள்ளீர்கள் என்று தாங்கள் நிரூபிக்க வேண்டும்.

இந்த நியமனத்துக்கான தகைமைகளை சிங்கள மொழியில் பூர்த்தி செய்திருப்பின், தங்களது இரண்டாம் அரச கருமமொழியாக அமைவது தமிழ் மொழியாகும். இதேபோன்று நியமனத்துக்கான தகைமைகளை தமிழ்மொழியில் பூர்த்தி செய்திருப்பின் இரண்டாம் அரச கருமமொழியாக அமைவது சிங்கள மொழியாகும்.

இந்த நியமனத்துக்கான தகைமைகளை ஆங்கில மொழியில் பூர்த்தி செய்திருப்பின், அரச கருமமொழியாக சிங்களம் அல்லது தமிழ் ஆகிய இரு மொழிகளில் ஒரு மொழியில் தேர்ச்சியை, நன்னடத்தைக் காலத்துக்குள் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அதன் பின்னர் நியமனம் ஏற்றுக் கொள்ளப்பட்ட தினத்தில் இருந்து 5 ஆண்டுகள் முடிவடையும் முன்னர் அடுத்த அரச கருமமொழி யில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)



வல்வெட்டித்துறை, நீச்சல் வீரர் முருகுப்பிள்ளை நவரத்தினசாமியின் 62 ஆவது நினைவு தினம் கடந்த 25 ஆம் திகதி தொண்டமானாறு பாலத்தின் கீழ் அமைந்துள்ள அவரது நினைவுத் தூபியில் மலர் அஞ்சலி செலுத்தி நினைவு கூரப்பட்டது. அதில் அவரது புதல்வர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (ற-ஐ-107)

# வவுனியா மாவட்ட பட்டதாரிகள் சங்கம் புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கத் திட்டம்

வவுனியா,மார்ச் 30
வவுனியா மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தலைவர் எம். ஆனந்தராஜா, அகில இலங்கை மக்கள் முன்னணி என்ற புதிய கட்சி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என்று தெரிவித்துள்ளார். அமைச்சர் ரிசாத் பதியுதீன் தேர்தல் காலங்களில் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றாததாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது-

வவுனியா மாவட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்காக எமது பட்டதாரிகள் சங்கத்தை இணைத்து இப் புதிய அரசியல் கட்சியை உருவாக்கத் திட்டமிட்டுள்ளேன். மிக விரைவில் ஊடகவியலாளர்களை அழைத்து எமது கட்சி தொடர்பாக கலந்துரையாடலைமேற்கொள்ளவுள்ளேன். எமது அரசியல் கட்சியினுடைய பெயர் தொடர்பாக கல்வியியலாளர்களுடன் கலந்துரையாடி அகில இலங்கை மக்கள் முன்னணிஎன்றுபெயர்இட்டுள்ளேன்.

வவுனியா மாவட்டத்தில் கடந்த பல தேர்தல்களின்போது வவுனியா மாவட்ட பட்டதாரிகள் சங்கம், தமது முழுமையான ஆதரவை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கைத்தொழில் வணிகத்துறை அமைச்சருமான ரிசாத் பதியுதீனுடன் இணைந்து அவர்களின் கட்சிக்கு ஆதரவாகச் செயற்பட்டது.

இதன்போது அமைச்சர் கிராமங்களுடைய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக பல வாக்குறுதிகளைத் தந்திருந்தார். ஆனால் அவை எதுவும் இன்று வரை நிறைவேற்றப்பட்டவில்லை.

அமைச்சருக்காக வவுனியா மாவட்ட கிராமங்கள் தோறும் களத்தில் நின்று பணியாற்றியவர்கள் நாங்கள். எங்களின் மூலம் சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் அமைச்சருக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டன. ஆனால் இப்போது அமைச்சருடைய நடவடிக்கைகள் எங்களைப் பாதிக்கும் வகையில் உள்ளன.

அதனாலேயே பட்டதாரிகள் சங்கம் புதிய கட்சியை ஆரம்பிக்க முன்வந்துள்ளது. இந்தப் புதிய கட்சியை இன்னும் 10 வருடங்களின் பின் ஆரம்பிப்பதாக திட்டமிட்டிருந்தோம். எங்களிடம் நிதி வசதிகள் இல்லாதது தான் அதற்கான காரணம்.

ஆனால்தற்போது வெளிநாட்டுத் தொடர்புகள் அதிகமாகப் பேணப்பட்டுள்ளன. எனவே கட்சியை ஆரம்பிப்பதற்கு எந்தத் தடைகளும் இல்லை. கட்சியினு டைய பதிவு நடவடிக்கைகள் இடம் பெற்று ஊடகவியலாளர்கள் மத்தியில் கட்சிபற்றிய தகவல்கள் வெளியிடப்படும்.- என்றார்.

பட்டதாரிகள் சங்கத் தலைவர் புதிய கட்சியை ஆரம்பிப்பது தொடர்பாக அமைச்சர் ரிசாத் பதியுதீனின் கருத்தை அறிவதற்கு அவருடன் தொடர்பு கொள்ள பல முறை முயற்சித்த போதும் அமைச்சருடைய தொலைபேசி துண்டிக்கப்பட்டிருந்தது. (ற-ஐ-21)

## திருட்டு மின்சாரம் பெற்ற மூவர் கைது

யாழ்ப்பாணம். மார்ச் 30
சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியடி, அச்சுவேலி, பருத்தித்துறை பொலிஸ் பகுதிகளில் நேற்று முன்தினம் காலை தொடக்கம் இரவு வரை மேற்கொள்ளப்பட்ட திடீர் நடவடிக்கையின் போதே குறித்த மூவரும் கைது செய்யப்பட்டனர். கொழும்பில் இருந்து வந்த மின்சார சபையின் புலனாய்வு அதிகாரிகளும், பொலிஸாரும் இணைந்து இவர்களைக் கைது செய்துள்ளனர்.

அச்செழு பகுதியில் ஒருவரும், துன்னாலை வடக்கு அல்லையம்படி பகுதி மற்றும் நெல்லியடி நகரப்பகுதியில் தலா ஒருவருமாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூவருக்கும் எதிராக மல்லாகம், பருத்தித்துறை நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-4,107)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய ஆலோசகர்கள் புதிய சேவையில் உள்ளீர்ப்பு

## தமிழ் சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 30
ஆசிரிய ஆலோசகர்களைப் புதிய சேவையில் உள்ளீர்ப்புச் செய்வது பெரும்பாலும் தமிழ் சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் நடைமுறைக்கு வரும். இது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்து விவாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.- இவ்வாறு அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் எஸ்.ஜி.பிள்யு. சமரக்கோன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வடமாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றும் போது தெரிவித்ததாவது-
இந்தச் சேவை உள்ளீர்ப்பின் பின்னர் எமது சங்கம் ஏனைய சேவைத் துறையிலுள்ளவர்களுக்கு வழங்கப்படுவது போன்ற வரப்பிரசாதங்களைப் பெறுவதற்கும் தொடர்ந்து போராடும். அந்த வரப்பிரசாதங்கள் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள் அல்லாத ஆசிரிய ஆலோசகர்களுக்கு அவை வழங்கப்படமாட்டாது.

இலங்கையிலுள்ள அனைத்து ஆசிரிய ஆலோசகர்களும் எமது சங்கத்தில் இணைந்து கொண்டு எமது போராட்டங்களில் பங்கேற்பதன் மூலமே பல வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இலங்கையில் கொண்டுவரப்பட்டுள்ள எந்தக் கல்விச் சீர்திருத்தத்திலும் எமது விடயம் கல்விமான்களால் கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. தேசிய கல்விக் கொள்கை உருவாக்கத்தில் ஆசிரிய ஆலோசகர்களின் பங்களிப்பு எதிர்காலத்தில் இடம்பெற வேண்டும்.

வைத்தியத் துறையினரதும், நீதித் துறையினரதும் சங்கங்களில் அந்தத் துறை சார்ந்த அனைவரும் இணைந்துள்ளனர். அவ்வாறே எமது சங்கத்திலும் ஆசிரிய ஆலோசகர்கள் அனைவரும் இணைய வேண்டும். அப்போது தான் எமது சங்கம் தேசிய ரீதியாக தொழில்சார் சங்கமாக, பலமான சங்கமாக இயங்க முடியும்.

எமது போராட்டம் 1998 ஆம் ஆண்டிலிருந்து இடம்பெற்று வருகிறது. இதுவரை ஆறு கல்வியமைச்சர்களுடன் எமது சேவை உள்ளீர்ப்புத் தொடர்பில் பேசியுள்ளோம். 6 ஆவது கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவாசமே எமது சேவையுள்ளீர்ப்புத் தொடர்பில் சரியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். சித்திரைப் புது வருடத்துக்கு முன்னர் இதனைச் செய்து தருவதாக உறுதியளித்துள்ளார்.

எனவே ஆசிரிய ஆலோசகர்கள் எவரும் சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்திலிருந்து விலகிச் செல்லாது, பிற கடமைகளைப் புறக்கணித்து ஆசிரியர்கள், மாணவர்களின் கற்பித்தல், கற்றலுக்கு மட்டுமே ஆலோசனை வழங்கி வழிகாட்டும்படி கேட்டுக் கொள்கிறேன்.- என்றார்.

(ற-ஜ-4)

## ஆமையை விளையாடக் கொடுத்த தந்தைக்கு சமுதாயச் சீர்திருத்தம்

கடற்கரையில் ஊர்ந்து சென்ற சிறிய ஆமை ஒன்றைப் பிடித்து தனது பிள்ளைகளுக்கு விளையாடக் கொடுத்த குடும்பஸ்தருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது நீதிமன்று. செலுத்தத் தவறின் 6 மாதங்கள் கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

கற்கோவளம் புனித நகரைச் சேர்ந்த தந்தை ஒருவர் குறித்த ஆமையைப் பிடித்து, தனது பிள்ளைகளுக்கு விளையாடக்கொடுத்துள்ளார். பொலிஸார் அதனைக் கண்டு அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர்.

அதன்போதே குறித்த அபராதம் விதிக்கப்பட்டது. எனினும் அவரால் அபராதத் தொகையைச் செலுத்த முடிந்திருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. அவரது குடும்ப நிலை மற்றும் பொருளாதார நிலையைக் கவனத்தில் எடுத்த சமுதாய சீர்திருத்தஅதிகாரி, சந்தேகநபரின் நிலை தொடர்பில் நீதிவானுக்கு எடுத்துக் கூறினார்.

வழக்கை மீளவிசாரணைக்கு உட்படுத்திய நீதிவான் அபராதத்துக்குப்பதிலாக 100 மணித்தியாலங்கள் சமுதாயம் சார் சீர்திருத்தப் பணியில் அவரை ஈடுபடுத்துமாறு பணித்தார் .(ற-ஜ-4,107)

## முல்லைத்தீவில் விரைவில் மத்தியஸ்தர் சபை இயங்கும்

### நீதியமைச்சின் அதிகாரி ஜோன் பிலிப் தெரிவிப்பு

முல்லைத்தீவு,மார்ச் 30
முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்துப்பிரதேச செயலக பிரிவுகளிலும் , காணிப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான மத்தியஸ்தர் சபைகள் விரைவில் அமைக்கப்படவுள்ளன என்று நீதியமைச்சின் அதிகாரியான ஜோன் பிலிப் தெரிவித்துள்ளார்.

அண்மையில் முல்லைத்தீவுக்கு வருகை தந்த குறித்த அதிகாரி, கரைதுறைப்பற்று பிரதேசத்தில் தற்போது இயங்கும் மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கான நிதிப் பிணக்குகள் தொடர்பான மூன்று நாள் பயிற்சியில் கலந்து கொண்டபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-
யாழ்.மாவட்டத்தில் முதற்கட்டமாகவும், அடுத்த கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்திலும் காணிப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான மத்தியஸ்தர் சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அடுத்த கட்டமாக தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் காணிப் பிணக்குகளை தீர்ப்பதற்கான மத்தியஸ்தர் சபைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண் டுள்ளோம்.

இந்த மத்தியஸ்தர் சபை உருவாக்கத்தின்போது விண்ணப்பங்கள், பிரதேச செயலக ரீதியாகக் கோரப்பட்டு நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டு அதன்பின்னர் அவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படும். பரீட்சையில் சித்தியடைபவர்களே உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.- என்றார். (ற-ஜ-102)

## சிறுவர்களுக்கான சித்திரப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 30
சொலியஸ் மென்டிஸ் பவுண்டேசனால் சிறுவர்களுக்கான சித்திரப் போட்டிகளுக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த சித்திரப் போட்டியில் அரச தேசிய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும். ஐந்து பிரிவுகளாக இடம்பெறும் இந்தப் போட்டியின் ஆரம்பப் பிரிவில் - முன்பள்ளி, முதலாம், இரண்டாம் வகுப்பு மாணவர்களும், ஆரம்ப இடை நிலைப் பிரிவில் - 3,4,5 ஆம் வகுப்பு மாணவர்களும், கனிஷ்ட பிரிவில் - 6,7,8 ஆம் வகுப்பு மாணவர்களும், சிரேஷ்ட பிரிவில் - 9,10,11 ஆம் வகுப்பு மாணவர்களும், சிரேஷ்ட உயர்நிலைப் பிரிவில் - 12,13ஆம் வகுப்பு மாணவர்களும் பங்குபற்ற முடியும்.

சித்திரத்தின் பின் பகுதியில் ஆங்கிலத்தில் மாணவரின் பெயர், சித்திரத்தின் தலைப்பு, வகுப்பு, பாடசாலை, தனிப்பட்ட முகவரி, பொறுப்பானவரின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம், சித்திர ஆசிரியரின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு பாடசாலை அதிபரால் உறுதிப் படுத்தி அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஒருவர் ஒரு சித்திரத்தை மட்டுமே அனுப்பிவைக்க முடியும். இந்த விதிமுறைகளுக்கு அமைவாக சித்திரங்களை வரைந்து எதிர்வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் சொலியஸ் மென்டிஸ் பவுண்டேசன், கிரகம அழகியல் பயிற்சிக்கல்லூரி, பிலிமத்தலாவ எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-ரி5)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்பகுதி நடைபாதை வியாபாரிகளால் வியாபாரத்தில் கடுமையான பாதிப்புக்கள்

## நடவடிக்கை எடுக்குமாறு வர்த்தகர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 30
சித்திரை வருடப் பிறப்பைக் குறிவைத்து குவியும் தென்பகுதி நடைபாதை வியாபாரிகளால் தாம் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளோம் என்று நிரந்த வியாபாரிகள் தெரிவித்துள்ள னர்.

ஒவ்வொரு பண்டிகைக் காலத்தின் போதும் இவ்வாறான நிலைமை ஏற்படுகின்றது என்றும், இதனைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு சுட் டிக்காட்டியும் இது வரை நிரந்தரத் தீர்வு காணப்படவில்லை என்றும் வர்த்தகர்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தென்னிலங்கை வியாபாரிகள் இங்கு எந்த வியாபார உரிமமும் பெறாமல் விற்பனை நடவடிக் கைகளில் ஈடுபடுகின்றனர். வீதியோரங்களில் மக்கள் கூடும் சந்திகளில் வாகனங்களில் தமது பொருள்களைக் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். சில மணி நேரங்களில் எந்தச் செலவு மின்றி அவர்கள் இலாபம் பெற்றுக்கொள்கின்றனர்.

ஆனால், நாம் நிரந்தர கட்டத்தில், வாடகை செலுத்தி அதனை விட வியாபார உரிமம் பெற்று வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடு கின்றோம். இவ்வாறு வீதி ஓரங் களில் வைத்து வியாபாரம் செய் யும் நடவடிக்கைகளால் நாம் பெரிதும் பாதிக்கப்படுகின்றோம். கடந்த காலங்களை விட தற்போது, வெளி மாகாண வியாபாரிகளின் ஆதிக்கம் இங்கு அதிகரித்து விட் டது.

ஒவ்வொரு பண்டிகைக் காலத் தின் போதும் இதனைக் கட்டுப்படுத் துமாறு நாம் கோரிக்கை விடுத் தாலும், எந்தவொரு நடவடிக் கைகளும் - நிரந்தரத் தீர்வும் எடுக் கப்படுவதாகத் தெரியவில்லை. வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சும், வடக்கு மாகாண வர்த்தக வாணிப அமைச்சும் இணைந்து இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் அவர்கள் இது தொடர்பில் நாம் பேசும்போது நடவடிக்கை எடுப் பதாகத் தெரிவித்தாலும், தொடர் நடவடிக்கை எடுத்து இதற்கு நிரந்தரத் தீர்வு காண்கின்றார்கள் இல்லை.

பண்டிகைக் காலங்களில் எமது மக் கள் அதிகளவில் உடைகள் மற் றும் வீட்டு உபயோகப் பொருள் களையே கொள்வனவு செய் வார்கள். இவற்றை தென்னி லங்கை வியாபாரிகள் மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்கின்றனர். அதனால் மக்கள் அவர்களை நாடுகின்றனர். நேரடியாக எமது வர்த்தகம் இதனால் பாதிக்கப்படுகின்றது-

> **பண்டிகைக் காலங்களில் எமது மக்கள் அதிகள வில் உடைகள் மற்றும் வீட்டு உபயோகப் பொருள் களையே கொள்வனவு செய் வார்கள். இவற்றை தென்னி லங்கை வியாபாரிகள் மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்கின்றனர். அதனால் மக்கள் அவர்களை நாடுகின்றனர். நேர டியாக எமது வர்த்தகம் இத னால் பாதிக்கப்படுகின்றது**

என்று தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர் இ.ஜெயசேகரம் தெரிவித்தா வது:-

தென்னிலங்கை வியாபாரிகள், இந்திய வியாபாரிகளைக் கட்டுப் படுத்தும் நடவடிக்கையை வடக்கு மாகாண சபை உடனடியாக மேற் கொள்ள வேண்டும்.

இதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு உரி யவர்களுக்கு கடிதங்கள் மூலமாகப் பலதட வைகள் அறிவித்தும் நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படவில்லை. வருடா வருடம் இவர்களின் சந் தைகள் அதிகரித்துச் செல்வது எம்முடைய வியாபாரிகளை நாமே புறக்கணிப்பது போன் றதாகும்.

அண்மைக் காலமாக யாழ்.நகர் பகுதியில் இவர்களின் செயற் பாடுகள் குறைந் துள்ளன. ஆனால், நகருக்கு வெளிப்பகுதி யில்தான் தற்போது அதிகளவு அங்காடி களைக் காணமுடி கின்றது. இது ஆரோக் கியமா னது அல்ல.

எனவே, தமது பிரி வுக்கு உட்பட்ட பகுதி களில்அமைக்கப்படும் இது போன்ற அங்காடிகள் தொடர்பாக உரிய பிரதேச சபை அதிகாரிகள் கவனத்துடன் செயற்பட வேண்டும். வடக்கு மாகாண சபையினர் இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொ.குகநாத னைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, இதற்கான அதிகாரம் தமக்கு இல்லை என்றும் குறிப் பிட்டார். (ற-ஐ-5-ரி5)

### பொதுக்கூட்டங்கள்

முல்லைத்தீவு,மார்ச் 30
முள்ளியவளை வித்தி யானந்தாக் கல்லூரி யின் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாட சாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் பொதுக் கூட்டங்கள் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளன என்று சங்கங்களின் செயலாளர்கள் அறிவித் துள்ளனர்.

அந்த வகையில் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் நாளை வியா ழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கும், பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் அன் றைய தினமே மாலை 4 மணிக்கும் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

இந்தக் கூட்டங்களில் பல முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளதுடன், நடப்பாண்டுக்கான புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெற வுள்ளது என்றும் தெரி வித்த சங்கங்களின் செயலாளர்கள் , கல்லூரி யின் பழைய மாணவர் கள், பெற்றோர்கள் நலன் விரும்பிகள் அனை வரையும் தவறாது உரிய கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளனர். (ற-ஐ-102)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன நல்லிணக்கம் என்பது மனதில் உருவாக வேண்டும்

## அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 30
நாட்டில் இன நல்லிணக்கம் என்பது வானத்திலிருந்து வரும் விண்கல் அல்ல. பாதாளத் திலிருந்து வெளிவரும் அற்புதப் பொருளும் அல்ல. மக்கள் மனதில் உருவாக வேண்டிய, உருவாக்கப்பட வேண்டிய ஒரு செயற்பாடாகும். இதற்குப் பல்வேறு நிபந்தனைகள் உள் ளன. - இவ்வாறு அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வில்லியம் மண் டபத்தில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற 'இலங்கையில் சமாதான சகவாழ்வுக்கான அணுகு முறைகள்' பற்றிய தேசிய கருத்தரங்கில் பிரதம விருந்தி னராகக் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

இனங்களுக்கு மத்தியில், மதங்களுக்கு மத்தியில் சமத்து வம் இருக்கும்போதே சக வாழ்வை ஏற்படுத்த முடியும். சகவாழ்வு இல்லாத இடத்தில் சமத்துவத்தைப் பற்றி பேசினால் ஆட்சிசெய்பவருக்கும் அடிமைக் கும் இடையிலான உறவாகவே அது கருதப்படும்.

நாங்கள் கடந்த காலத்தில் விட்ட தவறுகளை அலசி ஆராய்ந்து தவறுகளைத் திருத்திக் கொள் ளும் மனப்பக்குவத்தைப் பெற் றுக்கொள்ள வேண்டும். இந்த நாட்டிலுள்ள அனைவரும் தவறு களை விட்டுள்ளோம். வர லாற்றை நாங்கள் திரும்பிப் பார்ப் பது அந்த நிலைக்குப் போவ தற்கு அல்ல. அந்த இருண்ட பகுதிக் குள் மீண்டும் செல்லக்கூடாது என்பதற்காகவே ஆகும்.



இன்று இனவாதம் இல்லை. மதவாதம் இல்லை. தீவிரவாதம் இல்லை. பிரிவினைவாதம் இல் லை. அவற்றை இந்த அரசு முடிவுக்குக் கொண்டு வந்துள் ளது. இன்று எவராவது இன வாதம், மதவாதம் பேசுவார் களேயானால் அடுத்தவருக் குரிய மதம், மொழி, கலாசாரங் களை அவமானப்படுத்துவார் களேயானால் அடுத்தவருக்குரிய காணிகளை அபகரிப்பார் களேயானால் அவர்களே இந்த நாட்டின் பிரிவினைவாதிகளாகக் கருதப்படுவார்கள்.

ஒரே நாட்டுக்குள் நாங்கள் அதி காரத்தைப் பகிரவேண்டும். அதி காரங்கள் பகிரப்படுவது தொடர் பில் நாங்கள் பகிரங்கமாகப் பேசுவதில்லை. அதிகாரப் பகிர்வு என்பது வெறுமனே தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு மட்டு மல்ல. அது ஒரு ஜனநாயக நட வடிக்கையுமாகும்.

கொழும்பில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள், அனைத்து மாகா ணங்களுக்கும், மாவட்டங் களுக்கும், கிராமங்களுக்கும் கொண்டுசெல்லப்பட வேண்டும். யாழ்ப்பாணத்துக்கும், மட் டக்களப்புக்கும் எவ்வாறு அதி காரங்கள் தேவைப்படுகின்றதோ அதே போன்று மொனராகலைக் கும், அம்பாந்தோட்டைக்கும் அதி காரங்கள் தேவைப்படுகின்றன.

இந்த நாட்டில் தனித்தமிழீழத்தை உருவாக்கும் செயற்பாட்டை முன்னெடுக்கக்கூடாது. தனி நாட்டை நோக்கி தமிழர்கள் செல் வார்களானால், அது தமிழர் களுக்குப் பெரும் அழிவைத் தரும் என்ற உண்மையை அனை வரும் ஏற்றுக்கொள்ள வேண் டும். இலக்கை அடைவதற்காக நாங்கள் ஆயுதம் ஏந்தும் கொள் கையைக் கைவிட வேண்டும். அது அழிவையே ஏற்படுத்தும்.

தனிநாடு உருவாகாமல், ஒரே நாட்டுக்குள் தமிழர்கள் வாழ வேண்டும் என்றால், தமிழர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்தக் கூடாது என்றால், அதிகாரங்கள் பகிர்ந் தளிக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில் தனித் தமிழீழத்தை நிராகரித்துக் கலந் துரையாடவும், ஆயுதப் போராட் டத்தை விமர்சனம் செய்து கலந்துரையாடவும் ஒரு தயக்கம் இருக்கின்றது. சிங்கள மக்கள் மத்தியில் சென்று அதி காரத்தைப் பகிர்வது தொடர் பாகவும், இந்த நாடு பன்மை த்துவமிக்க நாடு என்று சொல்வதி லும் ஒரு தயக்கம் இருக்கின்றது.

தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால், அதி காரப் பகிர்வு வழங்கப்பட வேண் டும். அதிகாரப்பகிர்வு தொடர்பில் இலங்கையிலுள்ள பெரிய கட்சி கள் குழப்பமில்லாமல் தெளி வான முறையில் தமிழ் மக்களை நோக்கி அறிவிக்க வேண்டும். அதன் மூலமாகவே தமிழ் மக்களின் மனங்களை அவர் களால் வெல்ல முடியும் - என்றார். (ரு-ஐ-5)




## பாதாளக் கும்பல்களைச் சேர்ந்த 8 பேர் இரு வாரங்களில் கைது

கொழும்பு, மார்ச் 30
நாட்டில் பாதாள உலகக் குழுக் கள் மீண்டும் தலைவிரித்தாட ஆரம்பித்துள்ள நிலையில், கொழும்பு நகரிலும் அதன் அயல் பிரதேசங்களிலும் இயங்கிவந்த அதி தீவிர பாதாளக் கும்பல்களைச் சேர்ந்த எட்டுப் பேர் கடந்த இரு வாரங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பாதாள உலகக் குழுக்களை ஒடுக்குவதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர இது தொடர் பில் தெரிவித்துள்ளதாவது:-

நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்த நிலையில், மறைந்து வாழ்ந்து கொண் டிருந்த பிரபல பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்த இருவர் இந்தச் சோதனை நடவடிக்கையின்போது பிடி பட்டுள்ளனர். பாதாள உலகக் குழுக்களை ஒடுக்க அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத் துள்ளது. ஒளிந்து வாழும் மற் றும் கொழும்பை விட்டுத் தப்பிச் செல்லும் குழுக்களை பிடிக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இந்த நடவடிக்கைகளில் இராணுவம், பொலிஸ், விசேட அதிரடிப்படை மற்றும் அரசின் உயர்மட்ட உளவுப் பிரிவு ஆகியவை இணைந்து கூட்டாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

கொழும்பில் இன்னமும் நான்கு அதி தீவிர பாதாள உலகக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன- என்றார். (ரு-ஐ-5)

## ஒரு பில்லியன் பெறுமதியான தரமற்றமருந்துகள் இறக்குமதி

### சுனில் ஹந்துன்நெத்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 30
கடந்த ஐந்து வருடங்களில் ஒரு பில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதிகொண்ட தரமற்றமருந்துப்பொருள்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அரச நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்ற குழுவான கோப் இதனைக் கண்டறிந் துள்ளது என்று அந்தக் குழு வின் தலைவர் சுனில் ஹந் துன்நெத்தி தெரிவித் துள்ளார்.

குறித்த பொருள்கள் தரம் குறைந்த பொருள்கள் என்று இலங்கை மருந்தாக்கல் திணைக்களம் இறக்குமதி செய்யப்பட்ட பின்னரே தெரிந்து கொண்டமையா னது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் இதில் தொடர்புடைய அதிகாரிகளை கோப் குழு அழைத்து விசா ரணை செய்யும் என்றும் ஹந்துன்நெத்தி தெரிவித் துள்ளார். (ரு-ஐ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஊழல்களில் ஈடுபட்டவர்கள் மீது மென்மையாக நடக்கின்றது அரசு

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி சாடுகிறது

கொழும்பு, மார்ச் 30

இலாபத்தில் இயங்கிய சிறிலங்கா விமான சேவை தற்போது 128 பில்லியன் ரூபா நட்டத்தில் இயங்குகின்றது என்று அரசு அறிவித்துள்ளது. இது ஆச்சரியப்படத்தக்க செய்தியல்ல. ஆனால், இந்த நட்டத்துக்கு பொறுப்பானவர்கள் தொடர்பில்அரசுஇன்னமும்மென்மையாக நடந்து கொள்வதே பெரும் ஆச்சரியமாக இருக்கிறது.- இவ்வாறு நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளர் எம்.எம்.அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எமிரேட்ஸ் விமான சேவையின் முகாமைத்துவத்தின் கீழ் இயங்கிக் கொண்டிருந்த சிறிலங்கா விமான சேவைக்கு 2008 ஆம் ஆண்டுகிடைத்த இலாபத்தொகை 9 பில்லியன் ரூபா ஆகும். அதே சிறிலங்கா விமான சேவைக்கு கடந்த 7 வருடங்களில் ஏற்பட்ட மொத்த நட்டத் தொகை 128 பில்லியன்களாகும்.

சிறிலங்கா விமான சேவை எமிரேட்ஸ்உடன்கொண்டிருந்த ஒப்பந்தத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச திடீரென முறித்துக் கொண்டமையே இந்த நட்டத்தின் தொடக்கப் புள்ளியாகும்.

2008 ஆம் ஆண்டு எமது வரிப் பணத்தில் மகிந்தவும் அவரது சகாக்களும் லண்டனுக்கான பயணமொன்றுக்கு சென்றிருந்தனர். அவர்களை முன்பதிவுகள் எதுவுமின்றி ஒரே விமானத்தில் இலங்கைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று மகிந்த ராஜபக்ச கட்டளை இட்டார்.

குறித்த விமானத்தில் பயணிப்பதற்காக ஏற்கனவே பதிவு செய்து கட்டணம் செலுத்திய பயணிகளை அப்புறப்படுத்த முடியாது என்று எமிரேட்ஸ் கூறியது. அதனால் கோபமடைந்த மகிந்த, சிறி லங்கா விமான சேவை 9 பில்லியன் ரூபா இலாபமீட்டுவதற்குத் தலைமை தாங்கிய அனுபவமிக்க பிரதம நிர்வாகியான பீற்றர் ஹில் என்பவரின் இலங்கைக்கான நுழைவு விசைவை (விசா) இரத்துச் செய்து அவரை நாட்டை விட்டு அனுப்பினார்.

அதனைத் தொடர்ந்து எமிரேட்ஸ் தனக்கிருந்த பங்குகளை மகிந்த அரசிடம் திருப்பிக் கொடுத்து விட்டு வெளியேறி விட்டது.

இந்த வாய்ப்பையும் தனது குடும்பத்துக்காகப் பயன்படுத்திக் கொண்ட மகிந்த, உடனடியாக சிறிலங்கா விமான சேவை நிறுவனத்தின் தலைவராக தனது மைத்துனரான நிஸாந்த விக்கிரமசிங்கவை நியமித்தார். அத்தோடு விமான சேவை நிர்வாகத்தில் எந்தவொரு முன்னனுபவமும் இல்லாதவரான கபிலசந்திரசேனவை அதன் தலைமை நிர்வாகியாக நியமித்தார்.

அன்றிலிருந்து, நாட்டின் பெருமைக்குரிய விமான சேவையாக இருந்த சிறிலங்கா விமான சேவை மகிந்த அரச குடும்பத்தின் தனிப்பட்ட சொத்தாகவும், தமக்கு விருப்பமானவர்களுக்கெல்லாம் பல லட்சம் சம்பளத்தில் தொழில் வழங்கும் நிறுவனமாகவும் மாறியது.

அது மட்டுமன்றி ஓட்டோ வாகனமொன்றைக் கொள்வனவு செய்வதுபோல விமானங்களைக் கொள்வனவு செய்ய மகிந்த அரசு முனைந்தது. சந்தை விலையிலும் பார்க்க பல நூறு மில்லியன் கூடுதல் விலைகொடுத்து ஏ-330 மற்றும் ஏ-350ஆகிய விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

இந்தப் பின்னணியில்தான், இன்று 128 பில்லியன் என்கின்ற மீளமுடியாத கடன் சுமையில் சிறிலங்கா விமானசேவை உள்ளது. சிறிலங்கா விமான சேவையை தொடர்வதென்றால் அடுத்த 6 மாதங்களுக்கு மாத்திரம் திறைசேரி 40 பில்லியன் கொடுத்துதவ வேண்டியிருக்கும். இந்த விமான சேவையை எவருக்கும் விற்கவும் முடியாமல், தொடர்ந்து நடத்தவும் முடியாமல் இந்த அரசு திணறிக் கொண்டிருக் கிறது.

சிறிலங்கா விமான சேவையில் நடந்த ஊழல் மோசடிகள் மற்றும் துஷ்பிரயோகங்களை ஆராய்ந்து அதற்குப் பொறுப்பானவர்களை அடையாளம் காண்பதற்கான தனிநபர் ஆணைக்குழு ஒன்று கடந்த ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து அமைக்கப்பட்டது. ஜனாதிபதி சட்டத்தரணியான ஜே.சி.வெலியமுனவைக் கொண்டு அமைக்கப்பட்ட இந்த ஆணைக்குழு விரிவான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையொன்றையும் சமர்ப்பித்திருந்தது. இதனை நாசம் செய்தவர்கள் யார்? யாரென்ற விவரங்களை இந்த அறிக்கை பல மாதங்களுக்கு முன்னரே அம் பலப்படுத்தியிருந்தது. ஆனா லும், அவர்களில் ஒருவரை யேனும் ஆரம்ப விசாரணைக் குக்கூட ஏன் அழைக்கவில்லை என்பதுவே பேரதிர்ச்சியான விடயமாகும்.

அரசின் இந்த மென்மையான போக்கு தற்போதைய அரசில் அங்கம் வகிப்பவர்களையும் கூட ஊழல்களில் ஈடுபடுவதற்கு ஊக்கப்படுத்தும் என்பதையும்இந்த அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்- என்றார். (ந-ஜ-5-40)




## கடல் மட்ட உயர்வை ஆராய்வதற்கு வருகின்றார் கரீபியன் பேராசிரியர்

கொழும்பு,மார்ச் 30

இந்து சமுத்திரத்தின் கடல்நீர் மட்டம் உயர்வடைந்து செல்வதன் காரணமாக, இலங்கையின் கரையோரக் கிராமங்கள் எதிர்நோக்கியுள்ள அச்சுறுத்தல்களைக் குறைத்துக் கொள்வதற்குரிய தீர்வுகளைக் கண்டறிவதற்கு மத்திய கரீபியன் சமுத்திர நிறுவனத்தின் தலைவியான கெறீ மென்பிரீனோ இலங்கைக்கு வரவுள்ளார்.

குறித்த பேராசிரியர் 1990ஆம் ஆண்டிலிருந்து 20 ஆண்டுகள் கரீபியன் சமுத்திரத்திலுள்ள கேமன் தீவின் கடல் நீர் மட்டம் உயர்வடைந்து செல்வது சம்பந்தமான தனது ஆய்வுகளை மேற்கொண்டு முடித்துவிட்டு, தற்போது அவர் தனது ஆய்வுகளுக்கு இலங்கையைத்தேர்தெடுத்துள்ளார்.

இந்த முறை இலங்கையை மையப்படுத்தி கெறீ மென்பிரீனோவால் மேற்கொள்ளப்படும் ஆய்வின் போது, கரையில் மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்பில் வாழும் உயிரினங்கள், கடல்நீரின் மட்டம் உயர்வடைந்து செல்வதைத் தடுத்தல் என்பவை தொடர்பான தற்கால மற்றும் எதிர்கால நிலவரங்கள் குறித்துக்கவனம் செலுத்தவுள்ளார். (ந-ஜ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தேசிய நல்லிணக்கம் என்பது வெறும் கோசம் மட்டுமா...?

அன்புதான் இன்ப ஊற்று; அன்புதான் உலகஜோதி; அன்புதான் உலகமகா சக்தி. மேற்போந்தவை, புத்தர் பெருமானின் போதனைகளின் அடிநாதம்; அதிசிறப்புப் பெற்றவை. எந்த மதத்தினரும் உள்ளார்ந்து ஏற்று, இலகுவாகச் செயற்படுத்தத் தக்கவை. அவற்றை பௌத்த கோட்பாடுகளில் அதிசிறந்தவை என்றும் கொள்ளலாம்.

எமது நாட்டில் வாழும் சகல மக்கள் மத்தியிலும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு, நல்லாட்சி அரசு பல்வேறு பயன் தரு செயற்பாடுகளை முன்னெடுக்க உள்ளதாக, அவ்வப்போதும், அடிக்கடியும் அரசியல் தலைவர்கள், மிகக் குறிப்பாக ஆட்சிப் பீடத்தைச் சேர்ந்தவர்கள் கருத்து வெளியிட்டு வருகிறார்கள்.

அந்த வரிசையில்,--

தென்பகுதி வாழ் மக்களை வடக்குக்கு அழைத்து வந்து, பௌத்த உபதேசங்களை தமிழ் மொழியில் ஓதி, வெசாக் கொண்டாட்டத்தை அனுஷ்டிப்பதன் மூலம், நல்லிணக்கத்தை இலகுவில் உருவாக்க முடியும் என்ற புதிய கருத்தியலை (theory) வடக்கின் ஆளுநர் வெளிப்படுத்தி உள்ளார்!

வடக்கின் புதிய ஆளுநரின் வருகைக்குப் பின்னர், நல்லிணக்கத்துக்கான புதுப்புதுச் சிந்தனைகள்--கருத்துக்கள்--முகிழ்த்து வருகின்றன.

நல்லிணக்கம், நாட்டின் முன்னேற்றத்துக்கும், அதனூடாக மக்களின் சகவாழ்வுக்கு உந்து சக்தியாகவும் விளங்கும். பல நாடுகளின் வளர்ச்சிக்கும், மக்களின் எழுச்சிக்கும் அதுவே பக்கபலமாக அமைந்தது.

நல்லிணக்கத்தை அடைய வேண்டும் என்ற கறுவற்ற பெருந்தன்மை, அந்தந்த நாடுகளில் உற்பவிக்க வேண்டுமெனில்--

முதலில் அதனை அரசுகள்-ஆட்சியாளர்கள்-மனமோம்பி வரித்துக் கொள்ள வேண்டும். நல்லிண்க்கத்துக்கான படிமுறைகள் பக்கச் சார்பற்ற முறையில் மேலெழுதலும் இன்றியமையாதது ஆகும்.

அதனூடாகவே, உண்மையான நல்லிணக்கத்துக்கு வழி திறக்கும். அதற்கான உதாரணங்கள் பலவற்றை ஏனைய நாடுகளிடம் இருந்து கற்றுக் கொள்ளலாம்; பெற்றுக் கொள்ளலாம்.

சிறந்த முன்னுதாரணங்களில் மேல் வரிசையில் நிற்பது தென்ஆபிரிக்காவும் அதன் தலைவர் நெல்சன் மண்டேலாவும் ஆவார்.

ஜெனிவா, மனித உரிமைகள் சபையிலும், அதன் பிந்திய கூட்டத் தொடரிலும், தேசிய நல்லிணக்கத்துக்கான பரிந்துரைகள் விதந்து உரைக்கப்பட்டிருப்பதையும் இங்கு ஊன்றித் தொட்டுக் காட்டலாம்.

ஆனால், எங்கள் நாட்டு அரசு, அவற்றை ஆழ்ந்து நோக்கும் போக்கைக் காணவோ, கேட்கவோ இயலவில்லை. அவற்றை மெல்ல நழுவவிட்டு விட்டு, புதுப்புதுக் கோசங்களை கையில் எடுத்து, உறுக்கிக் கத்தும் காட்சியே, வடக்கின் ஆளுநரின் கருத்துக்களில் இருந்து விரிகின்றன!

# மனித உரிமை சபைக்கு அளித்த வாக்குறுதி மீறப்படுகின்றதா?

## ஜனாதிபதியின் கருத்தினால் எழுந்துள்ள நிலைமை

ஈஸ்வரன் ரட்ணம்
கட்டுரையிலிருந்து
ரெங்கன்

போரின்போது இடம் பெற்றதாகக் கருதப்படும் குற்றங்கள் குறித்த விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகள் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பதற்கு தாம் ஒருபோதும் இணக்கம் தெரிவிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம் மீண்டும் பகிரங்கமாக அறிவித்திருப்பதானது கடுமையான கண்டனங்களைத் தோற்றுவித்துள்ளது. கடந்த வருடம் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஓர் அம்சமாக வெளிநாட்டு நீதிபதிகளும் விசாரணையில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து, இவ்வாறான கண்டனங்கள் முன்னெழுந்துள்ளன. கடந்த வார இறுதியில் சட்டக்கல்லூரி நிகழ்வொன்றில் உரை நிகழ்த்தும்போது, ஜனாதிபதி தமக்கு உள்நாட்டு நீதித்துறையில் நம்பிக்கை இருக்கிறதென்றும், இப்பொழுது தேவைப்படுவதெல்லாம் அதனைப் பலப்படுத்துவதும் அது சுயாதீனமாகச் செயற்படுவதை உறுதி செய்வதுமே என்று கூறியிருந்தார். போர்தொடர்பான மனித உரிமை மீறல்கள் பற்றிய உள்ளக விசாரணைகள் நம்பகத் தன்மையுடன் இடம்பெற வேண்டுமானால் வெளிநாட்டு நீதிபதிகளையும் இலங்கை அரசு வரவழைக்க வேண்டும் என்று சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் வலியுறுத்தி வருகின்றன.

ஜனாதிபதி அந்தக் கூட்டத்தில் மேலும் கூறுகையில்; மனித உரிமை மீறல்கள் பற்றிய புலனாய்வுகளின் பின்னர் நீதி விசாரணை செயற்பாடு ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டிய அவசியம் இருக்குமானால், வெளிநாட்டு நீதிபதிகள் வந்து அதில் சம்பந்தப்பட வேண்டும் என்று கூறப்படுவதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்றார். இதேவிதமான ஒரு கருத்தை ஜனாதிபதி சில வாரங்களுக்கு முன்னர் சர்வதேச ஊடகங்களுக்குக் கூறியிருந்தமை மனித உரிமைகள் நிறுவனங்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்ததுடன் ஜனாதிபதி குறித்த தமது கருத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தன.

### உள்ளக நீதித்துறையின் தோல்வியே காரணம்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் கொண்டு வரப்படுவதற்கு நெருக்குதல் கொடுத்து வந்த மனித உரிமைகள் கண்காணிப்பு நிறுவனம், உள்ளக விசாரணையில் சர்வதேச பங்கு, பணியும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளதுடன், வெளிநாட்டு நீதிபதிகள் இணைக்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் அழுத்திக் கூறியுள்ளது.

மனித உரிமை கண்காணிப்பு நிறுவனத்தின் (HRW) ஆசியாவுக்கான பணிப்பாளர் பிராட் அடாம்ஸ் கூறுகையில்; மனித உரிமைகள் சபையின் தீர்மானம், வெளிநாட்டு நீதிபதிகளையும் வழக்குத் தொடுநர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறியமைக்கு உள்ளக நீதிபதிகளும் வழக்குத் தொடுநர்களும் போர்க்குற்றங்கள் தொடர்பான செயற்பாடுகளில் தோல்வி கண்டமைக்கான வரலாறுகள் இருப்பதே காரணம். பொறுப்புக் கூறும் பொறிமுறை விடயத்தில் வெளிநாட்டுப் பங்களிப்பை ஜனாதிபதியானவர் மீண்டும் மீண்டும் மறுத்துக் கருத்து வெளியிட்டு வருவதானது, மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு மேற்கொண்டிருந்த அதிகாரபூர்வ நிலைப்பாட்டுக்கு முரண்பாடாகக் காணப்படுகின்றது. குறிப்பாக அவர்களின் நேர்மைத் தன்மையும் நம்பகத் தன்மையும் கேள்விக்குறியாக்கியுள்ளன-என்றார். ஜனாதிபதித் தேர்தலில் அரசுக்கு ஆதரவு வழங்கியிருந்த த.தே.கூட்டமைப்பும் கூட ஜனாதிபதி எடுத்துள்ள நிலைப்பாடு குறித்து தெரிவித்துள்ளது.

### தீர்மானத்தின் முக்கிய அம்சம்

வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்புத் தொடர்பாக மனித உரிமைகள் சபை தீர்மானத்தின் பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது.

வன்செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனித உரிமை சட்ட மீறல்கள் தொடர்பான சகல குற்றச்சாட்டுக்களையும் புலனாய்வு செய்வதற்காக சிறப்பு ஆலோசகர் ஒருவருடன் நீதித்துறை பொறிமுறையொன்றை நியமிப்பதென்றும், அது பிரயோகிக்கத்தக்கதென்ற முறையிலும் இலங்கை அரசானது

> “பொறிமுறை விடயத்தில் வெளிநாட்டுப் பங்களிப்பை ஜனாதிபதியானவர் மீண்டும் மீண்டும் மறுத்துக் கருத்து வெளியிட்டு வருவதானது மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு மேற்கொண்டிருந்த அதிகாரபூர்வ நிலைப்பாட்டுக்கு முரண்பாடாக காணப்படுகின்றது.”




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்மொழிந்திருப்பதை ஐ.நா.மனித உரிமைகள் சபை பாராட்டுதலுடன் கவனத்தில் எடுத்துக் கொள்கின்றது. மற்றும் நம்பகரமான நீதிநடைமுறையானது நேர்மைக்கும் பாரபட்சமின்மைக்கும் பெயர் பெற்றவர் களான தனிநபர்களால் முன்னின்று நடத்தப்படும் சுதந்திரமான நீதி மற்றும் வழக்குத் தொடுநர் அமைப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதை உறுதி செய்கின்றது. மேலும் இந்த வகையிலான இலங்கையின் நீதித்துறை பொறி அமைப்பில் ஒரு சிறப்பு ஆலோசகர் அலுவலகம் உள்ளடங்கலாக பொதுநலவாய மற்றும் ஏனைய வெளிநாட்டு நீதிபதிகள், பிரதிவாத சட்டத்தரணிகள் மற்றும் அதிகாரம் பெற்ற வழக்குத் தொடுநர்கள் மற்றும் புலனாய்வாளர்கள் பங்களிப்பு இருக்க வேண்டும் என்பதையும் உறுதி செய்கின்றது.

இதுபற்றி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் த.தே.கூட்டமைப்பின் தலைவர்களில் ஒருவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுகையில்; வெளிநாட்டு நீதிபதிகள் பங்கேற்காத நிலையில் பொறுப்புக்கூறல் செயற்பாடு முன்னெடுக்கப்படுமானால், போரினால் பாதிக்கப்பட்டவர்களான தமிழ் மக்கள் நீதியை எதிர்பார்க்க முடியாது– என்றார். உள்நாட்டு நீதிபதிகளில் ஜனாதிபதி நம்பிக்கை வைத்திருக்கலாம். ஆனால், தமிழர்களுக்கு நம்பிக்கை கிடையாது. நம்பகத்தன்மை வேண்டுமானால் வெளிநாட்டு நீதிபதிகளை அவர் வரவழைக்க வேண்டும் என்றார் – பிரேமச்சந்திரன்.

**ஐ.நாவின் வலியுறுத்தல்**

கடந்த வாரம் ஐ.நாவும் இதில் நம்பகமான விசாரணைகள் நடைபெற வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தது. ஐ.நா.செயலாளர் நாயகத்தின் பிரதிப் பேச்சாளர் பார்ஹான் ஹக் கூறுகையில், நம்பகமான புலன் விசாரணைக்கான வழிமுறைகள் என்ன என்பதை ஐ.நா. தெளிவுபடுத்தியுள்ளது– என்றார். இலங்கை ஜனாதிபதி இலங்கைப் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான நீதி விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகள் பங்கேற்க அழைக்கப்படமாட்டார்கள் என்று கூறியிருப்பது தொடர்பாகக் கேட்கப்பட்ட போதே இந்தக் கருத்தை ஐ.நா.பேச்சாளர் இதைக் கூறினார்.

இது எவ்வாறு போய்க் கொண்டிருக்கிறது என்பதை மனித உரிமைகள் சபைதானே மதிப்பீடுசெய்துகொள்ளும். ஆனால், இதில் நம்பகரமான விசாரணை நடைபெற வேண்டும் என்பதை நாங்கள்உறுதிசெய்து கொள்ள விரும்புகிறோம் என்றார் அவர். மேலும், அவ்வாறு நடைபெறுவதை உறுதி செய்யும் வகையிலான எமது பேச்சுக்களை நாம் தொடர்ந்து மேற்கொள்வோம் என்றார்.

**வெளியுறவு அமைச்சரின் கருத்து**

கடந்த மாதம் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர வெளியிட்டதொரு கருத்தில் போர் குறித்த விசாரணைச் செயன்முறைகள் ஆரம்பிக்கப்படும்போது, சர்வதேச நீதிபதிகளையும் இணைத்துக் கொள்வது குறித்து ஆலோசிக்கத் தமக்கு விருப்பமுண்டு எனத் தெரிவித்திருந்தார். புதிய நீதிமன்றங்கள் நீதியை வழங்குவதாய் இருக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் விரும்புவது நியாயமான விடயமென்றே நான் நினைக்கின்றேன்.

அதற்காக சர்வதேச நீதிபதிகள் பங்களிப்பு வழங்க வேண்டும்என்பதைநாங்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள விரும்புகிறோம் – என்றார் அவர். சமரவீர இந்தக் கருத்தை வோஷிங்டனில் வெளியிட்டிருந்ததாக ரொய்ட்டர் மேற்கோள் காட்டியிருந்தது.

ஐ.நா. தீர்மானத்தை வடிவமைப்பதில் தொடர்பு கொண்டிருந்த இரு முக்கிய பங்காளிகளான அமெரிக்காவும் பிரித்தானியாவும் கூட விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு அவசியம் என்பதை வலியுறுத்தியுள்ளன. ஐ.நா.மனித உரிமைகள் சபையில் அமெரிக்கத் தூதுவராக இருக்கும் கெயித் ஹாப்பர் அண்மையில் இதுபற்றி வெளியிட்டிருந்த கருத்தில், வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு இருந்தால் மட்டுமே பொறுப்புக் கூறும் செயல்முறை நம்பகரமாக இருக்கமுடியும்என்றுதெரிவித்திருந்தார்.

**பிரிட்டன் வலியுறுத்து**

இலங்கையின் உள்ளக பொறுப்புக் கூறும் செயற்பாட்டில் வெளிநாட்டு நீதிபதிகள் இருந்தால் மட்டுமே அதன் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்த முடியும் என்று பிரிட்டன் அரசும் வலியுறுத்தியுள்ளது.

கடந்த ஒக்ரோபரில் பிரிட்டன் நாடாளுமன்றக் குழுவொன்றுக்கு, வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகத்திலுள்ள பிரிட்டன் இராஜாங்க அமைச்சர் ஹுகோ ஸ்வையர் எழுதியிருந்த ஒரு கடிதத்தில் இலங்கையின் நீதித்துறை பொறுப்புக்கூறும் செயல்முறையில் பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகளும் பிரதிவாத சட்டத்தரணிகளும் இடம்பெற்றிருப்பதன் முக்கியத்துவத்தை ஐ.நா.மனித உரிமைகள் சபைத் தீர்மானம் குறிப்பிட்டுக் கூறியுள்ளது என்று தெரிவித்திருந்தார்.

தமிழர்களுக்கான சர்வ கட்சி நாடாளுமன்றக் குழுவினருக்கு, ஸ்வயர், இலங்கை தொடர்பாக எழுதியிருந்த கடிதத்தில், இலங்கை தனது சொந்த வாக்குறுதிகளை பயனளிக்கும் விதத்தில் செயற்படுத்த முடியும் என்பதை உள்நாட்டுச் சட்டங்களைச் சீர்திருத்துவதன் மூலம் உறுதிப்படுத்த வேண்டும் என்பதை ஐ.நா.தீர்மானம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. மனித உரிமை துஷ்பிரயோகங்கள் மற்றும் சர்வதேச மனிதத்துவ சட்ட மீறல்களுக்கு முக்கிய பொறுப்பாளர்களாக இருந்துள்ளவர்களை விசாரணைக்குட்படுத்தித் தண்டிப்பதையும் இது உள்ளடக்கியுள்ளது. மேலும், மனித உரிமை உயர் ஆணையாளர் அலுவலகம் மூலமாக இலங்கையில் ஏற்படும் முன்னேற்றங்கள் தொடர்ச்சியாக சர்வதேச மதிப்பீடுகள் செய்யப்பட வேண்டும் என்பதையும் தீர்மானம் கோரியுள்ளது என்றும் தெரிவித்திருந்தார்.

## மருந்துகளுக்கும் இந்தக் கதி

மருந்து விலைகளைக் குறைப்பதாக மைத்திரி -ரணில் அரசினால் வழங்கப்பட்ட வாக்குறுதி இன்னமும் செயல் வடிவம் பெறவில்லை. மருந்து வியாபாரிகளைக் கையாள்வது அரசுக்கு மிகவும் கஷ்டம் போன்று தெரிகிறது. எனினும் கொடுத்த வாக்கைக் காப்பாற்றாமல் விடுவது வாக்களித்த மக்களை ஏமாற்றுவதாகும் என்பதை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்.

சமீபத்தில் இன்சுலின் வாங்குவதற்காக யாழ். வைத்தியசாலைக்கு முன்னால் உள்ள மருந்துக் கடைகளுக்குச் சென்றபோது வைத்தியசாலையில் வழங்கப்படுகின்ற அந்த மருந்து (Humulin 70/30) ரூபா 600 முதல் ரூபா 745 வரை விற்கப்படுவதை அவதானித்தேன். பாதிக்கப்படும் மக்களைக் காப்பாற்றும் பொறுப்பு எவருக்கு உரியது. இறைமை மக்களிடமிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இடைக்கிடை அவர்களின் கையில் வாக்குச் சீட்டும் கிடைக்கிறது. ஆனால் பணம் அதிகாரம், அரசியல் செல்வாக்கு என்பவையெல்லாம் ஒரு சிலரிடம் மட்டும்தான் இருக்கின்றன. ஜனநாயக நாட்டிலும் சனங்கள் சகல விடயங்களுக்கும் வீதியில் இறங்கிப் போராட வேண்டியதாகி யுள்ளது.

*– வாசகன் பீற்றர்*

## வீதிப் புனரமைப்பும் மின்சார விநியோகமும்

மேற்படி விடயம் தொடர்பாகக் கடந்த வருடம் தங்கள் பத்திரிகையில் வெளிவந்த விடயத்தை மீண்டும்ஒரு முறைஞாபகப்படுத்த விரும்புகிறோம். இந்த முறையாவது எமது பிரச்சினை தீரும் என நம்புகின்றோம்.

எமது பூநகரிப் பிரதேசத்தில் உள்ள பிள்ளையார் நகர் கிராமத்திலுள்ள அனைத்து வீதிகளும் புனரமைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. எமது 6ஆம் குறுக்குத்தெரு வீதி மட்டும் இதற்கு விதி விலக்கு. இது சம்பந்தமாக பல தடவை கிராம சேவையாளர், அலுவலகம் பிரதேச செயலகம், பிரதேசசபை அலுவலகம் எனப் பல இடங்களுக்கு நேரில் சென்று பேசியும், கடிதங்கள் வழங்கியும் அவர்கள் எதுவித கவனமும் எடுக்கவில்லை. இடம் பெயர் வுக்கு முன்பும் இந்த வீதி இவ்வாறுதான் இருந்தது.

மீள்குடியேற்றத்தின் பின்பும் இந்த வீதி திருத்தப்படவில்லை. மழை காலங்களில் 2½ அடித் தண்ணீரின் ஊடாகத் தான் பயணத்தை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை எமக்கு உள்ளது.

இதனால் பாதிக்கப்படுவது பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் தான். எமது வீதியை எதற்காக பின் தள்ளி வைக்கின்றார்கள் என்பது எமக்குத் தெரியவில்லை.

இதேவேளை – எமது பூநகரிப் பிரதேசத்தில் உள்ள அனைத்து இடங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. எமது 4ஆம் கட்டை பிள்ளையார்நகர் கிராமத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது. எமது வீதியிலும் (இரண்டு பேருக்கு) இலவசமான வழங்கப்பட்டுள்ளது.

மீதிப் பேருக்கு வழங்கப்படவில்லை. படிக்கும் மாணவர்கள் குப்பி விளக்கில் இருந்துதான் கஸ்டப்பட்டு படிக்கின்றார்கள். பூநகரிப் பிரதேசத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் ஏன் இப்படியொரு வஞ்சகமான செயலைச் செய்கின்றார்களோ தெரியவில்லை. இவர்களுக்கு எமது மக்களில் கோபமா அல்லது வீதியில் கோபமா தெரியவில்லை. வசதியானவர்களுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

கஷ்டப்பட்ட எம்மை 20000/= ரூபா காசு கட்டி மின்சாரத்தை பெற்றுக்கொள்ளுமாறு கூறுகின்றார்கள். ஆனால், நாம் எவரும் காசு கட்ட மாட்டோம்.

எமது அடுத்த கட்டச் செயற்பாடு பூநகரியில் உள்ள அரசு உத்தியோகத்தருக்கு எதிரான ஆர்ப்பாட்டமும் உணவு தவிர்ப்புப் போராட்டமும்தான் என்பதையும் மிக மன வேதனையுடன் தெரியப்படுத்துகின்றோம்.

இந்தக் கடிதம் மூலம் எமக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என நம்புகின்றோம். தீர்வு கிடைக்காத பட்சத்தில் எமது முயற்சியைக் கைவிடமாட்டோம் என்பதை உறுதியாகக் கூறுகின்றோம். எனவே இது சம்பந்தமான அதிகாரிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் கொண்டு தீர்வை வழங்க வேண்டும்.

*பாதிக்கப்பட்ட பொதுமக்கள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள்




**(ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள் வரிசையில் கும்ப ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிய விவரங்கள் இன்றும் தொடர்கின்றன.)**

## கும்பம்

**கேதுவின் பலன்கள் தொடர்ச்சி**

குருதிச் சோகை வரக்கூடும். குருதியில் இரும்புச் சத்துகள் குறைய வாய்ப்பிருக்கிறது. மாதுளம் பழம்சாப்பிடுவது நல்லது. பெரிய நோய் இருப்பது போன்ற பிரமை வந்து நீங்கும். வட்டிக்கு வாங்கிய கடனை எப்படி அடைக்கப் போகிறோமோ என்ற பயம் வரும். நெருங்கிய உறவினர்கள், நண்பர்களாக இருந்தாலும் அவர்களுக்காக உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். யோகா, தியானத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது நல்லது.

**கேதுபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

உங்கள் தன–லாபாதிபதியான குருவின் பூரட்டாதி நட்சத்திரத்தில் 08.01.2016 முதல் 12.07.2016 வரை கேதுபகவான் செல்வதால் மாறுபட்ட அணுகுமுறையால் பாதியில் நின்ற வேலைகளை முடிப்பீர்கள். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். வேற்று மதத்தவர்களின் நட்பால் சாதிப்பீர்கள். சிலர் புது வீடு கட்டிக் குடி புகுவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். உறவினர்கள், விருந்தினர்களின் வருகையால் வீடு களைக்கட்டும்.

ராகுவின் சதயம் நட்சத்திரத்தில் 13.07.2016 முதல் 20.03.2017 வரை கேதுபகவான் செல்வதால் மன இறுக்கம், வீண் குழப்பம், எதிலும் ஒருவித தயக்கம், தடுமாற்றம் வந்து செல்லும். பணம் கொடுக்கல், வாங்கல் விடயத்தில் எச்சரிக்கையாக இருங்கள். ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டி வரும். தைரியசாலியாக உங்களைக் காட்டிக் கொண்டாலும், உள்மனதில் ஒருவித பயம் பரவும். உங்களின் சேவகாதிபதியும்–அஷ்டமாதிபதியுமான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் 21.03.2017 முதல் 25.07.2017 வரை கேதுபக வான் செல்வதால் பரபரப்பாகக் காணப்படுவீர்கள். சிறுசிறு விபத்துகள் வரக்கூடும். வாகனத்தை இயக்கும் போது கவனம் தேவை. சகோதர வகையில் பிணக்குகள் வரும். சொத்து வாங்கும் போது தாய் உறுதியைச் சரி பார்த்து வாங்கு வது நல்லது. வழக்கில் தீர்ப்புத் தள்ளிப் போகும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைத் தெரிந்துக் கொள்வீர்கள். மக்களின் ரசனையை அறிந்து செயற்படுங்கள். வேலையாள்களின் குறை, நிறைகளை சுட்டிக் காட்டி அன்பாக நடத்துங்கள். பங்குதாரர்களால் மறைமுகப் பிரச்சினைகள் வந்து போகும். உத்தியோகத்தில் அநாவசியப் பேச்சைத் தவிர்ப்பது நல்லது. சக ஊழியர்கள் செய்யும் தவறுகளை மேலதிகாரியிடம் கொண்டு செல்ல வேண்டாம். கூடுதலாக வேலை பார்க்க வேண்டி வரும். புதிதாக அறிமுகமாகும் ஊழியர்களிடம் அளவாகப் பழகுங்கள். சட்டத்துக்குப் புறம்பான வகையில் எவருக்கும் உதவ வேண்டாம்.

இந்த ராகு–கேது பெயர்ச்சி எதிர்காலம் பற்றிய ஒரு பயத்தையும், கேள்விக்குறியையும் தந்தாலும் அவ்வப்போது அனுசரித்துப் போவதன் மூலமாக ஓரளவு நிம்மதியையும் தரும்.

**பரிகாரம்:**

தமிழ்நாடு, கும்பகோணத்திலிருந்து 9 கி.மீ. தொலைவில் உள்ள திருநாகேஸ்வரம் எனும் ஊரில் அருள் பாலிக்கும் ஸ்ரீபிறையணிவாணுதலாள் அம்மை உடனுறை ஸ்ரீநாகேஸ்வரரையும், இரண்டாம் பிராகாரத்திலுள்ள நாகராஜரையும் ஏதேனும் ஒரு பௌர்ணமி திதி நாளில் சென்று வணங்குதல் பயன்தரும். ஏழை மாணவனின் கல்விக்கு உதவுங்கள்.

(தொடரும்)

# ஒழிந்துபோன வேட்டையும் குறைந்துபோன வெளிநாட்டு பறவைகளின் வரவும்...!

லக்ஸ்மன்

மாரிகாலம், பூமி செழித்து இயற்கை எழில் கொஞ்சும் அழகான காலம். வறண்டு வெடித்துக் கிடந்த நிலங்கள் வளம்மிக்க இடங்களாகக் காட்சியளிக்கும். குடாநாட்டின் மாரி காலம் ஆரம்பானதும் அனைத்துப் பகுதிகளுமே செழிப்பில் மிதந்து எழில் கொஞ்ச, அந்த அழகை மனிதர்கள் மட்டுமே ரசித்து மகிழ்வதில்லை. மிருகங்கள், பறவைகள் கூட அந்த இயற்கையை ரசிக்கின்றன என்பதுவும் நிஜம். மழை காலம் ஆரம்பமானதும் நீர்நிலைகள் நிறைந்து காணப்படும். அந்த நீர்நிலைகளில் உல்லாசமாக நீந்திக்களித்து நிறைவுகாண உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் வரும் பறவைகள் பல ரகங்களைச் சேர்ந்தவை. நெடுந்தீவில் வெட்டுக்கழி, பெரிய கழி, ராமன்விளாப்பு, சண்ணாங்குளம், நெழுவினிக் குளம் என்பவை மழைகாலத்தில் நீர் நிறைந்து காணப்படுவதால் இங்கெல்லாம் வெளிநாட்டுப் பறவைகள் வந்து குவிகின்றன. சைபீரியத்தாரா, நாரைகள், கூழைக்கடா போன்ற பெரிய பறவை இனங்கள் மட்டுமன்றி பொடிக்குருவி, மணிப்புறாக்கள் என சிறிய ரகப்பறவைகளும் இந்த நீர்நிலைகளில் உல்லாசமாகப் பொழுதைக் கழித்து மகிழ்கின்றன. நெடுந்தீவில் சிறிதும் பெரிதுமாகக் காணப்படும் குளங்கள் ஏராளம். இருந்தாலும் கூட முன் சொல்லப்பட்ட குளங்களிலேயே மிகக் கூடுதலான பறவைகளுக்குக் காதல். அதனால் மிகப் பெரும் எண்ணிக்கையான பறவையினங்கள் இந்தக் குளங்களுக்கே வருடந்தோறும் வந்து செல்கின்றன. பறவைகளின் வரத்து போர்க்காலத்துக்கு முன்னரும் போர்க் காலத்திலும் இருந்த அளவுக்கு இன்று இல்லை. முன்னர் தீவுப் பகுதியில் மிகக் கூடுதலான பறவைகள் நெடுந்தீவே தமது சரணாலயம் என்று பெருமளவில் நெடுந்தீவுக்கே வந்து கொண்டிருந்தன. தற்போது பரவலாக அவை தீவுப் பகுதிகள் எங்கும் நிறைந்து செல்வதைக் காண முடிகிறது.

1975 ஆம் ஆண்டுக்கு முன்னர் நெடுந்தீவில் வேட்டைப் பிரியர்கள் கணிசமாக இருந்துள்ளனர். அவர்களிடம் அனுமதிப் பத்திரம் பெற்ற துப்பாக்கிகளும் இருந்தன. அதனால் நெடுந்தீவுக்கு வரும் உல்லாசப் பறவைகளில் திரும்பிச் செல்வது அரைவாசிப் பறவைகள் மட்டுமே என்ற நிலை இருந்து வந்தது. குளங்களில் நீந்தி விளையாடும் இந்தப் பறவைகளை வேட்டையாடுவதற்காக இவைகள் தங்கி நிற்கும் குளங்களைச் சூழவுள்ள பற்றைகள் போன்ற மறைவிடங்களில் அதிகாலை 4 மணிக்கும் 5 மணிக்கும் இடையில் வேட்டையாடுபவர்கள் பதுங்கிக் காத்திருப்பர். இந்த நேரங்களில் பறவைகள் குளக் கரையை அண்டி சிறிது தூரத்தில் நீரில் மிதந்து கொண்டிருக்கும் பொழுது வேட்டைப் பிரியர்கள் தமது கைவரிசையைக் காட்டி விடுவார்கள். சிறிதும் பெரிதுமாக கணிசமான பறவைகள் சூட்டுக்கு இலக்காகி இவர்களுக்கு உணவாக மாற ஏனையவை எங்காவது அருகில் உள்ள குளங்களை நாடிப் பறந்து விடும். இது மாரி காலங்களில் நிகழும் அன்றாடக் காட்சியாக நெடுந்தீவில் இடம்பெறுவது வழமை. நெடுந்தீவில் மான், மரை என்று வேட்டையாடும் சூழ்நிலை கிடையாது. வனவிலங்குகள் என்று எதுவும் இல்லை. அதனால் இந்தக் கார்காலப் பறவைகளை வேட்டையாடுவதுடன் வேட்டைப் பிரியர்கள் திருப்தியடைய வேண்டியதுதான். நாகேந்திரர், கணபதிப்பிள்ளை, வைத்திலிங்கம், கனகசபை, கந்தையா, சுந்தரலிங்கம், எனப் பலர் திறமை மிக்க வேட்டையாளர்களாக இருந்துள்ளனர்.


இவர்கள் தமக்கென உதவியாளர்களையும் அழைத்துச் செல்வதுண்டு. நீரில் உல்லாசமாக மிதக்கும் பறவைகளைக் கல்லெறிந்து அவைகளைப் பறக்க விட்டு வெடிவைப்பது நாகேந்திரனின் வழமை. தப்பிக் கொள்ள வழங்கும் சந்தர்ப்பம் இது. வேட்டைக்குச் செல்பவர்கள் தமக்கென சில கோட்பாடுகளையும் கொண்டுள்ளனர். வேட்டை முடிந்து தாம் வீழ்த்திய பறவைகளுடன் வீடு திரும்புவோர் தமக்கென ஒரு சிலவற்றை எடுத்துக் கொண்டு வீதியில் வருபவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்கும் கொடுத்துக் செல்வது அவர்களது வழக்கமாக இருக்கும். இது அந்த நாள்களில் இருந்த மக்களின் வழக்கமாக இருந்தது. வீட்டுக்குத் தெரியாமல் துவக்குகளைத் தூக்கிக் கொண்டு வேட்டைக்குப் புறப்படும் பொடித் தர வழிகளும் இல்லாமலில்லை. இவர்கள் புறப்பட்டதற்கு ஒன்றிரண்டு கிடைத்தது என்று மகிழ்வதும், தோட்டாவும் வீணாகி விட்டதே என்று வருத்தப்படுவதும் அந்த நாளில் சகஜம். இவை போருக்கு முந்திய நாள்களில் இடம்பெற்ற நிகழ்வுகள். போர்க் காலத்தில் பலர் தமது துவக்குகளை இழந்தும் பறிகொடுத்தும் விட்டதால் அப்போது முதல் இன்று வரை உல்லாசமாகப் பொழுதைக் கழிக்க வரும் இந் தப் பறவைகள் சுதந்திரமாக நீர் நிலைகளில் நீந்தி மகிழக் கூடியதாக இருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன் நெடுந்தீவில் இந்தப்பறவைகள் காணப்படும் குளங்களில் தடம் வைத்து அவற்றைப்பிடிப்பதிலும் மரக் கிளைகளை ஒன்றாக இணைத்துக்கட்டி அதில் தம்மை மறைத்துக் கொண்டு மெதுவாக நீரில் பதுங் கிப் பதுங்கிச் சென்று அவற்றைப்பிடிக்கும் வழக்கமும் இருந்துள்ளது.

இன்று வேட்டைப்பிரியர்கள் என்று எவருமே இல்லை. அதனால் பறவைகள் மார்கழி மாத சீசனில் தாராளமாக நெடுந்தீவுக்கு வந்து நிம்மதியாக தமது உல்லாசப்பயணத்தை நிறைவு செய்து கொண்டு மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிவிடுவதாக எண்ணிவிடவேண்டாம். ஏனோ தெரியவில்லை. வேட்டையாளர்கள் வாழ்ந்த காலங்களில் பெருமளவுக்கு வந்து நெடுந்தீவின் மிகப் பெரிய நீர்த்தேக்கங்களை தமது சரணாலயங்களாக மாற்றி வேட்டைப் பிரியர்களை மட்டுமன்றி வெளியிடங்களில் இருந்து வந்த உல்லாசப் பயணிகளையும் மகிழ்வித்த இந்தப் பறவை இனங்களின் இப்போதைய நெடுந்தீவுக்கான வருகை பெரிய அளவில் குறைந்துள்ளமை ஏன் என்பதுதான் புரியாத புதிராக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் நிம்மதியாக வாழ வழி அமைப்போம்



சேரலாதன்

பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லாததொரு நிலை இன்று நாட்டில் காணப்படுகின்றது. வளர்ந்த பெண்கள் மட்டு மல்லாது இளம் பிஞ்சுகளான ஒன் றுமே அறியாத சிறுமிகள் கூட ஆண் மிருகங்களால் சூறையாடப்படுகின்ற கொடூர நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. நாட்டின் எங்கோ ஒரு மூலையில் எவராவது ஒரு பெண் ஆண்களால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளவதான செய்தி தினமும் ஊடகங்களில் வெளிவருவதைக் காண முடிகின்றது. இந்த நிலை நீடிக்குமானால் பெண்கள் நிம்மதியாக வாழ முடியாத சூழல் ஏற்படுவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

இந்த நிலையில் மகளிர்தின விழா ஒன்றில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ள சில கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன். யாழ்.பல்கலைக்கழகத்தில் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட பேராசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் நாம் இடைநிறுத்தியுள்ளோம். இதைக்கூட நான் செய்யவில்லை என்றால்– எமது சமுதாயத்துக்குப் பெரிய தவறை இழைத்தவளாக நான் ஆகிவிடுவேன். இந்த வகையில் இவ்வாறானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றோம். பாதிக்கப்பட்டவர்கள் அது தொடர்பாகத் தாமதிக்காது எம்மிடம் முறையிட்டிருந்தால் துஷ்பிரயோகங்களைத் தடுத்து நிறுத்த முடிந்திருக்கும். பெண்கள் தமக்கு எதிரான ஒவ்வொரு நடவடிக்கையின் போதும் அதற்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும். பிழைகளைத் தட்டிக் கேட்கக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். எனவே பெண்கள் துணிச்சல் மிக்கவர்களாகவும், தமக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளைத் தட்டிக்கேட்கக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாறு அரிய கருத்துக்கள் பலவற்றைத் துணைவேந்தர் கூறியிருக்கின்றார்.

ஒரு நாட்டின் கல்விக்குரிய உயர் பீடமாகப் பல்கலைக்கழகங்கள் திகழ்கின்றன. அங்கு கல்வி கற்பதும், கற்பிப்பதும் பெருமைக்குரிய விடயங்கள். ஏனையவர்களுக்குச் சகல விடயங்களிலும் முன்னுதாரணமாக விளங்க வேண்டிய கடப்பாடும் பல்கலைக் கழகங்களுக்கு உண்டு. ஆனால், பல்கலைக் கழகங்களின் இன்றைய நிலை என்ன? பல்கலைக் கழக மாணவர்கள் பகிடிவதை என்ற போர்வையில் அநாகரிகமாக நடந்து கொள்வதும், ஒழுக்க விழுமியங்களை மீறிச் செயற்படுவதும் அதிகரித்துக் காணப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழக மாணவர்களை பொதுமக்கள் வெறுத்து ஒதுக்கும் அளவுக்கு நிலைமை சீர்கெட்டுப்போய்விட்டது. இதைப்போன்றுதான் மிக உயர்வான குரு ஸ்தானத்தில் இருக்க வேண்டிய பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் சிலர் தரம் கெட்ட வகையில் அங்கு பயில்கின்ற பெண்பிள்ளைகளிடம் நடந்து கொண்டமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் எழுந்ததன் பயனாக மேற்குறிப்பிட்ட நபர்கள் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இந்தத் தண்டனை இவர்களுக்குப் போதுமானதல்ல. இவர்கள் மீது உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு நீதிமன்றங்கள் ஊடாக கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். இவர்களுக்குக் கிடைக்கின்ற தண்டனை ஏனையவர்களுக்கும் ஒரு பாடமாக அமைதல் வேண்டும்.

சித்தன்கேணிச் சந்தியில் வைத்து இளம் மாணவியொருவர் சமூக விரோதிகளால் கடத்திச் செல்லப்பட்ட போது, சமூகப்பொறுப்புள்ள இளைஞர்கள் சிலர் துணிச்சலுடன் செயற்பட்டு அந்த மாணவியைக் காப்பாற்றியுள்ளனர். இந்த இளைஞர்கள் அக்கறையின்றி இருந்திருந்தால் இன்னொரு பெண் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கக்கூடும். இந்த கொடூர செயலில் ஈடுபட்ட சமூக விரோதிகளுக்கு நீதித் துறை கடுமையானதண்டனை வழங்குதல் வேண்டும். குற்றவாளிகள் பிணையில் விடப்படுவதும் அவர்களுக்கு ஆகக்குறைந்த தண்டனை வழங்கப்படுவதும் குற்றங்கள் குறைவதற்கு ஒரு போதுமே உதவ மாட்டாது.

ஆண்கள் மிருகங்களாக மாறும் போதுதான் பெண்கள் மீதான துஷ்பிரயோகங்களும் இடம்பெறுகின்றன. ஒருபெண்ணான அன்னையின் வயிற்றில் உதித்து இந்த உலகை எட்டிப்பார்த்தவர்கள்தான் ஆண்கள். அந்த அன்னையும் ஒரு பெண் தான். பிதாவுக்கு முன்னின்று எம்மைக் காத்து அருள்பவள், பெண்ணாகிய எமது அன்னை தான். ஆண்களுடன் உடன் பிறக்கும் சகோதரியும் ஒரு பெண் தான். ஆண்களுக்கு வாழ்கைத் துணையாக அமையும் மனைவியும் பெண்தான். இவர்களைவிட ஆண்களின் குருதியுடன் நெருங்கிய உறவைப் பேணுகின்ற அவர்களுக்குப் பிறக்கின்ற பெண் குழந்தைகளையும் ஆண்கள் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவ்வாறு சிந்தனை எழுமாயின் ஏனைய பெண்களைக் கேவலமாக நோக்குகின்ற மன நிலை ஏற்படாது. ஆனால், ஆண்களில் எத்தனை பேர் இவ்வாறு சிந்திக்கின்றனர் என்பதுதான் கேள்விக் குறியாக நீண்டு நிற்கின்றது.

> நாட்டின் எங்கோ ஒரு மூலையில் எவராவது ஒரு பெண் ஆண்களால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளவதான செய்தி தினமும் ஊடகங்களில் வெளிவருவதைக் காண முடிகின்றது. இந்த நிலை நீடிக்குமானால், பெண்கள் நிம்மதியாக வாழ முடியாத சூழல் ஏற்படுவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.



திரைப்படங்கள், இணையத் தளங்கள், தொலைக் காட்சித் தொடர்கள் ஆகியவை பாலியல் வக்கிரகர்கள் அதிகரித்துச் செல்வதற்கு காரணிகளாக அமைந்துள்ளன. மனதில் வக்கிர உணர்வுகள் தோன்றும்போது, அவை பெண்கள் மீதான துஷ்பிரயோகங்களுக்குப் பாதை அமைத்துக் கொடுத்து விடுகின்றன. மனதைக் குரங்குக்கு ஒப்பிடுவார்கள்.

அதைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்காதவரை நாம் நிம்மதியாக வாழமுடி யாது. மனம் அங்குமிங்கும் அலை பாய்ந்து கொண்டிருக்கும் போது எம்மால் எவ்வாறு அமைதியாக வாழ முடியும்? பெண்களுக்கே உரிய தாய்மையுணர்வு என்றுமே உயர்வானது. தான் ஈன்ற குட்டியொன்று இறந்ததைக் கண்ட கடற்சிங்கமொன்று கதறியழுததை இணையத் தளங் களில் பார்த்த போது, கண்களில் நீர் நிறைந்துவிட்டது. தாய்மையுணர்வு மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் பொதுவானதாகவே காணப்படுகின்றது. இந்த உயர்வான தாய்மைப் பண்பைக் கொண்டுள்ள பெண்களைப் போற்றிப் பாதுகாப்பது ஆண்களின் கடமையல்லவா? இயற்கையின் படைப்பின் பிரகாரம் பெண்கள் ஆண்களைவிடப் பலவீனமானவர்கள். இதன் காரணமாக ஆண்களை எதிர்த்துப் போராடுகின்ற சக்தி அவர்களிடம் குறைவாகவே காணப்படுகின்றது. ஆண்கள் இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.


அகிம்சை வழியில் இந்திய நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடிய மகாத்மாகாந்தியும், தமது உரிமைகளைப் பெறுவதற்காக ஆயுதம் ஏந்திப் போராடிய விடுதலைப் புலிகளும் பெண்களை மிகவும் உயர்வாகப் போற்றினார்கள். விடுதலைப் புலிகளின் காலத்தில் தமிழர் பிரதேசங்களில் பெண்கள் அனுபவித்த சுதந்திரத்தை இன்றும் சிலாகித்துப் பேசுகின்றனர். அந்த அளவுக்குப் பெண்கள் அச்சம் எதுவுமின்றி நடமாட முடிந்தது. தப்பித்தவறி ஏதாவது பெண்களுக்கு எதிரான சம்பவங்கள் இடம்பெற்றுவிட்டால் அவற்றுடன் தொடர்புடையவர்கள் உடனடியாகவே கைது செய்யப்பட்டுக் கடுமையான தண்டனைகளுக்கும் உட்படுத்தப்படுவர். இதனால் பெண்கள் மீதான துஷ்பிரயோகத்தை ஆண்கள் நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை.

ஆனால் இன்று நாட்டின் சட்டதிட்டங்கள் பலவீனமாக இருப்பதால் பெண்கள் மீதான துஷ்பிரயோகங்கள் தாராளமாக இடம்பெறுகின்றன.

சிறிய தண்டனைகள் வழங்கப்படுவதால் ஆண்கள் குளிர்விட்டுப் போயுள்ள நிலையில் தம் எண்ணம் போன்று நடந்து கொள்கின்றனர்.

ஆகவே பாலியல் துஷ்பிரயோகக் குற்றங்களுக்கான தண்டனைகள் கடுமையாக்கப்பட வேண்டும். காவல் துறையும், நீதிமன்றங்களும் இத்தகைய குற்றவாளிகள் விடயத்தில் மிகக் கடுமையாக நடந்து கொள்ள வேண்டும். மேலும், சமுதாயத்தில் அங்கம் வகிக்கின்ற மக்கள் குற்றவாளிகளைச் சமூகத்தில் இருந்து முற்றாகவே ஒதுக்கி வைத்தல் வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாகப் பெண்கள் தமது சுய பாதுகாப்பில் 24 மணி நேரமும் விழிப்புடன் இருத்தல் வேண்டும். இவற்றின் மூலமாகப் பெண்கள் மீதான துஷ்பிரயோகங்களை ஓரளவாவது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இஸ்லாமிய எதிர்ப்புணர்வு அமெரிக்காவுக்கு அவமானம்

## கூறுகின்றார் ஜோன் கெரி

வொஷிங்ரன், மார்ச் 30

2016 ஜனாதிபதி தேர்தல் அமெரிக்காவுக்கு அவமானத்தை ஏற்படுத்தக் கூடியதொன்றாக மாறிவருவதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படும் வேட்பாளர்கள் இஸ்லாமிய எதிர்ப்பு உணர்வை வெளிப்படுத்தி வருவதையும் இதன் காரணமாக உலகத் தலைவர்கள் வெளியிட்டுவரும் கரிசனைகளையும் சுட்டிக்காட்டியே கெரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிபிஎஸ் தொலைக்காட்சியின் 'பேஸ் த நேசன்' நிகழ்ச்சியில் கலந்து கொண்டவேளையே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தேர்தல் குறித்து உலகத் தலைவர்கள் என்ன கருதுகிறார்கள் எனக் கேட்கப்பட்டதற்கு கெரி, அவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர் என தெரிவிப்பதே பொருத்தம் என குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் உறுதிப்பாடு, நம்பகத்தன்மை குறித்துக் காணப்படும் உணர்வுகளை தேர்தல் பிரச்சாரங்கள் பலவீனப்படுத்துகின்றன. உலகத் தலைவர்கள் என்னிடம் எழுப்பிய கேள்விகள், கரிசனைகள் அமெரிக்காவுக்கு அவமானத்தை ஏற்படுத்துபவையாகக் காணப்படுகின்றன என கெரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(த)

# பெரிய வெள்ளிய

# அறைந்து அருட்த

## ஐ.எஸ். அமைப்பினரி

கேரளா, மார்ச் 30

இந்தியாவில் கேரளாப் பகுதியில் அன்னை திரேசா சேவைகள் பணியகத்தில் பணிபுரிந்து வந்த கத்தோலிக்க வணபிதா ரொம் உஹன்னாலில் ஐ.எஸ். அமைப்பால் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டுள்ளார் எனச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கிறிஸ்தவர்கள் அனுசரிக்கும் பெரிய வெள்ளி தினத்தன்று இந்தக் கொடூரச் செயலை அவர்கள் அரங்கேற்றியுள்ளனர்.

ஏமனுக்கு அவர் பயணம் செய்தபோது ஐ.எஸ். அமைப்பினரால் கடத்தப்பட்டிருந்தார். ஏமனில் சேவை புரிந்து வரும் மருத்துவமனை ஐ.எஸ். அமைப்பால் இந்த மாத ஆரம்பத்தில் சுற்றிவளைக்கப்பட்டதுடன், அங்கு பணிபுரிந்த 16 தாதியர்கள், ஓர் அருட்சகோதரி ஆகியோர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வணபிதாவை அவர்கள் கடத்திச் சென்றனர். இயேசுவைச் சிலுவையில் அறைந்து கொன்றதைப் போன்றே வணபிதாவையும் இவர்கள் பொரிய வெள்ளி தினத்தில் சிலுவையில் அறைந்து கொன்றுள்ளனர் எனச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

(த-ரி4)





# டுபாய் அடுக்

# நேற்றுப் பெரு

அஜ்மன், மார்ச் 30

ஐக்கிய அரபு இராச்சியத்தில் மக்கள் வசிக்கும் அடுக்
விபத்து ஏற்பட்டுள்ளது. பாரிய சேதங்கள் எதுவும் ஏற்ப
ளனர்.

இந்தத் தீவிபத்தில் 2 கட்டடங்கள் சேதமாகின. கட்டடத்தி
மக்களை உடனடியாக வெளியேற்றினர். இந்த விபத்
காரியொருவர் தகவல் தெரிவிக்கையில், ஒருவர் தீக்க
ஒருவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது எனத் தெரிவி
டுபாயின் வட பகுதியில் உள்ள அஜ்மன் பிரதேசத்தில்
தில் 5 பேர் சிறிய தீக்காயங்களுக்கு ஆளானார்கள்.
ளது. விபத்துக்கான காரணங்கள் இதுவரை கண்ட
ஆரம்பிக் கப்பட்டிருப்தாகவும் அதிகாரிகள் தெரிவித்த

# 82 பயணிகளுடன் நேற்று எகிப்து விமானம் கடத்தல்

## சைப்பிரஸில் பின்னர் பத்திரமாகத் தரையிறக்கம்; அதில் பயணித்த ஆயுததாரி ஒருவர் கைவரிசை

கெய்ரோ, மார்ச் 30

அலெக்சாந்திரியாவில் இருந்து எகிப்து தலைநகர் ஹெய்ரோ நோக்கிப் பயணித்த எகிப்தின் பயணிகள் விமானமொன்று கடத்தப்பட்டு, சைப்பிரஸ் லார்னாகா விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள சைப்பிரஸ் பொலிஸார், நேற்று உள்ளூர் நேரப்படி காலை 8.30 மணியளவில் கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு கொண்ட கடத்தல்காரன், விமானத்தை லார்னாகா விமான நிலையத்தில் தரையிறக்க அனுமதிக்குமாறு கோரியதை அடுத்து, அதற்கு அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிவித்தனர்.

மேலும், குறித்த பயணிகள் விமானத்தை தரையிறக்காவிட்டால், தன் உடலில் கட்டிருக்கும் வெடிப்பொருளை வெடிக்க வைக்கப் போவதாக விமானியை அச்சுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விமானக் கடத்தல் தொடர்பில் அமெரிக்காவுக்குத் தகவல் அனுப்பியுள்ள சைப்பிரஸ், குறித்த விமானம் கடத்தப்பட்டமை மற் றும் அதில் வெடிகுண்டு இருப்பதையும் உறுதிப்படுத்தியுள்ளது.

இதேவேளை இது தொடர்பில் செய்தி வெளியிட்டுள்ள எகிப்திய விமானப் பணியகம், குறித்த விமானத்தில் இருக்கும் நான்கு வெளிநாட்டவர்கள் மற்றும் விமானப் பணியாளர்கள் தவிர ஏனைய அனைவரையும் விடுவிப்பதாகக் கடத்தல்காரன் தெரிவித்துள்ளதாகவும், அவன் இதுவரையில் எதுவித உடனடிக் கோரிக்கைகளையும் முன்வைக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது.

இதனையடுத்து லார்னாகா விமான நிலையம் மூடப்பட்டுள்ளதுடன், குறித்த இடத்திற்கு அம்பியூலன்கள் விரைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமானத்தைக் கடத்தியவர் இப்ராகிம் சமாகா எனும், அமெரிக்க – எகிப்து குடியுரிமை பெற்ற நபர் ஆவார். சைப்பிரஸ் அதிகாரிகளின் தகவல் அடிப்படையில், முன்னாள் மனைவியைச் சந்திக்க அவர் இவ்வாறு செய்துள்ளார் என்றும், தீவிரவாத அடிப்படையில் செயற்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த பயணிகள் விமானத்தில் 75 பயணிகள் மற்றும் 7 விமானப்பணியாளர்களும் பயணித்தமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

# கண்ணுக்

## ஈரான் நீதிமன்ற

தெஹ்ரான், மார்ச் 30

இருவருக்கிடையிலான தெருச்சண்டையில் ஒருவரது கண்ணைப் பிடுங்கிய மற்றவரது கண்ணைப் பிடுங்கும்படி ஈரானிய நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இந்தத் தண்டனை விதிக்கப்பட்டவர் ஈரானில் இயங்கும் மனித உரிமை ஆணையத்திடம் முறைப்பாடு செய்துள்ளார்.


28 வயதாகும் சமன் எனும் பெயர் கொண்ட நபருக்கு நீதிமன்றம் இந்த அதிரடித் தீர்ப்பை வழங்கியுள்ளது. அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்ததாவது,

தெருவில் சண்டையிடும்போது தற்செயலாக உலோகக் கம்பியைக் கொண்டு தாக்கினேன். அதன்போது அவரது கண் பாதிப்படைந்தது எனத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தண்டனையை எவ்வாறு வழங்குவது என்பது குறித்து தெளிவான கருத்துக்கள் இன்னமும் முன்வைக்கப்பட வில்லை. ஆனாலும் ஈரான் மதக் குழுவின ரின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் நாடாகும். மேலும் அங்கு மிகவும் கடுமையான தண்டனைகள், மதச் சட்டங்களுக்கிணங்க வழங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ன்று சிலுவையில்
# ...ந்தை படுகொலை
## ...ன் கொடூரச் செயல்



# துருக்கியில் யூதச் சிறுவரை குறி வைக்கின்றது ஐ.எஸ்.

இஸ்தான்புல், மார்ச் 30
துருக்கியில் உள்ள யூதச் சிறுவர்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்த ஐ.எஸ். திட்டமிட்டிருப்தாக உளவுத்துறை தகவல் வெளியிட்டுள்ளது.
ஸ்கை நியூசின் செய்திக் குறிப்பில் தாக்குதலுக்குத் திட்டமிட்டிருந்த 6 போராளிகள் கடந்த வாரம் துருக்கியில் கைது செய்யப் பட்டிருப்பதாகத் தகவல் வெளியிடப்பட்டிருந் தது. மேலும் மக்கள் கூடும் இடங்கள், பாடசாலைகள், இளைஞர் சங்கங்கள், யூதச் சிறுவர்களின் சங்கங்கள் என்பவற்றில் தாக்குதல் நடத்த இவர்கள் திட்டமிட்டிருந்ததாக இந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.
அத்துடன் இவர்களைக் கைது செய்யாதிருந்தால், ஒரு சில தினங்களில் குண்டு வெடிப்பு நிகழ்ந்திருக்கும். இவர்களின் தாக்குதல் பொறிமுறை நம்பமுடியாத அளவுக்கு மிகவும் நுட்பமாக இருந்தது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.
உள்ளகப் பாதுகாப்புப் பொறிமுறையின் மூலம் போராளிகள் கைது செய்யப்பட்டனர். முன்னதாகக் கடந்த வாரத்தில் இஸ்தான்புல் நகரில் இடம்பெற்ற தாக்குதல் ஐ.எஸ். அமைப்பால் இவ்வாறே திறம்பட ஒருங்கிணைத்து நடத்தப்பட்டிருந்தது என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (த-ரி4)

# மதச் சட்டங்களை செயற்படுத்துங்கள்
## பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டம்

இஸ்லாமாபாத், மார்ச் 30
பாகிஸ்தானில் தெய்வ நிந்தனைச் சட்டங்களைச் செயற்படுத்தும்படி இஸ்லாமாபாத்தில் இரண்டாவது நாளாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. நாடாளுமன்றத்துக்கும், ஏனைய அரசு அலுவலகங்களுக்கும் வெளியே திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் மதச் சட்டங்களை அல்லது ரியா சட்டங்களைச்செயற்படுத்தும்படிபோராட்டங்களை நடத்தினர்.
25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர் திரண்டு வந்து தமது கோரிக்கையை அழுத்தமாக முன்வைத்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் சிலர் கார்களுக்குத் தீவைத்தனர். பாகிஸ்தானின் பிரபல வர்த்தகரும், அரசியல் பிரமுகருமான சல்மான் ரசீர் இஸ்லாமிய மதச் சட்டங்களை விமர்சித்ததை அடுத்து இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது. அவர் இஸ்லாமிய மதச் சட்டங்கள் சாவுத் தண்டனையை ஊக்குவிக்கின்றன என மதச் சட்டங்களை விமர்சித்தும், சில சாவுத் தண்டனைகளை முன் உதாரணப் படுத்தியும் பேசியதை அடுத்து, மதத்தை இழிவு படுத்தும் நோக்கில் பேசுகிறார் என சல்மான் ரசீரைக் குற்றம் சாட்டி அவருக்கு எதிராகவும் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.
இந்த மாத ஆரம்பத்தில் பாகிஸ்தானில் சிறுபான்மை மதங்களான இந்து, கிறிஸ்தவப் பண்டிகைகளுக்கு முதன் முறையாக அரசு விடுமுறை பிரகடனப்படுத்தப்பட்டது. இதனைப் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தார். இந்த நிலையில் இந்த பிரகடனத்தை எதிர்க்கும் வகையில் தலிபான்களால் குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்டு 70 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன், 300க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.
(த-ரி4)



# ...த மாடியில்
# ...ம் தீ விபத்து

...குமாடிக் குடியிருப்பில் நேற்றுப் பெரும் தீ
...படவில்லை எனப் பொலிஸார் தெரி வித்துள்

...ில் தீப்பிடித்ததை அவதானித்த அதிகாரிகள்
...துத் தொடர்பில் அந்தப் பகுதி பொலிஸ் அதி
...காயங்களுக்கு ஆளாகியுள்ளார். கர்ப்பிணி
...த்தார்.
...தீவிபத்து இடம்பெற்றுள்ளது. இந்தத் தீ விபத்
...நேற்று அதிகாலை இந்த விபத்து எற்பட் டுள்
...றியப்படவில்லை என்றும், விசாரணைகள்
...னர். (த-ரி4)

# சவுதியுடன் உறவை பேண ஈரான் முயற்சி

தெஹ்ரான், மார்ச் 30
சவுதியுடன் நல்லுறவைப் பேண ஈரான் விரும்பினால் தனது நடத்தைகளை மாற்றிக் கொள்ள வேண்டும் என சவுதி வெளிவிவகார அமைச்சர் ஆதில் அல் ஜுபைர் தெரிவித்துள்ளார்.
சவுதி அரேபியாவுடனான அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்க தெஹ்ரான் விரும்புகிறது என ஈரான் ஜனாதிபதி ஹசன் ரூஹானி தெரிவித்துள்ள கருத்துத் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையிலேயே அல் ஜுபைர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
ஈரான் புரட்சி செய்யும் நாடாகவோ, புரட்சியாளர்களை ஏற்றுமதி செய்யும் நாடாகவோ இல்லாமல் சாதாரண நாடாக மாற வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (த)

# ...க்குக் கண்
## ...ம் தீர்ப்பு

கப்படுகின்றன. ரியா சட்டங்களான 'கண்ணுக்குக் கண்' எனும் விதிமுறைகள் அங்கு இன்னமும் நடைமுறையில் இருக்கின்றன. கடந்த வருடம், அசிட் தாக்கத்துக்கு ஆளான ஒருவரின் முறைப்பாட்டுக்கு அமைய, குற்றவாளி யின் இடது கண் பிடுங்கப்பட்டது. முதலில் இரு கண்களும் பிடுங்கப்பட வேண்டும் என தண்டனை வழங்கப்பட்ட போதும், பாதிக்கப்பட்ட நபரின் கோரிக்கைக்கு மதிப்பளித்து, 10 வருடச் சிறைத் தண்டனையுடன், குற்றப்பணமும் அறவிடப் பட்டது.
தற்போதைய ஜனாதிபதி ஹசான் றுஹானி பதவி ஏற்றபின்னர் ஆயிரத்து 800 சாவுத் தண்டனைகள்வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் குற்றங்களுக்கு அமையப் பொது மக்கள் மத்தியில் அடித்தல், கசையடி கொடுப்பது, உடல் உறுப்புகளைத் துண்டாடுவது போன்ற தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஈரானியர்களுக்கு அரசியல் சுதந்திரமோ, தனிமனித சுதந்திரமோ வழங்கப் படுவதில்லை என சர்வதேச அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-ரி4)

# இந்தோனேசியக் கடற்படையினர் 10 பேர் இஸ்லாமியப் போராளிகளினால் கடத்தல்
## உயிருடன் மீட்பதற்குப் பணப் பேரம்

ஜகார்த்தா, மார்ச் 30
இந்தோனேசியக் கடற்படைச் சிப்பாய்கள் 10 பேர் இஸ்லாமிய போராளி அமைப்பினரால் கடத்தப்பட்டுள்ளனர். அவர்களை விடுவிப் பதாயின் குறித்த தொகைப் பணம் செலுத்தப்பட வேண்டும்என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது என இந்தோனேசிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.
வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் அர்மனதா நசீர் தெரிவிக்கையில், போர்னியோத் தீவில் இருந்து நிலக்கரி இறக்குமதி செய்வதற்காக இரு படகுகளில் கடற்படைச் சிப்பாய்கள் சென்றபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. படகுகள் பற்றிய தகவல்கள் எமக்குக் கிடைக்கப் பெறவில்லை. ஆனால், ஒருவிசைப்படகும், தெப்பமும் கடத்தப்பட்டுள்ள நிலையில், படகின் உரிமையாளர்களுக்கு அபு சயுப் போராளி அமைப்பிடம் இருந்து கடந்த சனிக்கிழமை தொலைபேசி அழைப்புக் கிடைத்தது. இதன்போது பணப்பேரம் பேசப்பட்டது என அவர் தெரிவித்தார்.
அபு சயுப் எனும் இஸ்லாமியப் போராளிக் குழுவினர் குண்டு வெடிப்பு, கடத்தல் போன்ற சட்ட விரோதச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சனிக்கிழமை கடத்தப்பட்ட கடற்படைச் சிப்பாய்களை விடுவிப்பதாயின் தமக்கு பணம் செலுத்த வேண்டும் என இரு முறை தொலைபேசி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என வெளிவிவகார ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். ஆனால் தொகை தொடர்பாக அவர் எதனையும் குறிப்பிடவில்லை.
மேலும், இந்தச் சம்பவத்தில் பிலிப்பைன்ஸ் வெளிவிவகார அமைச்சும் தலையிட்டுள்ளது. தற்போது எமக்கான முக்கிய பொறுப்பு, எமது நாட்டவர் 10 பேரையும் மீட்க வேண்டும் என்பதாகும் என அவர் தெரிவித்தார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த பிலிப்பைன்ஸ் இராணுவ அதிகாரிகள், கடற்பரப்பு தொடர்ந்து நோட்டமிடப்பட்டுள்ளது. கடற்படை வீரர்களை மீட்பதற்கான ஆலோசனைகளை மேற்கொண்டுள்ளோம். பணப் பேரத்துக்கு நாம் ஒரு பொழுதும் இணங்கமாட்டோம் என மீண்டும் மீண்டும் வலியுறுத்தித் தெரிவித்துள்ளனர். (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணின் வெற்றிக்குப் பின்னாலும் பெண்ணே நிற்கிறாள்



**இன்று பல பெண்கள் உலகின் அத்தனை துறைகளிலும் தமது திறமைகளை வெளிக்காட்டி சாதித்து வருகிறார்கள். தாயாய், சகோதரியாய், தோழியாய் மனைவியாய், கலைஞராய், இலக்கிய வாதியாய், விளையாட்டு வீராங்கனையாய், விடுதலைப்போராளியாய் என பல்துறைகளிலும் தமது திறனை நிலைநாட்டி தமது தனித்துவ அடையா ளங்களோடு வெற்றி யடைந்திருக்கிறார்கள்.**

■ சி.ப.வேந்தன்

## கூறுகிறார் இளம் படைப்பாளி செல்வி மிஷாந்தி செல்வராஜா

திறமையால் இங்குமேனிலை சேர்வோம், தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம் எனும் பாரதியின் பாடல் வரிக்கு இலக்கணமாய் இன்று பல பெண்கள் உலகின் அத்தனை துறைகளிலும் தமது திறமையை வெளிக் காட்டிச் சாதித்து வருகிறார்கள். தாயாய், சகோதரியாய், தோழியாய் மனைவியாய், கலை ஞராய், இலக்கியவாதியாய், விளையாட்டு வீராங்கனையாய், விடுதலைப்போராளியாய் எனப் பல்துறைகளிலும் தமது திறமைகளை நிலை நாட்டி தமது தனித்துவ அடையாளங் களோடு வெற்றியடைந்திருக்கிறார்கள். பொதுவாக ஒரு ஆணிண் வெற்றிக்குப்பின் னால் ஒரு பெண்ணே இருப்பதாக எல்லோரும் கூறுவதுண்டு. ஆனால், ஆணுக்கு மட்டு மல்ல, ஒரு பெண்ணின் வெற்றிக்குப்பின் னாலும் ஒரு பெண்தான் இருக்கிறாள் என தனது வெற்றிக்குப் பின்னால் நின்று உழைத்திருக்கும் தனது தாயைப் பற்றிக்கூறி நெகிழ்ந்து கொள்கிறார் இளம் பெண் எழுத்தாளர் செல்வி மிஷாந்தி செல்வராஜா. 'மூன்றாம் முத்தம்' எனும் குறுநாவல் மூலம் தனது இலக்கியப் பயணத்தை ஆரம்பித்தி ருக்கும் அவரை, இளம்படைப்பாளிகளை வெளிக்கொண்டுவரும் உதயனின் புதன் பொய்கைக்காக சந்தித்தபோது....

சின்னவயதிலை இருந்தே எனக்கு எழுத் துத்துறையில் ஆர்வம் இருக்கு. கனகரத்தி னம் மத்திய மகா வித்தியாலயத்தில படிக் கேக்கை தமிழ்த்தினப் போட்டிகள் இலக்கியப் போட்டிகள் எண்டு கலந்துகொள்ளுறனான். அப்ப என்னை, காரை அருளானந்தம் ஆசிரியர்தான் நிறைய ஊக்குவிச்சு நான் தொடர்ந்து எழுதுறத்துக்கு ஆர்வத்தை ஏற்படுத்தித் தந்தவர். உயர்தரம் படிச்சுக்கொண்டி ருக்கும்போதே கவிதை, கட்டுரை, கதைகள் என்று எழுத ஊக்கப் படுத்தி, இப்போ வரைக்கும் என்னை வழிநடத்துறது அம்மாதான்.

என்ரை சின்ன வயசில் இருந்தே நீ நன்றாகப் படிக்க வேணும் நல்ல நிலையில இருக்கவேணும், சமூகத்தில ஒரு மதிக் கக்கூடிய ஆளாய் வரவேணும் என்று நெடு கலும் சொல்லுவா அம்மா. நான் சோர்ந்துபோற நேர மெல்லாம் எனக்கு நம்பிக்கையைத் தந்து என்னை உற்சாகப்படுத்துறது அம்மாதான். அம்மாவுக்கு இலக்கியம், இசை எண்டு நல்ல ஆர்வம் இருக்கு அவவாலை பொருளாதார நெருக்கடியால் தொடர்ந்து மேலை படிக்கமுடியாமல் போட்டுது. அப்ப அவ தன்ரை கனவுகள் ஆசைகள் எல்லாத்தையும் எங்கடை மூலமா நிறைவேத்த வேணுமெண்டு சொல்லி எங்களுக்காக நிறையக் கஷ்டப்பட்டவா. எங்கடை வீட்டில நானும், அக்காவும், அண்ணாவும். அம்மா நினைச்ச மாதிரி ஒரு நல்ல நிலையிலை இருக்கிறம். முதல்ல நான் க.பொ.த. சாதாரணதரத்திலை சித்தி யடையேல்ல கணிதபாடம் கிடைக்கேல்ல. நான் அப்பவே சோர்ந்து போய்விட்டேன் எங்கட சொந்தக் காறரெல்லாம் சேர்ந்து இனிப் படிப்புக் காணும் ஏதாவது கைத்தொழில் பழகட்டும் விடுங்கோ எண்டு சொல்ல அம்மாதான், இல்லை, உன்னாலை முடியும், நீ திரும்ப வும் பரீட்சை எழுது என்று எழுதச்செய்தவ. பிறகும் கணிதபாடம் கிடைக்காமல் சித்தியடையேல்ல. ஆனா என்னில நம்பிக்கை வைச்சு திரும்பவும் என்னை பரீட்சை எழுதவைச்சு மூன்றாம் முறை சித்தியடைஞ் சிட்டன். அதுக்குப்பிறகுதான் என்னிலையே எனக்கு நம்பிக்கை வந்து தொடர்ந்து படிச்சு பல்கலைக்கழகத் தில பட்டமும் வாங்கினேன். இதுக்கெல்லாம் என் னைவிட அம்மா என்னிலை வைச்ச நம்பிக்கைதான் காரணம் அதோட எங்கட ஊரிலதான் சரஸ்வதிக்குக் கோயிலே இருக்கு. அதாலைதானோ என்னவோ இந்த அரியாலை கிராமத்தில இருக்கிற பிள்ளைகள் எல்லாருக்கும் ஏதாவதொரு துறையிலை திற மையும் ஈடுபாடும் இயல்பாகவே இருக்கு என தனது ஊரை யும் தனது ஊரவரையும் பற்றிப் பெருமைப் பட்டுக்கொள்கிறார் மிஷாந்தி. மூன்றாம் முத்தம் புத் தகத்திலை நான் ஒரு குடும்பத்தின்ரை உறவுமுறையை மையமாக வைச்சுத்தான் இந்த கதையை எழுதி னனான். ஒரு தந்தைக்கும் மகளுக்கு மான உறவைப் பேசிற கதைதான் இது. உண்மையிலையே இன்றைய காலகட்டத்தில யாழ்ப்பாணத்திலை உறவுமுறைகளுக் குள்ளையே நிறைய விரிசல்கள் நிறையப் பிணக்குகள் ஏற்பட்டுக்கொண்டி ருக்கு. உறவுகளின் மகிமையை ஒருவரும் புரிஞ்சு கொள்ளுறதில்லை. அதைப்பற்றிப் பேசுற கதைதான் இந்த மூன்றாம் முத்தம். மூன்று வயதில காணாமற் போன தந்தைக்கும், மகளுக்கு மான இடைவெளிகளுக்குப் பின்னரான அழகான உணர்வை, உறவைப் பேசும் படைப்புத்தான் இது. நாடகம் மேடைப்பேச்சு என்று கொஞ்சம் கொஞ்சம் செய்திருக்கிறன். கவிதையும் ஓரளவு எழுதுவன் அடுத்த வருசம் கவிதைத்தொகுப்பொன்றை வெளி யிடும் எண்ணமும் இருக்கு. இப்பதான் ஆரம்பிச் சிருக்கிறன். இனிமேல் தொடர்ந்து எழுத இதில நல்ல தேர்ச்சியும் பக்குவமும் வரும் என்று நினைக்கிறன்.





ஆரம்பத்தில நான் படிச்ச மற்றப் பாடசாலை களிலை எனக்கு அங்கீகாரமும் சந்தர்ப் பமும் கிடைக்கேல்லை. கனகரத்தினம் மகாவித்தியாலயத்திலைதான் எனக்கான வெளி ஏற்படுத்தித்தந்தவர்கள் சண் முகநாதன் ஆசிரியர். சாந்தினி ஆசிரியர் . இவையளெல்லாம் எனக்கு பக்க பலமாய் நின்று ஆதரவு தந்தவை. அதையெல்லாம் என்னால மறக்கவே ஏலாது. கூடுதலா ஆசிரி யத் தொழில் தான் எனக்கு விருப்பம். ஒரு ஆசி ரியராலை மட்டும்தான் ஒரு மனிதனை அவனுக் குரிய முகத்தை அடையாளத்தை கொடுக்க முடியும். நான் படிச்சிட்டு கொஞ்சநாள் இருக்கேக்க முன்பள்ளியிலை ஆசிரியரா வேலை செய்தனான். அந்த நேரம் எனக்கு நிறையச் சந்தோசம் கிடைச்சது. அப்ப எனக்கு 300ரூபாதான் சம்பளம். ஆனாலும் எனக்கு அதில ஒரு மனநிறைவும் சந்தோசமும் கிடைத்தது. குழந்தைகளோடை பழகும் போது நல்ல பக்குவம் கிடைக்கும். பிரச்சினைகளுக்கூடாக வாழ்க்கையைக் கற்றுக் கொள்ள முடியும் ஒருக்கா ரெண்டுதரம் தோல்வி வரும் போது நிறையப்பேர் துவண்டு விடுகிறார்கள். திரும்பத் திரும்ப போராட வேணும். சும்மா வெற்றி கிடைக்காது. நிறையக் கஷ்டப்படவேணும் இது என்னுடைய அனுபவம் மூலமா கற்ற பாடம். எல்லாரிட்டையும் ஏதாவது ஒரு திறமை இருந்து கொண்டுதான் இருக்கும். அதைக் கண்டு பிடிச்சு வளர்த்துக் கொள்ளவேணும். என்ர திறமையை என்ரை அம்மாதான் எனக்கு அறி முகப்படுத்தினவா. இதுக்கெல்லாம் வெறும் வார்த்தைக ளாலை அவாவுக்கு நன்றி சொல்லி விட ஏலாது. இன்னும் நிறையச் சாதிச்சுத் தான் காட்டவேணும். கட்டாயம் செய் வேன் என தாயாரைப் பார்த்து நன்றி யுடன் கூறுகிறார் வளர்ந்துவரும் படைப்பாளி- மிஷாந்தி செல்வராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோருமே ஒரு அங்கீகாரத்துக்காகத்தான் உழைக்கிறார்கள்

## சொல்கிறார் திரைப்பட இயக்குநர் கவிமாறன்

சி.ப.வேந்தன்

ஈழத்துத் தமிழ்ச் சினிமா பல ஆண்டுகால வரலாற்றைக் கொண்டிருந்தாலும், ஏனோ அது இன்றுவரையும் தனக்கான ஓர் முத்திரையைக்கொண்டிருக்கவில்லை என்றே கூறலாம். சிங்கள சினிமா தன்னுடைய தனித்துவத்தை அல்லது முகவரியைப் பதித்துக்கொண்ட அளவுக்கு ஈழத்து தமிழ் சினிமா இன்னமும் தனது முகவரியைக் கண்டடையவில்லை என்பது வருத்தத்துக்குரியதே.

ஆரம்பக்காலங்களில் குத்துவிளக்கு, பொன்மணி போன்ற அற்புதமான படைப்புக்கள் எம்மவர் மத்தியிலே படைக்கப்பட்டிருந்தாலும், ஏனோ அதன் தொடுகோடு பின்னர் இடைவிட்டுப் போயிற்று. போரின் தாக்கம் தமிழர் பிரதேசங்களிலே கூடுதல் தாக்கத்தைச் செலுத்தியிருந்ததால், இது நிகழ்ந்திருக்கலாம் என்பதை நாம் ஏற்றுக்கொண்டாலும், அந்த நெருக்குவாரகாலங்களிலும்கூட, போர்க் கதைகள்பேசிய பல நல்ல தனித்துவமான சினிமாக்கள் உருவாகியதென்பது காலமறிந்த மாபெரும் உண்மை. வெறுமனே போர் பற்றிப்பேசாமல் எம்மின வாழ்வியல், வரலாறு, யதார்த்தம் பற்றிப் பேசிய மிக அழகான படைப்புக்கள் இங்கே படைக்கப்பட்டன. போரின் பின்னாலும் பெரிய தேக்கம் தோன்றலாயிற்று. இப்போது மீண்டும் ஈழத்துத்தமிழ்ச்சினிமா மெல்ல மெல்ல தனது படைப்பியக்கத்தைத் தொடங்கியிருக்கி றது. ஈழத்துத் தமிழ்ச் சினிமா இடைவெளிகளோடு கூடியதான பல காலஅடிப்படையைக் கொண்டு இயங்கிவருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. இப்போது அது தன்னுடைய இன்னொரு கால வருகையைத் தொடங்கியிருக்கிறது. அதில் அங்கொன்றும் இங்கொன்றுமாக பல கலைஞர்கள் தமது வருகையை ஈழத்தமிழ் சினிமா அரங்கில் பதித்து வருகிறார்கள். அந்த வகையில் 2011ம்ஆண்டு 'கரும்பலகை' எனும் குறும் படம் மூலம் தனது வருகையைத் தொடங்கி 2012 இல் 'என்னுள் என்ன மாற்றமோ' 2015 இல் 'அச்சம் தவிர்'; எனும் முழுநீள திரைப் படங்களையும் 'நெஞ்சுக்குள்ளே'. 'ஜப்னா' எனும் குறும்படங்களை இயக்கியும் 'வள்ளுவன்', 'பழி', 'இலவு', 'இவன்தந்தை' எனத் தொடரும் பல குறும்படங்களில் நடித்தும் வரும் கவிமாறன் இயக்கம் தயாரிப்பு, நடிப்பு எனப் பல தளங்களில் இயங்கி வருபவர். அவருடைய சினிமா வருகையையும் அனுபவங்களையும் பற்றி அவரோடு புதன் பொய்கைக்காக உரையாடியபோது....

நான் க.பொ.த. உயர்தரம் படிச்சுக்கொண்டிருக்கேக்கையே குறும்படம் செய்ய வெளிக்கிட்டன். வீட்டிலை ஒருத்தரும் ஒத்துழைப்புத் தரேல்ல. நான் படமெடுக்கிறன் எண்டு வெளிக்கிட வீட்டுக்காறர் சரி பெடியன் வீணாய்ப் போகப் போறான் எண்டுதான் நினைச்சு தடுத்தவை. நான் செய்யப் போறன் எண்டு நிண்டதாலை, சரி என்னண்டாலும் செய் எண்ட மாதிரி விட்டிட்டினம். ஆனாலும், நான் எனக்கிருந்த ஆர்வத்தாலை அதிலை உறுதியாய் நிண்டு செய்ய வெளிக் கிட்டன். இப்ப அதில நான் ஓரளவு வெற்றியடைஞ்சாப் பிறகு என்னை அடையாளப்படுத்தினாப் பிறகு அவைக்கு நம்பிக்கை வந்திட்டுது.




தொடக்கத்திலை நான் இதில விருப்பம் வந்து செய்ய வெளிக்கிடேக்கை, சிங்கள சினிமாக் காரரிட்ட எல்லாம் போய் உதவியா நிக்க சந்தர்ப்பம் கேட்டனான். ஒருத்தரும் தரேல்லை பிறகு பல்கலைக்கழகத்திலை படிக்கேக்கை சிநேகிதப் பெடியளிட்ட காசு சேத்தனான். வர்த்தக ரீதியாக முதல்முதலாக கிருபா அண்ணேட்டை போய்க் கேட்டனான். இப்பிடி கொஞ்சம் கொஞ்சமா சேத்துத்தான் படம் செய்தனான். அதாலதான் இப்ப எனக்கு ஒரு அடையாளம் கிடைச்சிருக்கு. எல்லாருமே ஒரு அங்கீகாரத்துக்காகத் தானே பாடுபடுறாங்க. சிலபேர் சொல்லீனம், சமூகத்துக்கு ஒத்துவராத மசாலாப் படங்களை நான் செய்துகொண்டுவாறன் எண்டு, அப்பிடியில்லை. இப்ப நாங்கள் எதைச்செய்தாலும் இளைய சமுதாயத்தை வைச்சுத்தான் செய்யவேண்டி இருக்கு. அப்ப அவைக்கு ஏத்தமாதிரித்தான் நாங்கள் எதையெண்டாலும் முன்னெடுக்க வேண்டி இருக்கு. அவைக்குப்போய் கருத்துச்சொல்லுறன் எண்டுபோட்டு, எதையாவது சொல்லப்போனா அவையள் கேக்கப்போறதில்லை. அப்ப அவைக்கேத்தமாதிரி போய் அதில, நல்ல சமூகத்துக்குத் தேவையான கருத்துக்களைச் சொன்னா? அவையள் அதை ஏற்றுக்கொள்ளுவினம். கொஞ்சம் கொஞ்சமாத்தான் நல்ல விடயங்களைச்சொல்லலாம்அது தான் உண்மை. உதாரணமா என்ரை முழுநீளப் படமொண்டு வெளியீடு செய்து திரையரங்கில சிறப்புக்காட்சி ஓடிக்கொண்டிருக்கு. அப்பதிலரெண்டுதொலைபேசி வருது படத்தை நிப்பாட்டச் சொல்லி. ஏனெண்டு கேட்டா திரைப்படக் கூட்டுத்தாபனத்தின்ரை அனுமதி இல்லாம படம் ஓடுறம் எண்டு பிறகு அதிலை பிரச்சினைகள் நடந்தது. அந்த நேரமெல்லாம் எங்களுக்கெண்டு ஒரு சங்கம் இருந்து தெண்டா இந்தமாதிரிப்பிரச் சினைகளுக்கு தலையிட்டு தீர்த்து வைச்சிருக்கும். படப்பிடிப்பு எடுக்கேக்க பிரச்சினை வரும். வெளியிடேக்கபிரச்சினைவரும். அதுகளை அமைப்பு மூலமாத் தீர்க்கலாம். இது சம்மந்தப்பட்ட எல்லாரும் முன்வந்து இதைச் செயற்படுத்த வேணும். இப்படி பல சிக்கல்களுக்கு நடுவிலை தான் நாங்க இயங்கிக்கொண்டு வாறம் அதுக்கு இதிலை இருக்கிற ஈர்ப்பும் திருப்தியும் தான் காரணம். இவ்வளவு நாளும் வெளிநாட்டுத் தயாரிப்பாளர்கள்தான் எங்கடை படைப்புக்களைத் தயாரிச்சவை. ஆனா இப்ப உள்ளூரில இருக்கிற எங்கடை பெரிய பெரிய வர்த்தகர்கள் எல்லாரும் தயாரிக்க முன்வந்திருக்கினம். இது ஆரோக்கியமா இருக்கு. மெல்ல மெல்ல எங்கட சினிமாவும் முன்னேறும் எண்ட நம்பிக்கை வந்திருக்கு. பழைய கலைஞர்கள் மாரையும் என்ரை படத்தில நடிக்க வைச்சிருக் கிறன். சில பேராலை நாடகத் தன்மையிலை இருந்து விடுபட முடியேல்லை. அது கொஞ்சம் கஷ்டமா இருக் குது. ஆனா சிலபேர் ரெண்டுக் குமான வித்தியாசத்தை உணர்ந்து நடிக்கினம். இப்ப தொழில் நுட்ப வசதிகள் இருக்கிறதாலை நிறையப்பேர் படம் எடுக்க வேணும் எண்டு வாறாங்கள். ஒண்டு ரெண்டோடயே துறைய விட்டுஒதுங்கிப்போயினம். ஆனால் அதிலை வெறித்தனமாகவும், அர்ப்பணிப்போடையும், எந்தப் பிரச்சினை வந்தாலும் சமாளிச்சு இயங்கிற வன்தான், முன்னேறலாம். இது என்ர அனுபவத்தில நான் கண்ட உண்மை என்றார்- கவிமாறன்.











## நூல் அறிமுக நிகழ்வு

உயில் கலை இலக்கிய சங்கத்தின் ஏற்பாட்டில் ஈழத்தின் முதலாவது தமிழ் இலக்கிய இதழாகிய 'மறுமலர்ச்சி' இதழ்களின் தொகுப்புக்கான (1946-1948) நூல் அறிமுகநிகழ்வு, கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மண்டபத்தில் எழுத்தாளர் கோப்பாய் சிவம் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் அறிமுகவுரையை மருத்துவர் எம்.கே முருகானந்தன் (எழுத்தாளர்) நிகழ்த்தினார். கருத்துரைகளை எழுத்தாளர்கள் இராகவன், த. அஜந்தகுமார் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சு. ஜீவசுதன் நிகழ்த்தினார். நிகழ்வில் அறிமுகப்பிரதிகளை கரவெட்டி பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் சார்பில் கலாசார உத்தியோகத்தர் அ.சிவஞானசீலனும், வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகத்தின் சார்பில் சு. குணேஸ்வரனும் பெற்றுக்கொண்டனர். நிகழ்வில் ஏற்புரையையும் நன்றியுரையையும் செல்லத்துரை சுதர்சன் நிகழ்த்தினார். (108)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை உருக்கி கொள்ளை கொண்ட பைங்கிளிகளின்

## பரதநாட்டிய அரங்கேற்றம்

பரதகலாவித்தகர்:
துவாரகா கிருபாமூர்த்தி
கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.



அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோயில் அருளக நுண்கலைக்கல்லூரி மாணவிகளது பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த மாதம் 21 ஆம் திகதி பிற் பகல் 3மணிக்கு வவுனியா கலாசார மண்டபத்தில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் (தலைவர், கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், வவுனியா) தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ்.மேல்நீதிமன்றநீதிபதி மா. இளஞ்செழியன்கலந்து கொண்டார். கௌரவ விருந்தினராக திருமதி விஸ்வரூபன் (ஆணையாளர், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாணம்) கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக கலைஞர்வேல் ஆனந்தன் (முது நிலை ஆடற்கலை ஆற்றுகையாளர், ஓய்வுநிலை அழகியற்கலை உதவிக் கல்விப் பணிப்பாளர், வடக்கு கிழக்கு மாகாணம்) கலாநிதி அருட்செல்வி கிருபைராஜா (சிரேஷ்ட விரிவுரையாளர், நடனத்துறை, யாழ். பல்கலைக்கழகம்) கலாநிதி ஷார்மிளா ரஞ்சித்குமார் (சிரேஷ்ட விரிவுரையாளர், நடனம், தலைவர் - நடன, நாடக அரங்கியல்துறை, கிழக்கு பல்கலைக்கழகம்) ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

வவுனியாவின் புகழ்பூத்த நடன ஆசிரிய ஆலோசகராக விளங்கும் திருமதி சூரியயாழினி வீரசிங்கத்தின் மாணவிகளான செல்விகள் சுபாஜினி இராமக்கவுண்டர், ரிஷிகா செல்வராசா, தனுஷா சசிகரன், பிரியதர்சினி குணசேகரம், யானுகா தியாகலிங்கம் ஆகிய ஐந்து மாணவிகளும் தமது அரங்கேற்ற நிகழ்வை நடத்தினர்.

பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய வரலாற்றுப் புகழ் மிக்க ஒருஅம்சமாக இந்த அரங்கேற்ற நிகழ்வு அமைந்தது. பெற்றோருடன் வாழும் பிள்ளைகள், பெரும் செல்வந்தப் வீட்டுப் பிள்ளைகள் கூட நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு அருளக செல்வங்களது அரங்கேற்றம் சிறப்புற அரங்கேறியது.சிலர் இல்லங்களில் குழந்தைகளைப் பராமரித்தால் போதும் என்று கூறும் பொழுது,அருள்மிகு



அகிலாண்டேஸ்வரர் அருளகம், குழந்தைகளைத் தத்தெடுத்து கல்வி புகட்டி பல்கலைக்கழகம் வரை கற்பித்து அத்தோடு இசை, மிருதங்கம், வயலின், நடனம், பண்ணிசை எனத் தனது அருளக சிறுவர் இல்ல மாணவர்களுக்கு நுண்கலைகளையும் கற்பித்து இன்று அரங்கேற்றம் காணுமளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளது.

குறித்த நேரத்துக்கு ஆரம்பிக்காவிட்டாலும் மங்கள விளக்கேற்றலுடன் சரியாக பிற்பகல் மூன்று மணிக்கு அரங்கேற்றம் ஆரம்பமாகியது. நடராஜர் பூசை நடைபெற்று சிதம்பரம் புகழ் இசைமைந்தன் சிவமைந்தனின் குரலில் இளஞ் சுடர் ஞானவேல் வசந்தின் மிருதங்க இசையிலும், குகவரனின் வயலின் இசையிலும், நக்கீரனின் புல்லாங்குழல் இசையிலும்,திருமதி சூரிய யாழினி வீரசிங்கத்தின் நட்டுவாங்கத்திலும் அரங்க ஆடலசைவு ஆரம்பிக்கின்றது. பொற் கோவிலுக்குள் நுழைவது போன்று அரங்க அமைப்புடன் அரங்கம் காட்சியளித்தது. 'தத்தோடத் தாம் டண்டண்' என்ற இராகத்துடன் புஸ்பாஞ்சலி ஆரம்பிக்கின்றது. மிகவும் விறுவிறுப்பாக ஆரம்பமே களை கட்டுகிறது. ஐவரும் ஒருவர் போலக் காட்சியளித்ததுடன் மிகவும் நளினமாகவும் அங்க சுத்தத்தோடும் ஆடினார்கள். புஸ்பாஞ்சலியைத் தொடர்ந்து விநாயகர் ஸ்துதி சதுஸ்ர ஏக அலாரிப்பு இடம்பெற்றது. தொடர்ச்சியாக முப்பது நிமிடங்களுக்கு மேல் ஐவரும் ஒன்றாக ஆடினார்கள். பாடலா, ஆடலா பக்க இசைகளா எதை இரசிப்பது,எல்லாமே ஒன்றோடொன்று குழைந்து காதுக்கும் கண்ணுக்கும் நல்விருந்தாக உள்ளத்துக்கு நிறை வைத் தந்தது. அடுத்து இராக மாளிகையில் தாளமாளிகையில் அமைந்த தோடைய மங்களம் மிகவும் சிறப்பாக இருந்தது. அடுத்து வந்த சப்தம் நிகழ்வுக்கு திருமதி சூரிய யாழினி வீரசிங்கம் பாடல் வரிகளை எழுத இசைமைந்தன் சிவமைந்தன் இசையமைத்திருந்தார். வன்னி நகரில் குளக்கரையில் வீற்றிருக்கும் விநாயகர் என ஆரம்பிக்கும் இதில்,வன்னி நகரின் சிறப்பு, கஜமுகனை சங்கரித்தமை விநாயகர் மாங்கனி பெற்றமை, தொந்தி வயிறு சரிந்து குலுங்க நடனம் ஆடிய காட்சிகள் மிகவும் அழகாக நாட்டியஅமைப்புச்செய்யப்பட்டிருந்தன. மிக மிக அற்புதமான பாவம்.ஐவரும் ஒன்றிணைந்து ஆடியமை சிறப்பம்சமாகும்.

> நாட்டிய ஆசிரியரே பொன்னாலை வரதராஜப்பெருமானை நாயகனாகச் சித்திரித்து இதற்கான பாடல்வரிகள் யதிகள் என்பவற்றை எழுதி நாட்டிய அமைப்புச் செய்திருந்தார்.

அடுத்த உருப்படியான அரங்கேற்றத்தில் நடுநாயகமாக விளங்கும்உருப்படியான பதவர்ணம்தொடர்ச்சியாக 50 நிமிடங்கள் இடம்பெற்றது. நாட்டிய ஆசிரியரே பொன்னாலை வரதராஜப்பெருமானை நாயகனாகச் சித்திரித்து இதற்கான பாடல்வரிகள்,யதிகள் என்பவற்றை எழுதி நாட்டியஅமைப்பும் செய்திருந்தார். செல்வன் இசைமைந்தன், திருமதி அருந்ததி ரவீந்திரன் இணைந்து இசையமைத்திருந்தார்கள். உண்மையிலேயே சபையை மெய்மறக்கச் செய்த உருப்படி, ஆசிரியரின் யதியமைப்பு,பஞ்சநடைகளிலும், கோர்வைகளுக்கேற்ப சுரக்கோர்வைகள், பாடலுக்கேற்ப இரசித்து இரசித்து பார்க்கக்கூடிய சஞ்சாரி பாவங்கள்? இதில் எதையென்று விவரிப்பது?

சிவமைந்தனின் ராக ஆலாபனையோடு பாடப்பட்ட பாடலையா? நட்டுவாங்கத்தையா எல்லாவற்றுக்கும் மேலாக சிறிய பையனாகவும் சுட்டிப் பையனாகவும் இருந்து வன்னியூர் கண்ணதாசன் எனப்போற்றப்படும் ஞானவேல் வசந்தின் மிருதங்க வாசிப்பையா? குகவரனின் வயலின் இசை, நக்கீரனின் புல்லாங்குழல்இசையையா? இவற்றை மிஞ்சி பஞ்ச பாவைகளும் ஒரே விதமாக சளைக்காமல் ஆடிய ஆடல்திறமையையா? வாமனஅவதாரம், பாஞ்சாலி சபதம், இரணியன் வதம், கண்ணனின் குறும்பு, கம்சன் வதை, என பொன்மகன் மகிழ்ந்து கூடும் ராஜன், பொன்னாலைப் பதி வரதராஜன் என சரணத்தில் உச்சக் கட்டத்துக்கு வர்ணம் செல்லும் காட்சிகளையா? உண்மையிலேயே வன்னிக் கலைஞர்களிடம் இவ்வளவு திறமைநிறைந்துள்ளதா? என எல்லோரையும் மெய்சிலிர்க்க வைத்தது லதாங்கி ராகத்தில் அமைந்த பதவர்ணம். பாவம், தாளம், அபிநயம், ஆடையலங்காரம், ஒப்பனை, இசை, நட்டுவாங்கம், பின்னணி இசை, இவை எதிலுமே ஒரு குறை கூற முடியாத அளவுக்கு இவ்வுருப்படி அமைந்தது. இரசிகர்களின் கரகோசம் விண்ணைப் பிளந்தது.

இங்கே ஒருவரே தனித்துப் பாடல்களை எழுதி,யதிக்கட்டுகளை அமைந்துநடனஅமைப்புச்செய்வதேன்பது, எல்லா நடன ஆசிரியர்களாலும் இலேசில் ஆற்ற முடியாததொரு காரியமாகும். இது திருமதி சூரிய யாழினி வீரசிங்கத்துக்குரிய தனிச் சிறப்பாகும். அதுதான் இவருக்கு "முத்தமிழ் சுரபி" என்ற பட்டம் கிடைத்ததோ? பொருத்தமான பட்டம் என்பதை ஆடலாசிரியர் நிரூபித்திருந்தார்.

பெரிய சூறாவளி ஓய்ந்தது-போல வர்ணம் நிறைவு பெறுகின்றது.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவையாள் – பிரதேச பண்பாட்டு மலர் ஒரு வன்னியின் வரலாற்று ஆவணம்

வித்தியா சிரோன்மணி
ந. பார்த்தீபன்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் பண்பாட்டுப் பேரவையின் நான்காவது இதழாக மணம் பரப்பி நிற்கிறது "புதுவையாள்" பிரதேச பண்பாட்டுமலர். வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் இந்த மலர் வெளிவந்திருக்கிறது.

கவர்ச்சியான அட்டைப்படம் மலரை அலங்கரிக்கிறது. மரம் ஒன்றின் கீழ் கலைக்குடும்பம் ஒன்று அமர்ந்திருக்க மெல்ல மெல்ல இருள் விலகி ஒளி பெறும் வகையில் அட்டைப்படம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. கலை ஒளி எங்கும் பரவவேண்டும் எனும் அர்த்தபுஷ்டி அட்டையில் தொனிக்கிறது.

நூலினுள்ளே 18 ஆக்கங்கள் கன கச்சிதமாகத் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் முதலாவதாகவும், மலருக்கு முத்தாய்ப்பாகவும் அமைந்துள்ள கட்டுரை 'அடங்காப்பற்று வன்னிப் பிரதேசத்தில் சிவலிங்க வழிபாடு' என்ற கட்டுரையாகும். அண்மைக் காலத்தில் ஆரோக்கியமான அத்தியாவசிய பணியை செய்து வருபவர் அருணா செல்லத்துரை. அவரது பேச்சும், எழுத்தும் வன்னிப் பிரதேச வரலாற்றை ஆதார பூர்வமாக ஆவணப்படுத்துகின்றன. வன்னியில் சிவலிங்கவழிபாடு தொடர்பாக விளக்கப்படங்களுடன் சுட்டும் ஆசிரியர், எமது மக்களின் போக்கை, இலங்கை மக்களின் மத்தியில் படித்த சமூகம் முதல் பாமரர்வரை தென்னிந்திய வழிபாட்டு முறைகள் மற்றும் இலக்கியங்களில் ஊறிப்போன காரணத்தால் இலங்கை பற்றிய வரலாறுகள் முறையாக ஆய்வு செய்யப்படாததால் இனி வரும் காலங்களில் இலங்கைத் தமிழரின் புராதனம் மேலும் குழிதோண்டிப் புதைப்பதற்கான சாத்தியங்கள் அதிகம் தென்படுகின்றன" எனக் குறிப்பிடுவதை பார்க்கும்போது, எமது ஆர்வமின்மையும், அறியாமையும் தெளிவுபடுத்தப்படுகிறது.

கலாநிதி சி.க.சிற்றம்பலம் அவர்களின் 'வன்னி நாடும் வாழ்வியற் சான்றுகளும்' என்ற கட்டுரை வன்னியின் புராதனத்துக்குத் தக்க சான்றுகளை முன்வைக்கிறது. வவுனியா பெரிய புளியங்குளத்தில் "தமிழ்" என்ற பெயர் கொண்ட கல்வெட்டும், முல்லைத்தீவில் கண்டெடுக்கப்பட்ட நாணயங்களும் தமிழனின் கிறிஸ்துவுக்கு முந்திய வரலாற்று ஆதாரத்தை முன்வைக்கின்றன.



பல ஆண்டுகளுக்கு முன்னரான குமரிக் கண்டத்தின் தமிழர் வரலாறுகளை அச்சொட்டாக ஆதாரத்துடன் விளக்கியிருக்கிறார் தனபாக்கியம் குணபால சிங்கம். தமிழ் பற்றியும் தமிழன் பற்றியும் பல ஆச்சரியம் மிக்க தகவல்கள் அவரால் வித்தியாசமான பார்வையில் முன் வைக்கப்பட்டிருப்பது. உலகின் ஆதி இனமாக தமிழனை அடையாளப்படுத்துவதாக அமைந்துள்ளது.

கைத்தொழில் உத்தியோகத்தர் செ. சத்சீவனின், பதுவில், பற்றிய கட்டுரை, பதுவில் பிரதேசம், சைவமணம் கமழும் ஒரு பிரதேசமாக விளங்கியமையை அடையாளப்படுத்துகின்றது. இவை ஆவணப்படுத்தப்ப வேண்டிய தேவைக்குரியவை என்ற உணர்வைக் கட்டுரை ஆசிரியர் தெளிவாக்குகிறார்.

வன்னியின் இலக்கியச் சொத்தாக வலம் வருபவர் கலாநிதி அகளங்கன். அன்னாரின் 'வன்னிப் பிரதேச வயற் பண்பாடு' எனும் கட்டுரை, கிராமிய வாசனை யோடு கூடிய சிறப்புடையது. கால நதியில் நாம் இழந்துவரும் எமது அடிநாதமான விவசாயத்தின் மரபுகள் அனைத்தையும் இந்தக் கட்டுரையில் அவர் வழங்கியிருக்கிறார். காடு வெட்டுதல் முதல் அறுவடை வரை எமது வன்னி மண்ணில் நடைபெற்ற நிகழ்வுகளைப் பலர் மறந்தாலும் இந்தக் கட்டுரை மீட்டுப் பார்க்க வைத்திருக்கின்றது.

'வன்னிப்பிரதேசகவிஞர்கள் – ஒருதொகுதி நிலை ஆய்வு' என்கின்ற சு. ஜெயச்சந்திரனின் கட்டுரை. காலத்தின் தேவை அறிந்தபணி. இதுவரையில் எவரும் தொட்டிராத விடயத்தை காலவரையறையில் தந்திருக்கிறார். வன்னியின் கவிதைப் பாரம்பரியத்தில் வவுனியா, முல்லைத்தீவுக் கவிதைகளின்போக்கை, கதிரைமலைப்பள்ளு தொட்டு, நவீன கவிதை வரை அவர் தொகுத்து விளக்கியமை இனி வரும் ஆய்வாளருக்கும் ஒரு வழியைச் சமைத்திருக்கிறது என்றால் மிகையாகாது.

முல்லைத்தீவு மாவட்ட மீன்பிடி வளம் பற்றி அதிபர் க. ஞானேஸ்வரன் ஒரு முழுமையான ஆய்வுரீதியில் தனது கட்டுரையைத் தந்திருக்கிறார். அவரது விளக்கப் படங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தின் மீன்பிடியின் தொன்மையான நிகழ்வுகளைக் கண்முன் நிறுத்துகின்றன. அத்தோடு மீன்பிடியின் அபி விருத்திக்கான வழிமுறைகளையும் அவர் முன்வைப்பது கட்டுரை ஆசிரியரின் ஆழமான தேடலுக்கும், புதுவையாளின் கனதிக்கும் வழிவகுத்திருக்கின்றன.

முல்லை மாவட்ட நாட்டார் இலக்கியம் என்ற தலைப்பில் சாகித்திய ரத்னா முல்லை மணி பயனுள்ள ஒரு கட்டுரையைத் தந்திருக்கிறார். வன்னிப் பிரதேச மக்களின் வாய்மொழி இலக்கியத் திறமைகள் அவரால் ஒன்று கூட்டி இங்கு தரப்பட்டுள்ளன. பள்ளு, சிந்து, கதைப் பாடல்கள், கேலிப்பாடல்கள், நாட்டார் கதைகள், பழமொழிகள் எனப் பல்வேறு நாட்டாரியல் தன்மையையும் அழகுற இக்கட்டுரை தந்திருக்கிறது.

'புதுவையாள்' இரண்டு ஆளுமைகளைப் பதிவு செய்துள்ளது. ஒன்று சரவணபவன், மற்றையது முல்லைமணி இவ்வகையில் பிரதேசவாரியான ஆளுமைகளின் திறமை வெளிக்கொண்டு வரப்பட வேண்டியது ஒரு பிரதேச மல ரின் பணியாகிறது. இப் பணியைப் 'புதுவையாள்' நிறைவு செய்திருக்கின்றது.

பிரதேச செயலகங்களின் தேவை பற்றிய ஜெயம் ஜெகனின் கட்டுரை காலத்தின் தேவை கருதிய ஒருகட்டுரை எனலாம். எமது மக்களின் புராதன வாழ்வியல் முறை, பிரதேச தொன்மை, அருகிவரும் பொருள்களைச் சேமிப் பதன் தேவை, பிறநாட்டவருக்கு எமது பண்பாடுகளை அறியப்படுத்துவதன் அவசியம், புராதன சின்னங்களைப் பேணுதல் போன்ற முறைகளால் இனிமேலாவது தமிழன் பாரம்பரியம் பேண மக்களுக்கு அறைகூவல் விடுக்கிறது இந்தக் கட்டுரை..

எம்மிடையே வாழ்ந்து மறைந்த கலாநிதி காரை சுந்தரம்பிள்ளையின் மகிடிக் கூத்துப் பற்றிய கட்டுரை, அழிந்துவரும் கிராமியக் கலைகளை மீளுருவாக்க வேண்டும் என்கின்ற முனைப்பைத் தருகிறது. இன்று பலருக்கும் மகிடிக் கூத்தைப்பற்றி விவரம் எதுவும் தெரியாது. மகிடிக்கூத்து என்றால் இது தான் என்ற வகையில் அவரது கட்டுரை எம்முன்னே இந்தக் கூத்தை நிலை நிறுத்தியிருக்கிறது. இது போல எத்தனையோ கிராமியக் கலைகள் எம்மை விட்டு அழிந்து செல்கின்றன. இவற்றை எல்லாம் தேடிப் பெற்று ஆவணப்படுத்த வேண்டியது எமது கடமையாகும்.

இறுதியாக முல்லை மாவட்டத்தில் வழங்கும் சிந்து வகைப்பாடல்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. ஆவணப்படுத்துவதும் ஒரு பிரதேச மலரின் கடமை என்பதை புதுவையாள் ஏனைய பிரதேச மலர்களுக்கும் அறிவுறுத்தியிருப்பது அவள் வருகையின் சிறப்பு ஆகும்.

ஒட்டுமொத்தமாக இந்தப் பெரிய முயற்சியின் பிரசவம் நிறைவாக அமைந்திருப்பதை இந்த நூலை வாசிப்போர் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றவகையில் இம்மலர்க் குழுவினர் செயற்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. தொடரட்டும் அவர்களின் பணி, இவ்வாறான மலர்கள் தொடர்ந்தம் வெளிவந்து தமிழனின் இருப்பை நிலைநாட்ட வேண்டும் என நாம் எதிர் பார்ப்பதோடு புதுவையாள் பல்லாண்டு மலர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

சிரேஷ்ட விரிவுரையாளர்,
தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா.




'மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல்' எனும் நூல் வெளியீடு வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.சிறீஸ்கந்தராசா தலைமையில் கடந்த 13-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் பேராசிரியர் க.சின்னத்தம்பி கலந்து கொண்டார். வன்னி நாடாளு மன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தன், காதர் மஸ்தான், வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராசா, வவுனியா கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி கு.சிதம்பரநாதன் ஆகியோரும் அதிபர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்களும் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாடுவோம் கற்போம் முன்பள்ளி ஆசிரியர் வள வழிகாட்டி நூல் வெளியீடு

கலாநிதி பா.தனபாலன்

மனித வாழ்க்கைக் காலப் பருவங்களில் முன்பள்ளிப் பருவம் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். எதிர்காலச் சந்ததியினருக்கு மிகச் சிறந்த அத்திபாரம், முன்பள்ளிகளினூடாகவே இடப்பட வேண்டும். இலங்கையில் முன்பள்ளிக் கல்வித்துறை இன்றும்கூட வளர்க்கப்பட வேண்டிய நிலையிலேயே உள்ளது. இது எமது வடக்கு மாகாணத்துக்கும் பொருந்தும். இந்த நிலையில் கடந்த வாரம் வடக்கு மாகாண ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவால் 'விளையாடுவோம் கற்போம்' என்ற முன்பள்ளி ஆசிரியர் வள வழிகாட்டி நூல் வெளியிடப்பட்டுள்ளமை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

கருவிலிருந்தே குழந்தை கற்க ஆரம்பித்து விடுகின்றது. பிறந்து ஐந்து வயது வரை முன்பள்ளிக் காலத்தில் விளையாட்டுசெயற்பாடுகள் மூலம் பிள்ளை பெறும் அனுபவங்கள் அதன் எதிர்கால வாழ்க்கைத் தேர்ச்சிக்கு மிக முக்கியமானதாகும். அதற்கான பயிற்சிக் களம் முன்பள்ளிகளாகும். இவை இன்று, ஆரம்பப் பிள்ளைப் பருவ விருத்தி நிலையங்கள் என அழைக்கப்படுகின்றன. இவற்றைச் சனசமூக நிலையங்கள், பொது அமைப்புக்கள், மத நிறுவனங்கள், தனியார் எனப் பல தரப்பினர் நடத்தி வருகின்றனர். இவர்களுக்கிடை யேயான ஒருங்கிசைவையும், இயைபாக்கத்தையும் தேசிய ரீதியில் சிறுவர் செயலகம் ஒழுங்கமைத்து வருகின்றது.

மாகாண சபைகள் அதிகாரம் பெற்ற காலத்திலிருந்து முன்பள்ளிகளை உயிர்த் துடிப்பாகச் செயற்பட வைக்க அவை நடவடிக்கைகளை எடுத்தன. வடக்கு மாகாணத்தில் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு சிறப்பாக இயங்கி வருகின்றது. இந்த வகையில் முன்பள்ளிகளைத் தரமாக்க ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், பௌதிக வளம், கலைத்திட்டப் பிரயோகம், முன்பள்ளி நிர்வாகிகளுக்கான முகாமைத்துவ செயன்முறைகள் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. இதில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பொருத்தமான ஊதியம் வழங்கலில் மாகாண சபைகள் அக்கறை செலுத்த வேண்டும்.

**நூல் வெளியீடு**

'விளையாடுவோம் கற்போம்' என்ற நூல் வெளியீடு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மிகுந்த பயனைத் தரவல்லது. முன்பள்ளி ஆசிரியர் வள வழிகாட்டி என்ற வகையிலேயே இந்த நூல் வெளிவந்துள்ளது. முன்பள்ளி ஆசிரியர்களின் செயலாற்றுகைக்கு உதவும் ஏற்ற வழிகாட்டி நூல்கள் பொருத்தமாக இல்லாத சூழலில், விளையாட்டு அல்லாத விளை யாட்டு என்ற நூலை மீளாய்வு செய்து, தற்காலத்துக்கு ஏற்றவாறு செயற்பாடுகளையும், கற்பித்தல் முறைகளையும் உள்ளடக்கியதாக மாற்றியமைத்து, 'விளையாடுவோம்' கற்போம் என்ற இந்த நூல் வெளியீடு செய்யப்பட்டுள்ளமை இன்றைய காலத்தின் முக்கிய தேவையை நிறைவேற்றுவதாகவுள்ளது.

இந்த நூலில் வழிகாட்டியைப் பயன்படுத்தும் முறைமுன்பிள்ளைப் பராயக் கல்வி தொடர்பான அறிமுகம், முன்பள்ளி ஆசிரியர்களின் பங்கு, கற்பித்தலில் ஒன்றிணைந்த அணுகுமுறை தொடர்பான விடயங்கள் போன்றவை எடுத்தியம்பப்பட்டுள்ளன. பிள்ளையின் உள்ளார்ந்த கற்றல் விருத்திக்கான வழி முறைகள் எவ்வாறு காணப்பட வேண்டும். விளையாட்டின் ஊடாகவும், செயற்பாடுகள் மூலமாகவும் அனுபவம் பெறுவதற்கான சந்தர்ப்பங்களைப் பிள்ளைக்கு வழங்கிப் பிள்ளையின் ஆற்றல்களை வெளிக்கொண்டு வருதல் தொடர்பான தேர்ச்சியை முன்பள்ளி ஆசிரியர்கள் விருத்தி செய்யும் உபாயங்கள் பற்றி நூலில் முறையாக வழிப்படுத்தப்பட்டுள்ளன.

முன்பள்ளியில் நிலவும் கல்விப் போக்கானது பிள்ளையை மையமாகக் கொண்டு, பிள்ளையின் விருப்பங்களை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட வேண்டும்என்பதற்கமைய நூலில் முறையான வழிகாட்டல்கள் இலகுவான முறையில் தரப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

தனது மாணவர்கள் ஒவ்வொருவர் பற்றிய பதிவுகளும் ஆசிரியரிடம் இருக்க வேண்டும். இவை தொடர்பான இரகசியங்கள் பேணப்பட வேண்டும்.

**முன்பள்ளி ஆசிரியர் பங்கு**

பிள்ளை, குடும்பம் என்ற அமைப்புக்கு வெளியே தொடர்புறும் முதலாவது நபராக ஆசிரியர் இருப்பதால் அவர் அந்தப் பிள்ளையின் அன்புக்கு உரித்தானவர் ஆகிறார். அவரே அந்தப் பிள்ளையின் இரண்டாவது அம்மா எனவும் நோக்கப்படுகின்றார். அன்பு, ஆதரவு, எந்தவித நிபந்தனைகளும் இன்றி ஏற்றுக்கொள்ளும் தன்மை, ஒத்துழைப்பு மற்றும் போசாக்குக் குறித்த கவனம் போன்றவற்றை ஆசிரியர் வழங்குவதால் கற்றல் வலுவாக விருத்தியடையும்.

ஆசிரியரின் மென்மையான போக்கு, பிரியமான பேச்சு, ஒவ்வொரு பிள்ளையும் கூறுவதைக் கேட்டுசெயற்படும் தன்மை, பிள்ளைகளின் பெயர் சொல்லி அழைத்தல், மென் தொடுகை, பிள்ளை சிடுசிடுப்பைக் காட்டும் போது பொறுமையாக, சுவாரஸ்யமான செயற்பாடுகளில் பிள்ளையை ஈடுபட வைத்து சாந்தப்படுத்தும் லாவகம், பெற்றோருடன் கிரமமாக, சாதகமாகக் கலந்துரையாடலில் ஈடுபடல் ஆகிய விடயங்கள் பிள்ளையுடன் ஆசிரியர்களுக்கான உறவைப் பலப்படுத்தும்.

கற்றலின்போதும், விளையாட்டின் போதும் அனுசரணையாக இருந்து ஆசிரியர் தருணத்துக்கு ஏற்ப கற்றல் செயற்பாடுகளை மாற்றியமைத்து பிள்ளையின் ஆர்வத்தைத் தூண்ட வேண்டும். பிள்ஸ்ளயை அவதானித்தல், பொருத்தமான வினாக்களை வினாவுதல், பொருத்தமான அறிவுறுத்தல்களை வழங்குதல் ஆகியவற்றில் நெகிழ்ச்சி யானதும், ஆக்கபூர்வமானதுமான கற்றல் சூழலை ஆசிரியர் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

தனது மாணவர்கள் ஒவ்வொருவர் பற்றிய பதிவுகளும் ஆசிரியரிடம் இருக்க வேண்டும். இவை தொடர்பான இரகசியங்கள் பேணப்பட வேண்டும். படிப்படியாக மேற்கொள்ள வேண்டிய இந்தத் தகவல் பதிவுகள், பின்னர் பிள்ளையின் விருத்தியை மதிப்பிட்டுக்கொள்ள உதவியாக அமையும். அத்துடன் தேவைப்படும் நேரத்தில் மேலதிக கவனம் செலுத்துவதிலும் அவை உதவும் என்ற வகையில் முன்பள்ளி ஆசிரியருடைய மிக முக்கியமான வகிபங்குகள், கடமைக் கூறுகள் இந்த நூலில் எடுத்தியம்பப்பட்டுள்ளன. இவற்றை முன்பள்ளி ஆசிரியர்கள் சரியாகக் கைக்கொள்ள போதிய பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

**கலைத்திட்ட செயலாற்றுகை**

தேர்ச்சிமைய ஒன்றிணைந்த கலைத்திட்டம் நெகிழ்ச்சியுடையதாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஆசிரியர் விடயங்களைத் தீர்மானித்து நடைமுறைப்படுத்த முடியும். அதற்கான வழிகாட்டல்கள் கருப்பொருள், தேர்ச்சி, செயற்பாடு, வளம், அணுகுமுறை, செயலொழுங்கு, மதிப்பீடு, கற்றல் விரிவாக்கம் என்ற வகையில் நூலில் முறைமைப்படுத்தப்பட்டுள்ளது. உடல் விருத்தி, அறிவாற்றல் விருத்தி மொழி, அறிவாற்றல் விருத்திகணிதம், சுற்றாடலைப் புரிந்து கொள்ளல், ஆக்க அழகியல் திறன்விருத்தி சித்திரமும் கைவேலையும், ஆக்க அழகியல் திறன் விருத்தி, இசைவும், அசைவும் நடித்தலும், சமூக மனவெழுச்சி விருத்தி என்ற வகையில் கலைத்திட்ட விடயப் பரப்புக்கள் நூலில் முறைமைப்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் வருடாந்த, மாதாந்த, நாளாந்த வேலைத்திட்டம் தயாரிக்கும்போது, வெவ்வேறு பாடப் பரப்புக்களில் இருந்துசெயற்பாடுகளைத் தெரிவு செய்யலாம்.

இந்த வகையில் முன்பள்ளி கல்விப் பிரயோகம் தொடர்பான இந்த நூல் வெளியீட்டில், வடமாகாணக் கல்வி அமைச்சர், செயலாளர், முன்பள்ளிப் பணிப்பாளர், ஆறுதல் நிறுவன வளவாளர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் பங்கு பற்றினர். வடமாகாணக் கல்வியமைச்சின் ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவும், ஆறுதல் நிறுவனமும், யுனிசெப் நிறுவன அனுசரணையுடன் இந்த நூலை வெளியிட்டுள்ளனர். இந்த முயற்சி பாராட்டுதல்களுக்குரியது. இந்த வழிகாட்டி நூலின் அம்சங்கள் அனைத்தையும், முறையான களப்பயிற்சியினூடாக முன்பள்ளி ஆசிரியர்களை வாண்மைப்படுத்தும் செயன்முறை மிக அவசியமாகத் தேவைப்படுகின்றது. இதற்கான தொடருறு கல்விப் பயிற்சி வேலைத்திட்டம் மிக அவசியமாகும்.

கட்டுரையாளர்:-
நிபுணத்துவ ஆலோசகர்,
கல்வியமைச்சு.

## தொடர்பாடல் தின நிகழ்வும் சஞ்சிகை வெளியீடும்

கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியின் தகவல் தொடர்பாடல் தின நிகழ்வுகள் கடந்த 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கல்லூரியின் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றிருந்தன.

இந்த நிகழ்வுகளின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கணனி விஞ்ஞான துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கே.தபோதரன் கலந்து கொண்டார்.

விழாவின் சிறப்பம்சமாக தகவல் தொடர்பாடல் துறையைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்களின் கையெழுத்துச் சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டது.சஞ்சிகையின் ஆய்வுரையை வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியர் எஸ்.கௌசிகன் நிகழ்த்தினார்.

ஆசிரிய மாணவர்களின் நெறியாழ்கையில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்த நிகழ்வுகளில் துறைசார் விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ரி - 2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரப்ப முடியாமல் காணப்படும் கலைஞன் கி.யேசுராசாவின் இடைவெளி!

**தேவிபரமலிங்கம்**



அற்புதமான ஒரு கலைஞனின் மறைவு, குருநகர் பிரதேச கரையோர வீதியிலுள்ள அவனது வறுமைக் கோட்டுக் கொட்டிலில் எந்தவிதப் படாடோபமும் இல்லாமல் அமைதியாகவே நிகழ்ந்து போயிற்று.

நோயுற்றும் சில காலமாகச் சிறிது சிறிதாக உருக்குலைந்து கொண்டிருந்த கிறகோரி யேசுராசா (உடையார்) 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் 13 ஆம் திகதி முழுமையாய் அஸ்தமித்த நாள். 1960களில் யேசுராசா இல்லாத நாடகங்கள் குருநகரில் அரங்கேறியது இல்லை என்னும்படி அவனுடைய நடிகப்பங்கு ஒவ்வொரு மன்றங்களுக்கும் தேவையாக அமைந்தது.

சுதந்திரமாய் அனைத்து மன்றங்களிலும் சேர்ந்து நடிப்புப் பணியை ஈடேற்றிக் கொண்டிருந்தான். அந்தக் காலங்களில் நடிப்புத் தெரிவில் குடாநாடு தழுவிய மட்டில் முதலாவது இடம் அவனுக்கே!




நாடகாசிரியர்கள் படைக்கும் பாத்திரங்களை அவர்களே கற்பனை செய்திராத கோணங்களில், கற்பனா உத்தியில் நடித்து அப்பிளாஸ் பெற்றுப் கொள்வான் உடையார்.

உடையார் என்னும் அடைமொழி பாத்திரப் படைப்பொன்றால் ஒட்டிக் கொண்டதன்று. குடும்ப அடையாளக் குறியீடு. யேசுராசா என்ற இயற் பெயரை விடவும் உடையார் அதிக புழக்கத்தில் இருந்தது. 1968, 69 களில் என்னால் வரையப் பட்ட நாடகத்தில் மருத்துவர் வேடம் போட்டார். நாடக நெறியாள்கையையும் எடுத்துக்கொண்டார். 'காணாத தூரம்' எனும் அந்த நாடகம் குருநகர், கலைக் கதிர் நாடக மன்றத் தயாரிப்பாகக் குருநகருக்கு வெளியே உடுவில் திறந்த வெளிஅரங்கிலும்மேடை யேற்றப்பட்டது. பட்ட மரம் என்னும் பெயரில் இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பானது.

நடிப்புப் போட்டிகளில் அந்தக் காலம் யேசுராசாவை வேறு எவரும் தாண்டிவிட முடியாதவாறு முதலிடம் பெறும் இந்தக் கலைஞனுக்கு, 2014 ஆம் ஆண்டுமுன்னாள்ஜனாதிபதி வறுமைக் கோட்டுக் கலை ஞனுக்கு வழங் கிய ஒரு லட்சம் ரூபா கிடைத்தது. அதே வருடம் அரச விருதான கலா பூசணம் பட்டமும் கிடைத்தது.

ஆயினும் இறுதிக் காலங்களில் மதுவுக்கு அடிமையாகிப் போனதனால், மீண்டெழ இயலவில்லை. நாடகங்களுடன் நாட்டுக் கூத்துக்களாலும் ஈர்க்கப்பட்டான். கலைமாமணி கிறகரி கிறிஸ் தோப்பர் தயாரித்த ஆளுமை என்னும் நாட்டுக் கூத்து வீடியோ திரைப்படத்தில் காக்கை வன்னியனாக வேடம் தரித் தான். குருநகர் நாட்டுக் கூத்து மன்றம் தயாரிக்க இருக்கும் வீரியம் படத்திலும் தயாரிப்பாளர் முக்கிய பாத்திரம் வழங்க இருந்தார்.

தொண்டையில் சிறுகச் சிறுகத் தோன்றிய அழுத்தம், மீளப்பெற முடியாத அற்புதக் கலைஞனைப் புற்று நோய்க்கு ஆளாக் குமென்று எவருமே எதிர் பார்த்திருக்கவில்லை.

அந்தக் கலைஞனிடம் நடிப்பு மட்டுமே உறைந்திருக்கவில்லை. ஓவியம், சிற்பம் ஆகிய துறைசார் திறமைகளும் அபரி மிதமாகக் காணப்பட்டன. அவனது திறமைக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் மற்றும் விருதுச் சின்னங்கள் அனேகமானவை 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வுடன் இழக்கப்பட்டும் போயின.

2014 இல் கிடைத்த கலாபூசணம் விருதுக்கு விண்ணப்பிக்கச் சான்றேதும் இருக்கவில்லை. 2012 இல் நேர்காணல் வழங்கி இருந்த பத்திரிகைப் பிரதிதான் உதவியது.

நாடகம் பழகுவதானாலும், நடிப்பதானாலும், விருது, பரிசுகள் பெறுவதானாலும் அந்தச் சந்தோசங்களை அவனால் வெறுமனே அனுபவிக்க முடிவதில்லை. உடனே சின்னக்கீறு போட்டே நிறைவேற்ற வேண்டும்.

2014 இல் முன்னாள் ஜனாதிபதியிடம் ஒரு லட்சம் ரூபா பெறப்போகும் போதும் கீறு போட்டுக்கொண்டே சென்றதால், நேரடியாக ஜனாதிபதியிடம் காசோலையைப் பெறமுடியாமல் போனது.

கொழும்புக்கு அழைத்துப் போன சகோதரி, மனைவியெனக் கையெழுத்துப் போட்டுக் காசோலையைப் பெறவும் நேர்ந்தது. இந்த அற்ப ஆசையால், உழைப்பு மற்றும் சேவைகளுக்கான அனுகூலங்கள் பலவற்றை இழந்து போன துரதிர்ஷ்டசாலி உடையாரென்னும் யேசுராசா.







## காட்டேரி அம்மன் திருவிழா

இந்தியாவில் நாமக்கல், நல்லிப்பாளையத்திலும் இலங்கையில் லிந்துலை சென்றெகுலர்ஸ் தோட்டத்திலும் மாத்திரம் கொண்டாடப்படும் காட்டேரி அம்மன் திருவிழா, குறித்த தோட்டத் தில் கடந்த 22 ஆம் திகதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இதில் தோட்டத் தலைவர்கள், இளைஞர்கள், ஆலய பரிபாலன சபையினர், தோட்டப் பொது மக்கள், அய லவர்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

காட்டேரி அம்மன் என்பது அம்மனின் 1008 அவதாரங்களில் ஒன்றாகும். இதுபத்திரகாளியின் ஒரு அவதாரமாகும். அம்மனின் ஆலயத்தை அரக்கர்களும், அசுரர்களும் இடித்து உடைக்க முற்படும்போது அரக்கர்களையும், அசுரர்களையும் அடித்து வெளியே துரத்தும் சம்பவமே இந்த நிகழ்வு ஆகும்.

இந்த விழாவைக் கொண்டாடுவதன் மூலமும், காட்டேரி அம்மனை வணங்குவதன் மூலமும், மக்களின் தீராத நோய் குணமாகும், குழந்தைப்பேறு, நினைத்த காரியங்கள் நிறைவு, தோட்டத்துக்குப் பாதுகாப்பு, பேய், பிசாசுகளிலிருந்து விடுதலை போன்றவை கிடைப்பதாக மக்கள் நம்புகின்றனர்.

இந்த விழாவைப் பார்வையிடவும் நேர்த்திக் கடன்களைத் தீர்க்கவும் மக்கள் கூட்டம் இந்த நிகழ்வில் கலந்து கொண்டமை ஒரு விசேட அம்சமாகும்.





## இலவச சர்வதேச திரைப்படக் காட்சி

உலக சினிமாவின் மீதான பார்வை விசாலிப்பை விரிவுபடுத்தும் நோக்கில் சினிமாப் பட்டறையின். ஏற்பாட்டில் இலவசமாக சர்வதேச திரைப்படக் காட்சிகள் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் மாலை 4.30 மணிக்கு நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள செயற்றிறன் அரங்க இயக்கத்தின் மண்டபத்தில் காண்பிக்கப்பட்டு வருகின்றன. அந்த வரிசையில் இன்று மாலை 4 .30மணிக்கு இந்திய திரைப்பட இயக்குநர் சத்தியஜித்ரேஜின் 'அபராஜித்தோ' திரைப்படம் திரையிடப்படவுள்ளது. திரைப்பட ஆர்வலர்கள் திரைப் படத்துறையில் ஈடுபட்டுவருபவர்கள், திரைப்பட விமர்சகர்கள் அனைவரும் இதில் கலந்து கொள்ளலாம். திரையிடலுக்குப் பின்னர் குறித்த திரைப்படம் பற்றிய கருத்தாடல்களும் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வினோதக் கைவண்ணன் துவாரகனின்

## மிருதங்க அரங்கேற்றம்



கே.எஸ்.சிவஞானராஜா

விரலில் பிறக்கும் மிருதங்க ஜதிச் சொற்கட்டுக்களைச் சபையோருக்குத் தானமாக்கிய வினோதக் கைவண்ணன் துவாரகனின் மிருதங்க அரங்கேற்றம்,கடந்த மாதம் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் மனோலயம் ததும்ப நடைபெற்று மகிழவைத்தது எனலாம். அரியாலை தருமராஜா-பாமா தம்பதியரின் தவப்புதல்வனே துவாரகனாவார். அரியாலையும் கலைகளின் உறைவிடமாகும்.

**குரு**

மிருதங்க லயஞான இசைவாரி இசைமாணி சி.துரைராசா, இலங்கையில் ஒரு சிறந்த கரலய ஸ்வர ஜதி விற்பன்னராகத் திகழ்கின்றார். யாழ்ப்பாணத்தில் விரல்களால் பேசி, ஆன்மிக இசையை வளர்க்கும் முதிர்ந்த கலைஞராவார். இவரே துவாரகனை முதன்மையாக்கிய குருவாக மிளிர்கின்றார். பிரதம விருந்தினராக வருகை தந்த, யாழ்.இந்தியத் துணைத்தூதர் ஆ.நடராஜனின் உரை மண்டபத்தை அலங்கரித்தது. குரு பேறடைந்தார்.

**அரங்கம்**

நாத ஒலிக்கு விமோசனம் அளிக்கும் மண்டபங்களில், வீரசிங்கம் மண்டபமும் கைலாசபதி மண்டபமும் வரம் பெற்றவை. தஞ்சாவூர் ரி.எம்.தியாகராஜன் 1970 களில் சங்கீத வித்துவான் திலகேஸ்வரனின் இசை அரங்கேற்றத்துக்காக வருகை தந்தபோது,இந்த மண்டபத்தின் ஒலிமாண்பைதூரநோக்கோடு எடுத்தியம்பியதை, நாற்பத்தாறு வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் அனுபவித்தேன். பென்னாம் பெரிய, அற்புதமான மண்டபம். பாடகருக்கும், பின்னணிக் கலைஞர்களுக்கும் வாய்ப்பான அரங்கு இதுவாகும். விருந்தினர்களாக வருகை தந்தவர்களுக்கு வாலாயமான மண்டபமும் இதுவேயாகும்.

**சீடன்**

துரைக்கு வாய்த்த துவாரகன் பெரும் அபாரக் கலைஞன் என்று கூறலாம். பத்து வாத்தியங்களில் விற்பன்னன். தவில், தபேலா, கெஞ்சிரா, கடம்,மோர்சிங், கிற்றார், கீபோட், ஒக்ரபார், டிரம், மிடறு, தண்ணுமை ஆகிய பற்பல கருவிகளில் பாண்டித்தியம் பெற்றிருப்பது இலங்கையில் ஒரு கின்னஸ் சாதனையாகும். துவாரகனின் கைகள் மிருதங்கத்தோடு விளையாடிப் பார்த்தன. லய சுத்தம், ஜதிகளின் யுத்தம், வலந்தலையின் சத்தம், பாடகரின் சித்தம், முகூர்த்தமான கெஞ்சிரா, கடம்,முகர்சிங், ஆகிய வாத்தியப் பரிபாலன வித்தகம் யாவுமே துவாரகனை அள்ளி முத்தமாய் அணைத்தன. மிஸ்ரசாபு, கண்டசாபு, சந்ததாளம், பஞ்சநடை, தீர்மானம், ஜதிகளின் ஸ்வர லய வார்ப்புகள்,முத்தாய்ப்புக்கள் ஒட்டுமொத்தமாக அற்புதம், ஆனந்தம். அபரிமிதமான ஒத்திகை. துரைக்கும் துவாரகனுக்கும் சபாஷ் பல போட்டுக் கொள்ளலாம். குரு சீடனுக்கு நேராக பார்வையாளராக அமர்ந்திருப்பவராக இருந்தால்,மேடையின் சாம்ராஜ்ஜியம் அதிக வரங்களைச் சபையோருக்கு அளித்திருக்கும். எப்போதும் மேடைகள் கம்பன் கழகமேடைகள்போல உயர்ந்திருப்பதானது ஆர்வலர்களின் இரசனைக்கு இதமளிக்கும். மண்டபத்தின் எழுபதாவது அடி கிழக்கோரமாக ஒரு பாமரப் பார்வையாளராகத் தனிமையாக இருந்து இரசித்தேன். மிருதங்க வலந்தலையின் ஒலியமைப்பைச் சற்றுக் குறைத்து இரம்மியமாக்கியிருக்கலாம் போல எனது செவிகள் உணர்ந்தன. இருந்தாலும் எனது செவிகளை ஒரு நல்ல மருத்துவரிடம் காட்டுவது சரி என்பது போலவும் தெரிந்தது.

**பாடகர்**

ஆம்! றொபேர்ட் ஒரு மியூசிக் பேர்ட்!சங்கீதப்பறவை. இந்தப் பறவை மனோதர்ம வானில் மற்றப்பறவைகளைவிட மிகவும் உயர்ந்து சாகஸம் புரியக் கூடியது. கருடனின் ஆசீர்வாதம் எப்போதும் இவருக்குண்டு. இசையில் ஆழமான ஒரு வியாபகி!துவாரகன் பாடகரின் நனோசொற்கட்டு ஜதிகளையும்,மனோலயப் பிரவாகங்களையும்,உருப்படிகளின் சாகித்தியங்களையும் நன்குணர்ந்து இலாவகமாக வாசித்ததன் பேறாக,சர்வமத குருமாரின் ஆசீர்வாதங்கள் மண்டபத்தில் உயிரோடும் உணர்வோடும் இருந்தனஎன்பதை ஊகிக்க முடிந்தது. பாடகரும் பல்துறை விற்பன்னராக மிளிர்வதனால் றொபேர்ட் ஒரு தவமைந்தனாக,ஒரு சர்வதேசக் கலைஞனாக இலங்கையில் முத்திரை பதிக்கின்றார். பல்லவி இவரது. சொத்து. அடடா அற்புத லீலை.

**பின்னணி**

விரல்க்கலைஞர்களின் சாம்ராஜ்ஜியமாக யாழ்ப்பாணம் விளங்குகின்றது. குரல் கலைஞர் அதிகம் கதைப்பதனாலோ என்னவோ,விரல்க் கலைஞர்கள் பெருகி விட்டார்கள் என்ற வினாவுக்கும் விமர்சனத்துக்கும் உடனடியாக விடை சொல்ல முடியாவிட்டாலும்,வாய்ச்சரக் கொன்றினாலேயே தமிழும் இசையும் நீடுவாழ்கின்றன என்பது வரலாறாகிறது. சுருதி இசை வேந்தன் அ.ஜெயராமன் தந்தையாரின் பக்குவத்தோடு வயலினை ஆட்சி செய்து பல்லவியை செப்பனிடுகின்றார். துவாரகனும் பல்லவிக்கு வாழ்வு கொடுக்கிறார். ரவிசங்கரின் கடம்,சியாம்கிருஷ்ணா வின் கெஞ்சிரா.நந்த குமாரின் முகர் சிங்.ரஜீவனின் தம்புரா யாவுமே அரங்கேற்றத்துக்கு உயிர் கொடுத்தன. சும்மா சொல்லக் கூடாது நல்ல ஒத்திகை,சபாஷ்.

**ஒலி ஒளி**

பிரமாதமாகச் சரி செய்திருந்தார்கள். எவரையும் சினம் கொள்ள வைக்காதபடி தமது கடமைகளில் விழிப்படைந்து செயற்பட்டமை பாராட்டுக்குரியது.

**சிறப்பு**

இராகம் தாளம் பல்லவி என்ற அதி உன்னத உருப்படியே அரங்கேற்றத்தைக் கனகச்சிதமாக மெய்சிலிர்க்க வைத்தது. இது இசை கற்றவர்களைச் சற்று அநாயாசமாக தலையாட்டவும், தாளம் போடவும்,தம்மை மறக்கவும் செய்யவல்லது. ஒரு மணித்தியாலம் மண்டபத்தைத் தனது முழுக்கட்டுப்பாட்டுக்குள் பல்லவியால் மகிழ வைத்தார். றொபேர்ட்! சபாஷ்! பாடிய ஒன்பது உருப்படிகளும் பொக்கிசங்களே.

**வேண்டுகோள்**

பலறொபேர்ட்டுக்களும்பலகுலபூஷணீக்களும் குரலிசை அரங்கேற்றங்களுக்கு வழிசமைக்க வேண்டும். விரலிசை அரங்கேற்றங்கள் ஏராளம் நடைபெறுவது போல குரலிசை அரங்கேற்றங்கள் தாராளமாக நடைபெறப் பணம் ஒரு தடையாக இந்த மண்ணில் அமைந்து விடக் கூடாது. துவாரகனின் பெற்றோர்கள் உண்மையிலேயே போற்றி வணங்கப்படக் கூடியவர்களாவர். குருவை நாமும் பாராட்டுவோம்.அடுத்த அரங்கேற்றம் குரலா?விரலா? பார்ப்போமே!






## நூல் அறிமுகவிழா

வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்திய, பேராசிரியர் சி.க.சிற்றம்பலத்தின் 'தடம் பதித்த தமிழ்த் தேசியம்'கு நூல் அறிமுக விழாவில் எஸ்.என்.ஜீ நாதன் உரையாற்றுவதையும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, நூலாசிரியர், தமிழருவி த.சிவகுமாரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் நூலாசிரியர் கௌரவிக்கப்படுவதையும் முதற்பிரதியை கலாபூசணம் சண்முகவடிவேல் ஸ்தபதி பெறுவதையும் நூலாசியரியர் ஏற்புரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிகை அலங்கார ஆபரணம்

இது புதுசு

சிகை அலங்கார ஆபரணம் அறிமுகமாகி யுள்ளது. கொண்டையை அலங்கரிக்க இந்த ஆபரணம் பயன்படும். இதன் விலை 150 ரூபா ஆகும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 700 | 600 |
| நண்டு | 200 | 400 | 300 | 400 | 300 | 200 | – |
| கணவாய் | 500 | 600 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 400 | 500 | 500 | 600 | 500 | 500 | 430 |
| சுறா | 500 | 500 | 600 | 800 | 500 | – | 600 |
| சீலா | 250 | 400 | 400 | 400 | 450 | 500 | 400 |
| விளை | 500 | 350 | 400 | 500 | 450 | 500 | 400 |
| முரல் | 250 | 400 | 350 | 400 | 300 | 400 | 350 |
| கும்பிளா | 300 | 350 | 300 | 400 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 600 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | – | – |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 300 | 150 | 300 |
| நகரை | 150 | 250 | – | 300 | 300 | 200 | 300 |
| சூடை | 100 | 150 | 100 | 200 | 120 | 150 | – |
| ஓட்டி | 250 | 200 | 150 | 200 | 300 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 250 | 200 | 130 |
| மதனம் | 150 | 300 | 180 | 300 | 250 | 250 | 200 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 50 | – |
| பாலை | 350 | 200 | 250 | 300 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 300 | 300 | 400 | – |

## சோயா கஞ்சி

**தேவையானவை:**

சோயா - 200 கிராம்
இஞ்சி விழுது - கால் தேக்கரண்டி
மிளகுத்தூள் - ஒரு சிட்டிகை
வெண்ணெய் - ஒரு தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு.

**செய்முறை:**

சோயாவை ரவை போல உடைத்து, கொதிக்கும் நீரில் சேர்த்து வேக விடவும். குழைய வெந்ததும் இஞ்சி விழுது, மிளகுத்தூள், உப்பு சேர்த்துக் கலக்கவும். பிறகு வெண்ணெய் சேர்த்துக் கலந்து பரிமாறவும்.

குழந்தைகளுக்கு நல்ல ஊட்டச்சத்துள்ள உணவாக இது அமையும். மாலை நேரத்தில் செய்து கொடுக்கச் சிறந்தது.



## நாளை

**பங்குனி -18**

வியாழக்கிழமை 31.03.2016
திதி: அட்டமி
பி.இ.04.35 வரை
நட்சத்திரம்: மூலம்
மு.ப.09.35 வரை
ராகுகாலம்:
01.41-03.11 வரை
சுபநேரம்:
07.41-09.11 வரை



## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 30 | 50 | 40 | 30 | 40 | 25 | 30 |
| கத்தரி | 60 | 60 | 70 | 60 | 60 | 120 | 40 | 70 |
| கரட் | 80 | 100 | 80–160 | 100 | 80 | 200 | 80 | 170 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 40 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 60 | 50 | 80 | 70 | 60 | 120 | 30 | 60 |
| பாகல் | 100 | 100 | 100 | 120 | 100 | 160 | 110 | 100 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 80 | – | 50 | – | 60 | 60 |
| பெ.வெங்காயம் | 80 | 70 | 70 | 80 | 70 | 80 | 65 | 60 |
| சி.வெங்காயம் | 50 | 70 | 80 | 80 | 70 | 80 | 65 | 60 |
| பூசணி | 50 | 40 | 40 | 40 | 40 | 60 | 20 | 20 |
| தக்காளி | 40 | 30 | 30 | 40 | 30 | 80 | 25 | 30 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 30 | 40 | 60 | 35 | 40 |
| கீரை | 30 | 50 | 30 | 20 | 30 | 40 | 20 | 25 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 30 | 35 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 80 | 100 | 100 | 80 | 120 | 80 | 80 |
| புடோல் | 40 | 60 | 50 | 50 | 60 | 60 | 30 | 40 |
| கோவா | 40 | 60 | 50 | 80 | 50 | 80 | 90 | 60 |
| வெண்டி | 50 | 80 | 50 | 160 | 80 | 60 | 60 | 60 |
| போஞ்சி | 140 | 100 | 120 | 160 | 100 | 120 | 70 | 130 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 150 | 120 | 160 | 75 | 120 |
| தேங்காய் | 40 | 38 | 50 | 35–40 | 40 | 30 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 | 120 | 70 | 80 | 65 | 120 |
| தேசிக்காய் | 100 | 160 | 120 | 120 | 180 | 160 | 120 | 200 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 20 | 20 | 10 | 15 |
| கறிமிளகாய் | 100 | 80 | 100 | 120 | 100 | 160 | 50 | 100 |
| இராசவள்ளி | 150 | 150 | 130 | 160 | 120 | – | 110 | 70 |
| முருங்கைக்காய் | 600 | 350 | 500 | 400 | 600 | – | 350 | 300 |
| பனங்கிழங்கு | 05 | 0.25 | – | – | 05 | – | – | – |

## மரக்கறிகளை வாங்கும்போது...

1. வாழை தண்டு: மேல் பகுதி நார் அதிகம் இல்லாமலும் உள்ளிருக்கும் தண்டுப்பகுதி சிறுத்தும் இருப்பதாகப்பார்த்து வாங்க வேண்டும்.
2. வெள்ளை வெங்காயம்: நசுக்கினாலே சாறு வரும்படி இருக்க வேண்டும்.
3. முருங்கைக்காய்: முருங்கைக்காயைக்கட்டை மற்றும் ஆள்காட்டி விரல்களைப்பயன்படுத்தி சிறிது முறுக்கினால், எளிதாக வளைந்தால் அது நல்ல முருங்கைக்காய்.
4. சர்க்கரை வள்ளிகிழங்கு: உறுதியான கிழங்கு இனிக்கும், அடிபட்டு கறுப்பாக இருந்தால் கசக்கும்.
5. தக்காளி: தக்காளி நல்ல சிவப்பு நிறத்தில் இருந்தால் அதை வாங்கலாம்.
6. கோவைக்காய் : முழுக்க பச்சையாக வாங்க வேண்டும். சிவப்பு லேசாக இருந்தாலும் வாங்க வேண்டாம். பழுத்து ருசி இல்லாமல் இருக்கும்.
7. சின்ன வெங்காயம்: பழைய வெங்காயம் வாங்குவதே நல்லது. இரண்டு பல் இருப்பதாக, முத்து முத்தாக தெளிவாக இருப்பதை வாங்கவும்.
8. குடை மிளகாய்: தோல் சுருங்காமல்இருப்பதை வாங்கவும். கரும் பச்சையில் வாங்கவேண்டாம். அடிபட்டிருக்கும். எல்லா நிற குடை மிளகாய்களும் ஒரே சுவையுடன் தான் இருக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







நமக்கு நாமே படத்தின் இயக்குனர் சபரீசனுக்கும்



நமக்கு நாமே படத்தின் நகைச்சுவை நடிகர்ஸ்டாலினுக்கும் தேசிய விருது வழங்காதது சற்று ஏமாற்றமே.

**சிந்தனைவாதி** @PARITHITAMIL

என்னாங்கடா ஒரு சொட்டு தண்ணியக் கூட காணோம் நாமளும் இனி காசு கொடுத்து போத்தல் தண்ணீ வாங்கித் தான் குடிக்க வேணுமா...?



**பைரா** @Saravan_Offl · Mar 7

## படைக்கப்பட்டதே

படைக்கப்பட்டதே முக்காலியாகத்தான் என்பதால், ஒரு கால் அதிகமென்ற கர்வமோ, ஒரு கால் குறைவென்ற குறையோ? அதனிடம் சுத்தமாக இல்லை. முக்காலியாய் இருங்கள்!

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | | | | | |
| 2 | | | | | 4 | 5 | | |
| 1 | 4 | | | | | | 8 | 6 |
| | | 2 | | 9 | 6 | 7 | | |
| | | | 1 | | | | | |
| | | 3 | 2 | 5 | | 4 | | |
| 4 | 6 | | | | | | 2 | 1 |
| | | 1 | 5 | | | 6 | | 7 |
| | | | | | | | | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | 3 | 1 | 8 | 6 | 2 | 7 | 5 |
| 1 | 2 | 7 | 9 | 5 | 4 | 3 | 6 | 8 |
| 5 | 8 | 6 | 7 | 2 | 3 | 4 | 9 | 1 |
| 4 | 5 | 2 | 8 | 9 | 1 | 6 | 3 | 7 |
| 7 | 9 | 1 | 3 | 6 | 2 | 8 | 5 | 4 |
| 3 | 6 | 8 | 5 | 4 | 7 | 9 | 1 | 2 |
| 6 | 7 | 9 | 2 | 1 | 8 | 5 | 4 | 3 |
| 8 | 1 | 4 | 6 | 3 | 5 | 7 | 2 | 9 |
| 2 | 3 | 5 | 4 | 7 | 9 | 1 | 8 | 6 |

சுடோக்குஒருஎண்விளையாட்டு.தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை.1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும்.தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதன்ன அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலகளவில் பிரபல்யமானது.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** நற்பெயரைப் பாதுகாக்க, மற்றவரின் உதவியை நாடுவீர்கள். தொழிலில் வருமானம், சராசரி அளவில் இருக்கும். குடும்பத் தேவைக்கான செலவு அதிகரிக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**இடபம்:** மனதில், ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். சகோதர வழியில் உதவி கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**மிதுனம்:** நண்பரின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில் இலக்கு, தாமதமாகப் பூர்த்தியாகும். மிதமான பணவரவு இருக்கும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**கடகம்:** எதிர்காலம் குறித்து, ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், போட்டி அதிகரிக்கும். வருமானம் சுமாராக இருக்கும். கண்களின் பாதுகாப்பில் தகுந்த கவனம் வேண்டும்.

**சிங்கம்:** சுய இலாபத்துக்காக சிலர் உங்களைப் புகழ்ந்து பேசுவர். கடின உழைப்பால், தொழிலில் விற்பனை சீராகும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெண்கள், நகையை இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

**கன்னி:** இஷ்ட தெய்வத்தின் அருள் கிடைக்கும். சிறு செயலையும் நேர்த்தியாகச் செய்வீர்கள். தொழில், வியாபாரம் செழித்து, மனநிறைவு தரும். பணக்கடனில் ஒருபகுதியைச் செலுத்துவீர்கள்.

**துலாம்:** தாமதமான செயலில், புதிய திருப்பம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிப் பணியில் ஈடுபடுவீர்கள். நிலுவைப் பணம் கிடைக்கும். உறவினர் வருகையால், மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** அவமதித்தவர், தனது குறை உணர்ந்து அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால், புதிய சாதனை படைப்பீர்கள். ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்குவர்.

**தனுசு:** முக்கியமான செயலைப் பிறரிடம் ஒப்படைக்கக் கூடாது. தொழில், வியாபாரம், தாமதகதியில் இயங்கும். இலாபம் சுமார். பயன் அறிந்து, வெளியூர் பயணம் மேற்கொள்வது நல்லது.

**மகரம்:** குடும்பத்தில் அமைதி நிலைத்திருக்கும். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். ஆதாயம் அதிகரிக்கும். மனைவி விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**கும்பம்:** விலகிச் சென்ற எதிரியும் நட்புப் பாராட்டுவார். தொழிலில், உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். அரசியல்வாதிகளுக்கு, அனுகூலமான சூழல் அமையும்.

**மீனம்:** நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. தொழிலில், உற்பத்தி விற்பனை அளவுடன் [illegible] பெண்கள், ஆடம்பரச் செலவைத் தவிர்க்கவும். உடல்நலனில் அக்கறை தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜா காலத்தில் பேஸ்புக் இருந்திருந்தால்...

**அமைச்சர்:** மன்னா...மன்னா...

**மன்னர்:** என்ன அமைச்சரே, என்ன பதட்டம்?

**அமைச்சர்:** மன்னா, எம்முடன் போர் தொடுக்க பக்கத்து நாட்டு மன்னர் படையெடுத்து வருகிறார்.

**மன்னர்:** காலையில் தான் "பீலிங் கப்பி வித் அந்தப்புரம்" என்று பேஸ்புக்ல ஸ்டேட்டஸ் போட்டேன். அது அவனுக்கு பொறுக்கவில்லையா?

**அமைச்சர்:** அது இல்லை மன்னா.

**மன்னர்:** பிறகு எதற்கு படையுடன் வருகிறான்? நாம் பேஸ்புக்கில் அவனது எல்லா போஸ்ட்டுகளுக்கும் பாரபட்சம் பார்க்காமல் லைக் செய்கிறோமே. பிறகு ஏன்?

**அமைச்சர்:** நீங்கள் அவனது அந்தபுரத்தில் உள்ள ராணிகளுக்கு பிறண்ட் ரிக்குவஸ்ற் கொடுத்தீர்களாமே?

**மன்னர்:** ஆமாம் அமைச்சரே. அவர்களது புரோபைல் நன்றாக இருந்தது. அதுதான் ரிக்குவஸ்ற் கொடுத்தேன். பிடிக்கவில்லை என்றால் என்னை பிளோக் செய்துவிட்டுப் போகவேண்டியது தானே? அதற்காகப் படையெடுத்து வருவது சரியல்ல.

**அமைச்சர்:** அதுமட்டுமல்ல மன்னா, நீங்கள் அவன் அரண்மனைக் காவலாளி. வேலை நேரத்தில் தூங்கியதை போட்டோ எடுத்து பேஸ்புக்கில் போட்டுள்ளீர்கள். இதனால் அவர்களது நாட்டில் பெரும் சர்ச்சையாக உள்ளதாம்.

**மன்னர்:** நான் வேட்டைக்குச் சென்று வரும் வழியில் அவன் உறங்கியதைக் கண்டேன். அதான் ஒரு போட்டோ எடுத்தேன். இதுதானே உலக வழக்கம் அமைச்சரே.

**அமைச்சர்:** அதை நீங்கள் ஏன் அவனது இன்போக்ஸ் மெசேச்சில் கூட கூறாமல், பப்ளிக் போஸ்ரராக வெளியிட்டீர்கள்.

**மன்னர்:** ஆர்வக்கோளாறில் தெரியாமல் செய்துவிட்டேன் அமைச்சரே. இப்போ என்ன செய்வது?

**அமைச்சர்:** உடனே பேஸ்புக்கில் பீலிங் சாட். கோல்ட் பீவர் என ஸ்டேட்டஸ் போட்டும், மறக்காமல் பக்கத்து நாட்டு மன்னருக்கு லைக் செய்யுங்கள்.

**மன்னர்:** இதோ... இப்பவே லைக் செய்து, போஸ்ட் செய்கிறேன்.

**அமைச்சர்:** என்னையும் கொமன்றில் மென் செய்யுங்கள் மன்னா. நானும் வருகிறேன்.

**மன்னர்:** அப்படியே ஆகட்டும்.



# ஆதிக்கு வாய்ப்பு

"கோ", "மாற்றான்", "அனேகன்" ஆகிய படங்களை இயக்கியவர் கே.வி.ஆனந்த். இந்தப் படங்கள் அனைத்தும் வெற்றி பெற்றிருந்தன. ஹரிஸ் ஜெயராஜ் இசையில் இடம் பெற்ற பாடல்களும் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்புப் பெற்றன. கே.வி.ஆனந்த் அடுத்ததாக விஜய் சேதுபதியை வைத்துப் படம் இயக்குகிறார். இதில் முக்கிய கதாபாத்திரத்தில் டி.ராஜேந்தர் நடிக்க இருக்கிறார். படத்துக்கு இசையமைப்பாளராக ஹரிஸ் ஜெயராஜ் இடம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஹிப் ஹாப் தமிழா ஆதி. இசையமைக்க இருப்பதாகச் செய்தி வெளியாகியிருக்கிறது.

கே.வி.ஆனந்த் இயக்கும் இந்தப் படத்தை ஏ.ஜி.எஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இந்த நிறுவனம் ஏற்கனவே தயாரித்த "தனி ஒருவன்" படத்துக்கு ஆதி இசையமைத்திருந்தார். இந்தப் படத்தின் பாடல்கள் அனைத்தும் சூப்பர் ஹிட்டானது. அதன் காரணமாக ஹிப் ஹாப் தமிழா ஆதியை தெரிவு செய்ததாகக் கூறப்படுகிறது.

## ஒருமைப்பாட்டுக்கு

அரசுதான் உள்ளது. எனவே, இதில் ஐக்கிய தேசியக் கட்சியினதோ அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதோ சட்டவரைவு இருக்காது. அனைவருக்கும் பொதுவான ஒன்றுதான் இருக்கும்.

எதிர்வரும் 5 ஆம் திகதி நாடாளுமன்றம் அரசமைப்பு நிர்ணய சபையாகக் கூடுகின்றது. அரசமைப்பில் இலங்கையர் என்ற அடையாளத்தையும், மக்களின் இறைமையையும், சட்டத்தின் ஆட்சியையும் உறுதிப்படுத்தவேண்டும். இலங்கையர் என்ற அடையாளத்தினூடாக அனைவரும் சமமானவர்கள் எனக் கருதப்படுவர். சகல மக்களும் சமய, கலசார உரிமைகளையும் அனுபவிக்க வேண்டும். அதன் பிரதிபலனை அனைவரும் அனுபவிக்க வேண்டும்.

மக்களின் இறைமையினூடாகச் சகல மக்களினதும் அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும். மக்களின் இறைமை என்பது பெரும்பான்மையினரின் விருப்பத்துக்குரிய விடயமல்ல. அனைத்து மக்களுக்கும் சமமான உரிமைகளை வழங்குவதே இறைமையாகும். அடுத்ததாகச் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்த வேண்டும்.

இவ்வாறாக அரசமைப்புத் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்க நாம் தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். மக்களின் கருத்துக்களை உள்வாங்குவதற்காகக் குழுவொன்றை நியமித்துள்ளோம். அந்தக் குழுவின் ஆலோசனைகள் கிடைத்தவுடன் அடுத்த நடவடிக்கையை மேற்கொள்வோம்.

விசேடமாக நிறைவேற்று அதிகாரத்தை நாடாளுமன்றத்திற்கு வழங்க நாம் எதிர்பார்க்கின்றோம். தற்போதைய அதிகாரங்களை மேலும் குறைக்கத் தயார் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பகிர்வு குறித்துப் பார்க்கவேண்டும். தற்போதைய அரசின் தன்மை குறித்துப் பிரச்சினை இல்லை. நாட்டுக்கு ஆபத்து ஏற்படாத வகையில் அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள வேண்டும்.

நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் ஐக்கியத்துக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இதைச் செய்யவேண்டும். ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு விதமான அதிகாரப் பகிர்வை மேற்கொண்டுள்ளன. அமெரிக்கா ஒரு முறையிலும், இந்தியா ஒரு முறையிலும், பிரிட்டன் ஒரு முறையிலும் அதிகாரப் பகிர்வைச் செய்துள்ளன.

இந்த நிலையில், எமது நாட்டுக்குப் பொருத்தமான சித்தாந்தம் குறித்து நாம் கவனம் செலுத்தவேண்டும். அது பற்றி எனக்குத் தெரியும். அதிகாரத்தைப் பகிர்வது மட்டுமன்றி, அதை பன்முகப்படுத்துவது குறித்துப் பார்க்கவேண்டும். தேவைக்கு மேலதிகமாக அமைச்சுகளுக்கு அதிகாரம் வழங்குவது குறித்தும் ஆராயவேண்டும் – என்றார்.

இந்த நிகழ்வில் சபாநாயகர் கருஜயசூரிய, அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், சுசில் பிரேமஜயந்த, பைஸர் முஸ்தபா, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கொப், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், சாந்தி சிறிஸ்கந்தராஜா மற்றும் ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (த-வ-5)

## விக்கியையும்

ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தகவல் தருகையில்,

அரசமைப்புக் குறித்து மக்களிடம் கருத்தறியும் பணிகள் முடிவடைந்த நிலையில், எமது குழு முக்கிய பிரமுகர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றது. அந்த வகையில் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடன் சந்திப்பு இடம்பெற்றது. இந்த நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை அவரது இல்லத்தில் நாளை வியாழக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம்.

மேலும் இரண்டு மாகாணங்களின் முதலமைச்சர்களைச் சந்தித்துள்ளோம். ஏனையோரை விரைவில் சந்திப்போம்.

இதில் எதிர்வரும் 6 ஆம் திகதிக்குப் பின்னர் திகதியொன்றைத் தருவதாக வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைச் சந்திப்பதற்குத் திகதி ஒதுக்கித் தருமாறு கேட்டிருந்த போதும், கடந்த ஒரு மாத காலமாக சந்திப்பதற்கு நேரம் தரவில்லை என்றும், அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, புதிய அரசமைப்புத் தொடர்பில் மக்களிடம் கருத்தறிவதற்காக 24 பேரடங்கிய குழுவொன்றை அரசு அமைத்தது. அதில் சிவில் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர். இந்தக் குழுவினர் அனைத்து மாவட்டங்களுக்கும் பயணம் மேற்கொண்டு மக்களின் கருத்துக்களைப்பதிவுசெய்தனர். அதன் இறுதி அறிக்கை ஏப்ரல் 30 ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## முறிகண்டி

என்ற இளைஞனே உயிரிழந்தவராவார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கனகராயன்குளம் பகுதியில் இருந்து வேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள், முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அண்மையில் வைத்து வீதியில் பயணித்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானது எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞன் படுகாயமடைந்தநிலையில், அப் பகுதியில் நின்றவர்கள், வீதியால் பயணித்த வாகன உதவியுடன் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

எனினும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது, அவர் உயிரிழந்துவிட்டார் என மருத்துவர்கள் உறுதி செய்தனர்.

குறித்த விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதியைக் கைது செய்த மாங்குளம் பொலிசார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-வ-101)


# மரண அறிவித்தல்கள்

**திருமதி பக்தகௌரியம்மா (கௌரி) இராதாகிருஷ்ணன்**

**(ஓய்வு பெற்ற பொறுப்பு தாதிய உத்தியோகத்தர்- போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)**



**தோற்றம்- 29.09.1943**
**மறைவு- 27.03.2016**

யாழ் எழுவைதீவைப் பிறப்பிட மாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமா கவும் கொண்ட திருமதி பக்தகௌரி யம்மா இராதாகிருஷ்ணன் 27.03.2016 ஞாயிற் றுக்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-கனகம்மா தம்பதியி னரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர் களான இராசையா-வள்ளி நாயகி தம்பதியினரின் மருமகளும் இராதாகிருஷ்ணன் (கனடா) அவர்களின் அன்பு மனைவியும் வன்மீகலிங்கம் (சுவிஸ்) அவர்களின் அன்புச் சகோதரியும் சாயிபிரதீபா (கனடா), பார்த்திபன் (மின்பொறியியலாளர்-இலங்கை மின்சார சபை) Dr.பிருந்தா (போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் லம்போதரன் (கனடா), சுபாசினி (பிரதேச செயல கம்,சங்கானை) Dr. நளிதன் (ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அபிஷனா, அஷ்விகா, அனிஷ்கன், லூஷாரா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2016) புதன் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

54/4, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
மகன் : 0777638186

# மரண அறிவித்தல்

**அகஸ்ரின் மரியதாஸ் (ஜோர்ஜ்)**



**பிறப்பு 30.06.1940**
**இறப்பு 29.03.2016**

பாஷையூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அகஸ்ரின் மரியதாஸ் நேற்று (29.03.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அகஸ்ரின் - மரியை தம்பதிகளின் அன்பு மகனும், அந்தோனிப்பிள்ளை, லைசலா, காலஞ்சென்ற ஜசிந்தா மற்றும் கொறற்றி, எமிலியா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களாகிய அக்கினேஸ், பாலன் மற்றும் அன்ரனிதாஸ் (ராசா), அன்ரனி (தாஸ்), ஜெயா ஆகியோரின் மைத்துனரும், ஜெயராசா, ஜெயராணி ஆகியோரின் சிறிய தந்தையும், ஷாலினி (கிராம சேவகர் J/83 - கொட்டடி) ஷரோன், ஜோய்வின், ஷாமந்தி, பவித்திரா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (30.03.2016) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித கெஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(70371)
(11,17,18)

தகவல்:
சகோதரர்கள்

# மரண அறிவித்தல்

**திருமதி கேதீஸ்வரி தர்மசோதி**

(இளைப்பாறிய சங்கீத ஆசிரியை - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)



கட்டுடையைச் சேர்ந்த இளைப்பாறிய சங்கீத ஆசிரியை திருமதி கேதீஸ்வரி தர்மசோதி 27.03.2016 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் கட்டுடையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனர் தாமோதரம்பிள்ளை கணேசையா நடராசா - தெய்வநாயகி தம்பதியரின் ஏகபுத்திரியும் இணுவிலைச்சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பையா - இரத்தினம் தம்பதியரின் மருமகளும் தம்பையா தர்மசோதி (ஓய்வு பெற்ற அதிபர் - சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் குகராஜா(கொழும்பு) காலஞ்சென்ற சண்முகராஜா மற்றும் சிவராஜா(லண்டன்), தாமோதரன்(கனடா), ராஜேந்திரன்(இந்தியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் விமலா(கொழும்பு), சீத்தா (லண்டன்), யோகேஸ் வரி(கனடா), மைதிலி(இந்தியா) மற்றும் இணுவிலைச் சேர்ந்த வாலம்பிகை - பஞ்சாட்சரம், சிவயோகவல்லி சுப்ரமணியம், முருகையா, சண்முகநாதன், ராஜேந்திரம் (கனடா), சத்திய பாமா வைரவநாதன், கைலாயநாயகி நவரட்ணசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சரோஜினி(லண்டன்), ஷாளினி(கனடா), சுரேஷ்(கொழும்பு), லீனா (கனடா), காங்கா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் இணுவிலைச் சேர்ந்த கோகுலன், கஸ்தூரி, புராதனி ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும் சிவகஜனி, பீஷ்மன், சுகுமாரன் ஆகியோரின் அன்பு மாமியும் அநபாயன், அநுருத்தன், அட்சயன், ரமணிஜா ஆகியோரின் அருமைப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(31.03.2016) வியாழக்கிழமை கட்டுடையிலுள்ள அவரது இல்லத்தில் இடம் பெற்று அவரின் பூதவுடல் காலை 9.30 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] மானிப்பாய்.

தகவல்
தர்மசோதி (கணவர்)

021 225 6491

# முத்தையா துரையப்பா

**(சமாதான நீதிவான்)**



யாழ்.புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கைதடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா துரையப்பா 25.03.2016 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - தங்கம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும்,காலஞ்சென்றவர்களான தம்பு - சிவகொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், உதயகலா (கலா - சுவிஸ்), உதயசேகர் (சேகர் - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா (இராசமணி), கனகம்மா மற்றும் கிருஸ்ணபிள்ளை (அலுத்மாவத்தை - கொழும்பு), பாக்கியம் (பிள்ளையம்மா - பிரான்ஸ்), நாகரத்தினம் (சமாதான நீதிவான்- அலுத்மாவத்தை - கொழும்பு), காலஞ்சென்ற கணேசமூர்த்தி (துரைச்சாமி - டென்மார்க்) மற்றும் சிரோண்மணி (பிரான்ஸ்), நாகேஸ்வரி (பிரான்ஸ்), பரமேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், குணாளன் (குணம்- சுவிஸ்), மதிவதனி (வதனி - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற கணேசு (தரணியக்கலை), கணபதிப்பிள்ளை ( சாவகச்சேரி - றஞ்சனா கபே-கனடா),காலஞ்சென்றவர்களான நீலாம்பிகை, நல்லையா மற்றும் சுபத்திராதேவி (கொழும்பு), தங்கமணி (கிளி- டென்மார்க்), காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம் (சாம்பர்), கனகசபை (மீசை), ஏகாம்பரம், லோகேஸ்வரி (மல்லாகம்) மற்றும் ஆறுமுகம் ( கைதடி), சிவராசா (கைதடி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிவேதா, தயாபரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், திசாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2016) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.குணாளன் - மருமகன்
கு.உதயகலா - மகள்
மு.உதயசேகர் - மகன்

கைதடி வடக்கு

(70321)
(11,17,18)

021 223 1513


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊழியர் தேவை

**அங்கர் செக்குறிட்டி சேவிஸ் நிறுவனம் ஊடாக யாழ்நகரப்** பகுதியிலே உள்ள அரச நிறுவனம் ஒன்றில் வேலை செய்யக் கூடிய **கீழ்க்காணும் பதவிகளுக்கு ஊழியர் தேவை.**

நாட்டமுள்ள விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிவரக் கோவையுடன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு நேரில் வரவும் சுயவிவரக் கோவையில் விண்ணப்பிக்கின்ற பதவியினைக் குறிப்பிடவும். விண்ணப்பதாரி யாழ்ப்பாணத்தில் வசிப்பவராக **இருத்தல் வேண்டும்.**

**நேர்முகத் தேர்வு திகதி : 06.04.2016**

**நேரம் : காலை 9மணி தொடக்கம் மாலை 4மணி வரை**

**பதவி**
**பாதுகாப்பு ஊழியர் :** 18 - 45 வயதுக்குட்பட்ட நற்பழக்க வழக்கமும் தேக ஆரோக்கியமும் உள்ளவர்கள் சமுகமளிக்கலாம்.

**பதவி**
**கனரக வாகன இயக்குநர் :** 18 - 45 வயதுக்குட்பட்டவர் மற்றும் கனரக வாகன ஓட்டுநருக்கான அனுமதிப் பத்திரம். சிறந்த முன் அனுபவம் உள்ள நல்லதேக ஆரோக்கியம் உள்ளவர்கள் சமுகமளிக்கலாம்.

**பதவி**
**மயானத் தொழிலாளி :** 18 - 45 வயதுக்குட்பட்ட நற்பழக்க வழக்கமுள்ள. தேகஆரோக்கியம் உள்ளவர்கள் நேர்முகத் தேர்வில் பங்கு பற்றலாம்.

**நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் ஆவணங்களை எடுத்து வரவும்**

- கிராம அலுவலரின் நற்சான்றிதழ்
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரப் பிரதி
- தேசிய அடையாளஅட்டைப் பிரதி
- கல்வித் தகைமையினை உறுதிப்படுத்தும் சான்றிதழ்
- அனுபவ சான்றிதழ்கள் இருப்பின் அதன் பிரதி

**நேர்முகப் பரீட்சைஇடம் பெறும் இடம்**
**சின்னய்யா பாலதாஸ்,**
**74/2, பலாலி றோட்,**
**கந்தர் மடம், யாழ்ப்பாணம்.**

**மேலதிக தகவல்களுக்கு தொடர்பு இலக்கம்**
**077 539 6350 / 077 239 2850 /**
**077 320 6484**

## நல்லிணக்க

முறைகளை வடிவமைத்தலும், உருவாக்குதலுக்குமாக, கடந்த டிசம்பர் மாதம் அமைச்சரவையின் அனுமதியுடன், நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங் கிணைப்பதற்கான செயலகம் ஆரம்பிக்கப்பட்டது.

பிரதமர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் குறித்த செயலகத்தினால்காணாமற்போனோர் அலுவலகம், உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் மீள் - நிகழாமைக்கான ஆணைக்குழு, சட்டப் பொறிமுறைகள் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் ஆகியன ஆரம்பிக்கப்பட்டு, அரசின் நல்லிணக்கச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த செயலகத்தின் செயலாளர் நாயகமாக அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் தலைமைப் பதவி வகித்துவரும் மனோ தித்தவெல நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், மூலோபாய முகாமைத்துவ முகவர் நிறுவனத்தின் தலைவர், பொது நிறுவனச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர்நாயகம், தேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான செயலணியின் தலைவர், ஜனாதிபதி அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆகிய பதவிகளை வகித்தவர்.

அத்துடன், மனோ தித்தவெல, தற்போது பிரபல தனியார் கூட்டுக் குழுமத்தின் முகாமைத்துவப் பணிப் பாளராகவுள்ளார் என வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகத்தின் ஆரம்பப் பணிகளாக மக்கள் கருத்தறிவதற்கான நிபுணர்கள் குழு அமைக்கப்பட்டு, ஆலோசனைகள் பெறப்படுகின்றன. குறித்த பணிகளை யாழ். மாவட்டச் செயலகத்தில் வைத்து வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

(து-வ)

## பகிரங்க ஏல விற்பனை

### போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

யாழ்.போதனா வைத்தியசாலையில் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பின்வரும் பொருள்கள் **2016.04.08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி** தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. இரும்புக்கட்டில்கள், சில்லுக் கதிரைகள், மேசைகள், அலுமாரிகள் ( ஸ்ரீல்)
2. மர அலுமாரிகள், மரக் கதிரைகள்
3. கணினிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்கள்
4. குளிர்சாதனப் பெட்டிகள்
5. பழைய இரும்பு, அலுமினியம், சில்வர் பொருள்கள்
6. பழைய மர, இரும்புக் கதவுகள், யன்னல்கள் மற்றும் அதற்குரிய நிலைகள்
7. பாவித்த வாகன ரயர்கள்
8. பழைய பிளாஸ்ரிக் பொருள்கள்
9. பழைய இரும்புக் கேடர்கள்
10. பழைய தீராந்தி, பனை மரங்கள் மற்றும் சிலாகைகள்
11. பழைய சீற் மற்றும் ஓடுகள்
12. ஏனைய தளபாட உபகரணங்கள்

இந்த ஏல விற்பனையில் கலந்துகொள்ள விரும்புவோர் இல.111, பிரதான வீதியில் உள்ள யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைக் களஞ்சியத்தில் மேற்படி பொருள்களை **2016.04.08 ஆம் திகதி காலை 8.00 - 10.00** மணிவரை பார்வையிட முடிவதுடன் அதனைத் தொடர்ந்து ஏல விற்பனையில் கலந்துகொள்ளவும் முடியும். ஏலத்தில் தெரிவானவர்கள் பணத்தைக் காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுப் பொருள்களை அன்றைய தினம் பிற்பகல் **5 மணிக்கு** முன்னர் மேற்படி களஞ்சியத்திலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

(இ22284(ஏ.17.18))

# கண்ணீர் அஞ்சலி

**மலர்வு**
**29.09.1943**

**உதிர்வு**
**27.03.2016**



## அமரர் திருமதி
## பக்தகௌரியம்மா (கௌரி)
## இராதாகிருஷ்ணன்

நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர்
கண்ணிமைக்கும் நேரத்தினுள்
காலனுமைக் கவர்ந்து சென்றதேனோ?
கொடுமையை எண்ணிக் கலங்குகிறோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம்.
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**பிரிவால் வாடும்**
**நவரட்ணம் குடும்பம்**

AL MUGHAM AluminiumCompany
**உரிமையாளர்**
**சசிகாந்தன் (டோகா, கட்டார்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூட்டிய

அனுமதியுடன் கதவை உடைத்துக் கைப் பற்றியுள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையத்தின் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

மன்னார் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து குறித்த பகுதிக்கு விரைந்து சென்றமன்னார் பொலிஸ் நிலையத்தின் மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரி உதவி பொலிஸ் பரிசோதகர் எச்.எம். டபிள்யு.ஹேரத் தலைமையிலான பொலிஸ் குழுவினர், குறித்த பகுதியில் உள்ள வீடு ஒன்றை முற்றுகையிட்டனர். எனினும் வீட்டில் எவரும் இல்லாத நிலையில் வீடு மூடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மன்னார் பொலிஸ் நிலையத்தின் மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரி, மன்னார் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இதன்பிரகாரம் மன்னார் நீதிவானின் அனுமதியோடு, நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் குறித்த வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு, தர்க்கா என்ற பெயரைக் கொண்ட பொலிஸ் மோப்ப நாயின் உதவியுடன் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது 20 பொதிகளில் அடைக்கப்பட்ட 44 கிலோ கேரளக் கஞ்சாப் பொதிகளை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். எனினும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. குறித்த வீட்டின் உரிமையாளர் போதைப்பொருள் வியாபாரி எனத் தெரிவித்துள்ள மன்னார் பொலிஸ் நிலையத்தின் மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரி, குறித்த நபரைத்தேடிவருவதாகக்குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கைப்பற்றப்பட்ட கஞ்சாப்போதைப் பொருள் 44 இலட்சம் ரூபா பெறுமதியுடையது எனத் தெரிவித்த பொலிஸார், குறித்த கஞ்சா போதைப்பொருள் மன்னார் நீதிமன்றில் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் கூறினர்.

மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவில் கஞ்சாப் போதைப் பொருள்கள் கடத்தப்படுவது தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில், கடந்த வாரமும் அங்கு கஞ்சாப் போதைப் பொருள்கள் மீட்கப் பட்டிருந்தன. இந்த நிலையில் குறித்த வீட்டில் நேற்றுமுன் தினம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.(த-வ-4-56)

## ஞாயிறன்று

மைத்திரிபால சிறிசேன வவுனியா மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளார்.

இதன் பிரகாரம் வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பிரி வில் அமைக்கப்பட்ட 55 வீடுகளைப் படையினரின் குடும்பத்தவர்களுக்குக் கையளிக்கும் ஜனாதிபதி, வவுனியா பிரதேச செயலாளர் பிரிவின் வைரவப் புளியங்குளம் பகுதியில் வித்தியா குடும்பத்துக்காக அமைக்கப்பட்ட வீட்டையும் கையளிக்கவுள்ளார்.

(த-வ-101)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை இராமலிங்கம்

(ஓய்வு பெற்ற பேருந்து நடத்துநர்)



குப்பிளான் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராமலிங்கம் (ஓய்வு பெற்ற பேருந்து நடத்துநர்) நேற்று (29.03. 2016) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை- மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், விசுவலிங்கம்-யோகம்மா தம்பதியரின் மருமகனும், ரூபியின் அன்புக் கணவரும் ஞானரூபன், ரோகினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஸ்ரீமானின் (கிராம அலுவலர்) மாமனும் பாலகிருஷ்ணன் (டென்மார்க்), கனகம்மா, பரமேஸ்வரி காலஞ்சென்றவர்களான சற்குணம், சுந்தரலிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஆனந்தரதி, இன்பராணி, விஜயராணி ஆகியோரின் மைத்துனரும் குகாயினி (யா/ வேம்படி மகளிர் கல்லூரி) , ஸ்ஜாமினி (யா/ இந்து மகளிர் கல்லூரி) கற்பகா (யா/ வேம்படி மகளிர் கல்லூரி), கஜந்தினி (யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பேரனுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2016) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் குப்பிளான் தெற்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடாகரம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குப்பிளான் தெற்கு,**
**ஏழாலை. 075 0733961**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி இராசமணி நடராசா

கோப்பாய் வடக்கு இராதம்புவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி நடராசா (28.03.2016) திங்கட்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் கலஞ்சென்ற நடராசா (நெல்லுச்சங்க மனேச்சர்) அவர்களின் அன்பு மனைவியும் சோதீஸ்வரன் (கனடா), ஜெகயோதி இராஜமகேந்திரன் (ஆசிரியை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), சண்முக ரத்தினம் (சிவநாதன்-சுவிஸ்), கலாராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் இ.இராஜமகேந்திரன் (ஓய்வுநிலை அதிபர்) இந்திரா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அனுஷா (யாழ் பல்கலைகழகம்) இராஜாதித்தன் ( BCAS யாழ்ப்பாணம்) சஜித்தா, செந்துஷா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2016) புதன்கிழமை காலை 09.00 மணியளவில் கோப்பாய் வடக்கு இராதம்புவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கோப்பாய் கந்தன் காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**இ.இராஜமகேந்திரன் - மருமகன்**
**(முன்னாள் அதிபர் யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி)**

**0779366295**

## மரண அறிவித்தல்

### திருமதி ஜெயலட்சுமி கந்தையா



புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கு உரும்பிராய் செல்லப்பா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயலட்சுமி கந்தையா நேற்று (29.03.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், செல்லப்பா கௌரியம்மா, செல்லப்பா நீலயாதாட்சி ஆகியோரின் சகோதரியும், புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, ஜெகதீஸ்வரன், சந்திராதேவி ஆகியோரின் அன்புத் தாயும், ஜெகநாதன், நரசிங்கப் பெருமாள், ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் மாமியும், S.தனபாலசிங்கம் காலஞ்சென்ற S.சண்முகரத்தினம் மற்றும் S.சாரதாம்பாள், Y.தனேஸ்வரி ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணிக்கு உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**செல்லப்பா வீதி,**
**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**


(70204) (10,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### Dr. செல்லப்பா சபாநடேசன்

**தோற்றம்**
**24 . 07 . 1941**



**மறைவு**
**28 . 03 . 2016**

8ஆம் கட்டை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத் தையை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. செல்லப்பா சபாநடேசன்( நிர்வாக சபை உறுப் பினர்-தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்) 28.03.2016 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா செல்லப்பா (ஓய்வு பெற்ற சுகா தார பரிசோதகர்) - தையல்நாயகி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், பொன்னையா நவரத்தினத்தின் (கொழும்பு) பெறாமகனும் காலஞ்சென்ற விக்கினேஸ்வரியின் (மூளாய்) அன்புக் கணவரும் ராஜ்குமார் (பின்லாந்து), பிரதீபா (கனடா) ஆகியோ ரின் பாசமிகு தந்தையும், பிரதீப்குமாரின் அன்பு மாமனாரும் ஹரிணியின் பாசமிகு பேரனும் குகதாசன் (ஓய்வு பெற்ற கணக்காய்வு அத்தியட்சகர்), சர்வானந்தன் (மருந்தாளர்), தில்லைநாதன் (ஓய்வு பெற்ற பொறியியலாளர்), சர்வேஸ்வரி ( கனடா), ரவீந்திரன் ( பிரான்ஸ்), காலஞ்சென்ற கெங்காதரன் மற்றும் சிறீதரன் (கனடா), சரவணபவன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தர்மபூபதி, சண்முக வசீகரி, திலகவதி, சதாநந்தன், மங்கையர்க்கரசி, ஜமுனா, மதிவதனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் துவாரகன், கோகுலன், வேதசாருணி, சிம்மகி, நிரோசனா, திவிகரா, குகாயினி, ஜனனி, ஜனகன், சிவானுஜன், கேசவன், சுதர்சன், மைத்திரேஜி, இராகுலன், ஆரூரன், கிரன், வைஸ்ணவி, ஸ்ரீராம் , ராம்பிரகாஸ் ஆகியோரின் பாச மிகு பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.03.2016 முற்பகல் 10.00மணியளவில் 8 ஆம் கட்டை துர்க்கா புரத்தில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**8ஆம் கட்டை, துர்க்காபுரம்.**
**தொ. இல 077 340 5862**

**தகவல்: பி. பிரதீபா (மகள்)**
**ச. பிரதீப்குமார் (மருமகன்)**

## கண்ணீர் அஞ்சலி

**தோற்றம்**
**01 . 03 . 1990**



**மறைவு**
**28 . 03 . 2016**

மத்தொனி கரவெட்டியைச் சேர்ந்த

### நடராசா சுஜீவன்

(கணித பாட ஆசிரியர்- முல/ பெரிய புளியங்குளம் அ.த.க பாடசாலை)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரிய நண்பர்கள்**
**துணுக்காய் கல்வி வலயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 30

**நாமகள் வி.கழகத் தொடர்**

தெல்லிப்பழை நாமகள் சன சமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் காளியம்பாள் அணியை எதிர்த்து துணைவி சென்.நியூஸ்ரரா் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊர்காவற்றுறை



செ ன் . ஜே ம் ஸ் அணியை எதிர்த்து மூளாய் வளர்மதி அணி மோதவுள்ளது.

**தாச்சிச் சங்கத்தின் தொடர்**

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறும் காலிறுதியாட்டங்களில், மாலை 5 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து 'ஏ' அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்தசிறி அணி மோதவுள்ளது. மாலை 6 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் புதுமடம் வைகறை அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை அணி மோதவுள்ளது. இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கோண்டாவில் மறுமலர்ச்சி அணியை எதிர்த்து உடுவில் ஆலடிசிந்து 'பி' அணி மோதவுள்ளது.

**இளைஞர் வி.கழகத் தொடர்**

பருத்தித்துறை கால் பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் அராலி சென்.ஜேம்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-23-108)

# யாழ். தாச்சித் தொடரின் சில ஆட்டங்களின் முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 30

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்த சிறி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணி 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

மூன்றாவதாக இடம்பெற்ற ஆட் டத்தில் உடுவில் ஆலடி சிந்து 'பி' விளையாட்டுக் கழகத்தை எதிர் த்து பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் உடுவில் ஆலடி சிந்து 'பி' விளையாட்டுக் கழகம் 5:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

மானிப்பாய்பெஸ்ட்ஹோம்விளையாட்டுக்கழக அணிக்கும் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற நான்காவது ஆட்டத்தில் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக அணி 10:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

ஐந்தாவது ஆட்டத்தில் புதுமடம் வைகறை 'ஏ' விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவாலி தென்றல் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் புதுமடம் வைகறை 'ஏ' விளையாட்டுக் கழக அணி 10:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

(ம-23)

## சரணடைந்த

மனைவி திருமதி உமாபதி .

11 ஆயிரம் போராளிகளை புனர்வாழ்வளித்து விடுதலை செய்த இலங்கை அரசால், வெளிப்படையாக பஸ்ஸில் ஏற்றி செல்லப்பட்ட 50 போராளிகளின் பெயர் விவரங்களை வெளியிட முடியாமைக்கான காரணம் என்ன? எனவும் அவர் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் கேள்வியெழுப்பினார்.

மன்னாரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வில் சாட்சியமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அருட்தந்தை பிரான்சிஸ் யோசப் தலைமையில் எனது கணவர் பரராஜசிங்கம் உமாபதி உட்பட 50 போராளிகள், கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி இராணுவத்திடம் சரணடைந்த நிலையில், அவர் எம்முடன் இன்றுவரை எந்தவித தொடர்புகளும் அற்று இருக்கின்றார்.

எனது கணவர் உட்பட 50 போராளிகளையும் அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப்பையும் ஏற்றிச் சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான சிவப்பு நிற பஸ்ஸில் சென்றவர்களின் விவரம் இந்த ஏழு வருடங்களில் எமக்குக் கிடைக்கப் பெறவில்லை.

எனவே இது தொடர்பாக எங்களுக்கு நீதிவேண்டும். 11 ஆயிரம் போராளிகளைப் புனர்வாழ்வளித்து விடுதலை செய்த அரசால், முள்ளிவாய்க்காலில் வெளிப்படையாக பஸ்ஸில் ஏற்றிச் செல்லப்பட்ட குறித்த 50 போராளிகள் தொடர்பாக விவரங்களை வெளியிட முடியாமைக்கான காரணம் என்ன? எனது கணவனைத் தேடி கடந்த 7 வருடங்களாக நான் அலைந்து திரிகின்றேன். இறுதிப் போரின்போது அரசு, விடுதலைப்புலிகளைச் சரணடையக் கூறியது. அதனடிப்படையில் எனது கணவர் 33 வயதில் இராணுவத்தினரிடம் சரணடைந்தார். இன்றைக்கு அவருக்கு 40 வயது. அவர் இருக்கின்றாரா? இல்லையா? என ஆணைக்குழு தெரிவிக்க வேண்டும்.

அருட்தந்தை பிரான்சிஸ் யோசப்புடன் சரணடைந்த போராளிகளில் ஆறு பேருக்கான ஆள்கொணர்வு மனு தொடர்பான வழக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நடந்துவருகிறது. குறித்த வழக்கில் கடைசியாக நடைபெற்ற விசாரணையின் போது, வட்டுவாகல் பகுதியில் சரணடைந்தவர்களின் பெயர் பட்டியல் உள்ளது என சாட்சியமளித்து, அதனை நீதிமன்றில் சமர்ப்பிப்பதற்கு இராணுவம் ஒப்புக்கொண்டுள்ளது.

**குறித்த பட்டியலின் அடிப்படையில், அடுத்த தவணை நடை பெறவுள்ள வழக்கில் குறித்த** பட்டியலில் எனது கணவரின் பெயர் வரும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். இராணுவம் கூறுகிறது சசிதரன் என்றழைக்கப்படும் எழிலன் பெயர் தங்களிடம் இல்லை . ஆனால் வட்டுவாகலில் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களின் பெயர் விவரம் எங்களிடம் இருக்கின்றது என்று. ஆறு பேர் தொடர்பான ஆள்கொணர்வு மனுவில் முதலாவது நபர் எழிலன். ஆனால் ஆள்கொணர்வு மனு விசாரணையில் எழிலன் இல்லை என இராணுவம் கூறுகிறது. ஆனால் ஏனைய சரணடைந்தவர்களின் பட்டியல் இருப்பதாகக் கூறுகிறது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் இந்த பட்டியலை இராணுவம் சமர்ப்பிக்கவேண்டும். அந்த பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டால், எனது கணவரின் பெயரும் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும். ஏன் என்றால் எனது கணவரும் அந்த இராணுவ முகாமில்தான் சரணடைந்தார். எனவே ஆணைக்குழு எனது கணவரைக் கண்டுபிடித்துத் தர வேண்டும். என அந்த பெண் ஆணைக்குழு முன் கண்ணீர்மல்க சாட்சியமளித்தார். (து-வ-21)

## மகிந்த

பெர்னான்டோ தெரிவித்தார்.

அத்துடன் வீதி, பாலம், விளையாட்டரங்குகளை செய்வது மட்டும் நாட்டில் அபிவிருத்தியாகாது எனக் குறிப்பிட்ட அவர், இத்தனைகாலமும் இதனைச்செய்தே முன்னாள் அரசு மக்களை ஏமாற்றி வந்தது என்றும் சுட்டிக் காட்டினார்.

சிறிகொத்தவில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அமைச்சர் ஹரின் பெர்னான்டோ இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் வெளியிடுகையில்,

பொது எதிரணியினரின் ஏற்பாட்டில் கடந்த வாரம் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, புதிய அரசு கடன்களைப் பெற்றுள்ள போதிலும் நாட்டில் ஒரு கால்வாயைக் கூடகட்டவில்லை எனக்கூறினார். இந்தக் கருத்தானது நாட்டு மக்கள் மத்தியிலும், ஊடகங்களிலும் புதிய அரசு மீது தவறான பார்வைக்கு வழியமைக்கும் விதத்திலேயே உள்ளது. ஆகவே, இதன் உண்மைத் தன்மை குறித்து கூற இதுவே சிறந்த சந்தர்ப்பம் என நாம் நினைக்கின்றோம்.

அதாவது, 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நாம் ஆட்சியைக் கைப்பற்றியபோது, இந்த நாடு மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்திருந்தது.

குறிப்பாக, சுமார் 9 ஆயிரம் பில்லியன் ரூபா கடனில் நாடு தத்தளித்துக் கொண்டிருக்கும் போதே, நாம் ஆட்சியைக் கைப் [illegible] எல்லாம் செலுத்தி மக்களுக்கு நிவாரணம் அளிப்பதே எமது நோக்கமாகும்.

அத்துடன், மகிந்த தரப்பினர் தற்போது எங்கு சென்றாலும் ரூபாவின் விலை வீழ்ச்சியடைந்து விட்டது என்று கூறிக்கொண்டிருக்கின்றனர். ரூபாவின் விலை எம்மால்தானா குறைந் தது என நாம்இவர்களிடம்வினவவேண்டும். முறையற்ற பொருளாதார, அபிவிருத்தித் திட்டங்களுக்காக கடன்களைப் பெற்றுக்கொண்டு, தற்போது ரூபா குறித்து பேசும் இவர்களை நினைக்கும்போது மிகவும் வெட்கமாக இருக்கின்றது.

இவர்களையெல்லாம் பொறுத்தவரைவீதிகள், பாலங்கள், விளையாட்டரங்குகள் என்பவற்றை நிர்மாணிப்பது மட்டுமே அபிவிருத்தியாகக் கூறப்பட்டது. மக்களின் கண்ணில் தெரிவதை மட்டும் செய்து விட்டுத்தான் கடந்த அரசினர் அபிவிருத்தி, அபிவிருத்தி எனக் கூறிக்கொண்டு ஒட்டுமொத்த நாட்டையும் ஏமாற்றிக் கொண்டிருந்தார்கள்.

எனினும், இதன்மூலம் கிடைத்த பயன் ஒன்றுமில்லை. மாறாக நாம் அனைவரும் கடனாளிகளாகவே மாற்றப்பட்டுள்ளோம்.

இந்தநிலையில், இந்தச் சுமையையெல்லாம் நிவர்த்தி செய்வதே எமது அரசின் முதலாவது பணியாகும். நோயைக் குணப்படுத்த வேண்டுமெனில் கசப்பான மருந்தை எப்படி உட்கொள்ள வேண்டுமோ, அதே போல, இந்தச் சிக்கல்களையெல்லாம் தீர்க்கவேண்டுமெனில் சற்றுக் கடினமான சுமைகளை மக்களும் சுமக்க வேண்டும்.

எமது அரசானது நாட்டின் அபிவிருத்தியை ஒருபோதும் தடை செய்யாது. அந்தவகையில், அலட்டல் இல்லாமல் நாட்டின் அபிவிருத்திகளை நாம் சிறப்பான விதத்தில் முன்னெடுப்போம் - என்றார். (து-வ-5)

## மைத்திரி

பின்னர் ஜனாதிபதி தனது உரையை முடித்துக் கொண்டு மேடையை விட்டு இறங்கியுள்ளார். ஜனாதிபதியினால் வழங்கப்படவிருந்த விருதுகளும் இருளில் வைத்தே வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

நிகழ்வு இடம்பெற்ற மண்டபம் 10 நிமிடங்கள் இவ்வாறு இருளில் காணப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது. (து-வ-5)

## வேண்டாம்

சபையின் அமர்வு கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்றது. இதன் போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானம் தொடர்பிலான கடிதம் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் ஆகியோருக்கு நேற்றுமுன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில், போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்கு வீட்டுத் திட்டத்தை வழங்கும் அரசின் திட்டத்தை வரவேற்கின்றோம். ஆனால், இந்த பொருத்து வீடுகளை எங்களுக்கு வழங்கியதையிட்டு மனவருத்தம் கொள்கின்றோம். 21 லட்சம் ரூபா செலவில் ஒவ்வொரு வீடும் அமைக்கப்படுவது அதிகூடிய செலவாகும்.

இவ்வாறு அமைக்கப்படும் வீடுகளின் பாதுகாப்பு என்பது கேள்விக் குறியாகவுள்ளது. வீட்டின் சுவர் வலிமையற்றது. இலகுவில் உடையக் கூடியது. திருடர்கள், கொள்ளையர்கள் ஆகியோருக்கும் பாலியல் துஷ்பிரயோகம் செய்வோருக்கும் இந்த வீடுகள் இலகுவான வழிகளை ஏற்படுத்திவிடும்.

மேலும், இந்த 21 லட்சம் ரூபா செலவில் வடக்கில் சாதாரணமாக கட்டப்படும் சிமெந்து வீடுகள் இரண்டைக் கட்டிவிட முடியும். பொருத்து வீடுகள் வடக்கிலுள்ள காலநிலை மற்றும் சூழலுக்கு முற்றிலும் பொருத்தமற்றதாகவுள்ளன. வெப்ப காலங்களில் இந்த வீடுகள் அதிகளவான வெப்பமாகக் காணப்படுவதுடன், மழை காலங்களில் வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்து கொள்ளும் நிலைமையும் காணப்படுகின்றது.

இந்த வீடுகள் தொடர்பில் நாங்கள் திருப்தியற்று இருக்கின்றோம். ஆதலால் இந்த வீடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர், இது தொடர்பில் பரிசீலனை செய்யவேண்டும் எனக் குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(து-வ-5)

## இளைஞனின்

இரத்தக் காயங்களை அடிப்படையாகக் கொண்டு அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகக் கோப்பாய் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கோண்டாவில் தில்லையம்பதி வீதியில் உள்ள அண்மையில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடம் ஒன்றிலேயே குறித்த இளைஞன் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த சின்னராசா மகிந்தன் (வயது - 22) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வீட்டிலிருந்து சுமார் 50 மீற்றர் தூரத்தில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாண நீதிவான், சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

**இந்த நிலையில் மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.** (து-வ-4,101,106)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஸ்வெட்லானா காலிறுதியில் செரீனா அதிர்ச்சித் தோல்வி

மியாமி ரென்னிஸ் தொடரில், உலகின் முதல்தர வீராங்கனையான செரீனா வில்லியம்ஸை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றார் ரஷ்யாவின் ஸ்வெட்லானா.


காலிறுதிக்குத் தகுதி பெறும் இந்த ஆட்டத்தில் முதல் செற்றை 7:6 என்று கைப்பற்றியிருந்தார் செரீனா. இருப்பினும் அடுத்த இரு செற்களையும் 6:1, 6:2 என்ற கணக்கில் கைப்பற்றி செரீனாவுக்கு அதிர்ச்சி வழங்கினார் ஸ்வெட்லானா. செரீனா கடந்த 2000ஆம் ஆண்டில் இருந்து காலிறுதிக்கு கூட தகுதி பெறாமல் போன முதல் தொடர் இது தான். (ம)



# கார்ல்சனுடன் செர்ஜி கார்ஜகின் ஆனந்த் இறுதியைத் தவறவிட்டார்

உலக சதுரங்கத் தொடர் சாம்பியன்சிப் தொடரில் நடப்பு சம்பியன் மாக்னஸ் கார்ல்சனுடன் மோதும் வீரர் யார்? என்பதை முடிவு செய்ய 8 முன்னணி வீரர்களுக்கு இடையே நடைபெற்ற போட்டியில் கார்ஜகின் வெற்றி பெற்றுள்ளார்.

ரஷ்யாவின் மாஸ்கோ நகரில் நடைபெற்ற இந்தத் தொடரில் செர்ஜி கார்ஜகின் 8.5 புள்ளிகளுடன் முதலாவது இடத்தைக் கைப்பற்றினார். கருணா பாபியானோ, ஆனந்த் இருவரும் தலா 7.5 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தை பகிர்ந்து கொண்டனர். (ம)



# பெண்கள் ரி-20 அரையிறுதியில் ஆஸி. - இங்கிலாந்து மோதல்

பெண்களுக்கான ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் லீக் ஆட்டங்கள் முடிவடைந்து இன்று அரையிறுதி ஆட்டங்கள் ஆரம்பமாகின்றன. இதன்படி இன்று நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை எதிர்த்து இங்கிலாந்து மோதவுள்ளது. இங்கிலாந்து அணி லீக் சுற்றில் தான் எதிர்கொண்ட அத்தனை ஆட்டங்களிலும் வெற்றிபெற்று மிகப்பெரும் போர்மில் உள்ளது. ஆஸி. ஒன்றில் மட்டுமே தோல்வியடைந்திருந்தது. இதனால் இன்றைய ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம)




# "கிரிக்கெட் மேதையால் தோற்கடிக்கப்பட்டோம்" கோக்லியை குறித்து ஆஸி. வீரர்கள் பெருமிதம்

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி இந்திய அணியை அரையிறுதிக்கு அழைத்துச் சென்ற கோக்லியை ஆஸ்திரேலியாவின் ஊடகங்கள், ஆஸ்திரேலிய வீரர்கள், சக வீரர்கள், இந்திய ஊடகங்கள், கிரிக்கெட் ஜாம்பவான்கள் எனப் பலரும் பெரிதும் பாராட்டியுள்ளனர். இவர்களில் மக்ஸ்வெல் ஒருபடி அதிகம் சென்று, தாம் ஒரு கிரிக்கெட் மேதையால் தோற்கடிக்கப்பட்தாகத் தெரிவித்துள்ளார்.

**சச்சின் ரெண்டுல்கர்:** இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு இடையே இது ஒரு சிறந்த ஆட்டம். மிகப்பெரும் வெற்றி. அனைத்து வகையிலும் சிறந்த இன்னிங்ஸ்.

**பிரையன் லாரா:** கோக்லி சிறந்த வீரர். அதற்கு மேல் சொல்வதற்கு எதுவுமில்லை. பந்தை சரியான நேரத்தில் சந்திப்பதில் நான் கண்டதில் சிறந்தவராக கோக்லி திகழ்கிறார்.

**யுவராஜ் சிங்:** சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தும் வீரர்கள் இங்கு உள்ளனர். மீண்டும் மீண்டும் ஆட்டங்களில் வெற்றி பெறவைக்கும் கோக்லியும் இங்கு இருக்கிறார். வாழ்த்துக்கள்.

**ஹர்பஜன் சிங்:** என்ன ஒரு இன்னிங்ஸ்? என்ன ஒரு சம்பியன் வீரர்.

**தவான்:** சிறந்த முறையில் விளையாடிய கோக்லிக்கு வாழ்த்துக்கள். அவரிடம் இருந்து நிறைய கற்றுக் கொள்ள வேண்டும்.

**மக்ஸ்வெல்:** அந்த இன்னிங்ஸ் புதிய தொரு மட்டத்தில் இருந்தது. சொல்வதற்கு ஒன்றும் இல்லை. சிதறடித்துவிட்டார். ஒரு கிரிக்கெட் மேதையால் தோற்கடிக்கப்பட்டுள்ளோம்.

**டேவிட் வோர்னர்:** உண்மையிலேயே சிறந்த துடுப்பாட்டத்தால் தோற்கடிக்கப்பட்டுள்ளோம். என்ன ஒரு வீரர்.

**வற்சன்:** நான் ஓய்வு பெறும் தினத்தில் இப்படியான ஓர் இன்னிங்ஸை சந்தித்ததில் மகிழ்ச்சி. எனது அதிர்ஷ்டமாக இதைக் கருதுகிறேன். சாத்தியமே அற்ற ஓர் இன்னிங்ஸ். (ம)

# அரையிறுதியில் யுவராஜ் சந்தேகம் பதில் வீரராக பாண்டேக்கு வாய்ப்பு

ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணியின் சகலதுறை வீரர் யுவராஜ் களமிறங்குவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. லீக்சுற்றில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக இந்தியா மோதிய ஆட்டத்தில் யுவராஜ் சிங்குக்கு தசைப் பிடிப்பு ஏற்பட்டது. அவரது தசைப்பிடிப்பு நேற்றுவரை முழுமையாக குணமடையவில்லை. இந்த நிலையில் நாளை நடைபெறவுள்ள மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்துக்கு முன்பாக அவர் உடல்தகுதி பெறவில்லையென்றால் அவருக்கு பதில் வீரராக பாண்டே களமிறக்கப்படுவார். யுவராஜ் களமிறங்காதவிடத்து பதில் வீரராக ரகானே களமிறங் குவார் என்று எதிர்பார்க் கையில் டோனியின் தெரிவாக பாண்டே அமைந்துள்ளார். எனினும் யுவராஜ் களமிறங்குவாரா? அல்லது இல்லையா? என்பது குறித்து இன்றையதினமே உறுதியான முடிவு எடுக்கப்படும். (ம)



# ஆப்கானிஸ்தான் வெற்றி பெறவில்லை; தோல்வி குறித்து சமியின் கருத்து

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகளை ஆப்கானிஸ்தான் அணி வீழ்த்தியது குறித்து தீவுகளின் தலைவரான சமி தனது ஏமாற்றத்தை தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்; மெதுவாக பந்துகள் நின்று வரும் ஆடுகளத்தில் ஆப்கானிஸ்தான் சுழல் வீரர்களை எதிர்கொள்வது கடினமல்ல என்றே கருதுகிறேன். நாங்கள் சாமர்த்தியமாக விளையாடவில்லை. ஒவ்வொரு ஆட்டத்திலும் ஒவ்வொரு வீரர் பொறுப்பெடுத்துக் கொண்டனர், இங்கிலாந்துக்கு எதிராக கெய்ல், 2ஆவது ஆட்டத்தில் பிளெட்சர், 3ஆவது ஆட்டத்தில் சாமுவேல்ஸ். ஆனால் இந்த ஆட்டத்தில் அப்படி எந்த வீரரும்பொறுப்பெடுத்துக்கொள்ளவில்லை. அடுத்த வீரர் முடித்துக் கொடுப்பார் என்று அனைவரும் கோட்டை விட்டோம். சரி. இந்த ஆட்டத்தை மறக்க விரும்புகிறோம். இப்போது கவனம் அரையிறுதியில் தான். 124 ஓட்டங்கள் என்பது எளிதான இலக்குதான், நாங்கள் அதனை எட்டி வென்றிருக்க வேண்டும், ஆனால் நாங்கள்தான் தோல்வியடைந் தோம், அவர்கள் வெற்றி பெறவில்லை. ஆப்கான் வீழ்த்தப்பட வேண் டிய அணியே, எங்களால் அதனைச் செய்ய முடியவில்லை-என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




லக்கின வாசனா

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 29.03.2016 | 1961 | நீலம் |

வெற்றி இலக்கங்கள்
12 16 58 60

வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,448,200/-

2016-04-01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்.

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அழைத்து அறிய: 1919

நியத்த ஜய

வெற்றி வாரம் : 449
திகதி : 29.03.2016
வர்ணம் : மஞ்சள்

வாசி தஹச
விஷேட வெற்றி இலக்கம்
1774

எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ 14,906,100/-

வெற்றி இலக்கங்கள்
04 19 28 48
ஆங்கில எழுத்து
A

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space NJ vd ilg; nra;J 1919 இற்கு அனுப்பவும்.
Tel: 011 4 624 824

01.04.2016 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அடுத்த டிக்கட்டுகள் நீல நிற டிக்கட்டுக்களாகும்.

## பணியாளர்கள் தேவை

யாழ் நகரில் பிரபல்யம்மிக்க புடைவையகத்துக்கு பணியாளர்கள் (ஆண், பெண்) உடன் தேவை.

★ EPF, ETF உடன் திறமைக்கும் அனுபவத்துக்கும் ஏற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் கிடைக்கும்.
★ புடைவை விற்பனையில் அனுபவம் மிக்கவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உடன் தொடர்புகொள்ளவும்.
077 018 5471
(C/22288)
(10.17.18)

## மணமக்கள் தேவை

◦ யாழ் இந்து கௌரவ ஆண் 1984, அத்தம், 12இல் செவ்வாய், 28 பாவம், 5' 6" உயரம் கொண்ட அரச திணைக்களத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு அழகிய உத்தியோகப் பெண் தேவை.

◦ யாழ் இந்து கௌரவ பெண் 1988, பூசம், லக்கினத்தில் செவ்வாய், 56 பாவம், 5' 5" உயரமான அழகிய விஞ்ஞான ஆசிரியைக்கு டாக்டர், பொறியியலாளர், BScஇற்கு குறையாத தகுதி கொண்ட மணமகன் (உள்நாடு) தேவை.

தொடர்பு : 077 899 6281

சொலெக்ஸ்
நீர் பம்பிகள்
உயர்ந்த. நம்பிக்கையான




ரூபா.8450/- முதல்...
0773 658869
விற்பனைப் பிரிவு - அவசர தொடர்புகளுக்கு

சொலெக்ஸ் வரையறுக்கப்பட்ட இஞ்சினியரிங் தனியார் கம்பனி
இல. 39, புதிய நுகே வீதி, பேலியகொடை, இலங்கை.

## பிபா தரப்படுத்தலில் ஆர்ஜென்டினா முதலிடம்

சர்வதேச கால்பந்தாட்டத் தரப்படுத்தலில் (பிபா) ஆர்ஜென்டினா அணி முதலிடத்தைப் பெறுவது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் முதலாம் திகதி புதிய தரப்படுத்தல் வெளியாகும் போதே ஆர்ஜென்டினா அணி முதலிடத்தைப் பெற்றுக் கொள்ளும். உலகக் கிண்ணத்துக்கான தகுதிகாண் ஆட்டங்கள் இடம் பெற்றுவரும் நிலையில், கடந்த வியாழக்கிழமை சிலி அணிக்கெதிராக இடம்பெற்ற ஆட்டத்தில் ஆர் ஜென்டினா அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றிருந்தது. இதன் காரணமாகவே, ஆர்ஜென்டினா அணி முதலிடத்தைப் பெற்றுக் கொள்ளவுள்ளது. (ம)



## டெல்லியின் தலைவரானார் சகீர்



நடப்பு வருடத்துக்கான ஐ.பி.எல். தொடரில் டெல்லி டேர் டெவில்ஸ் அணியின் தலைவராக சகீர்கான் நியமிக்கப்பட்டுள்ளார்.

தலைவராக நியமித்தமை தொடர்பாக சகீர்கான் தெரிவிக்கையில் - டெல்லி டேர் டெவில்ஸ் அணியின் தலைமைக்காக தேர்வு செய்யப்பட்டிருப்பது எனக்கு கிடைத்துள்ள உயரிய கௌரவமாகும். தற்போதைய டெல்லி அணி சிறந்த அணியாக விளங்குகிறது. இளம்அணியான இது ஆச்சரியங்களை நிகழ்த்தவல்லது. இந்த வீரர்களின் ஆற்றல் அபரிமிதமானது. இந்த ஆற்றலை சிறப்பாக நிகழ்த்திக்காட்டுவதே இப்போது முக்கியம் என்றார். (ம)

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
K.K.S றோட், இணுவில்.
(இரு இடத்திலும்)

A/L 2018
தமிழ்
N. சத்திய வேந்தன்
[B.A (Hons) Tamil spl, M.Phil in Tamil]

பிரிவு II ஆரம்பம்
யாழ் நகரில் : 10.00 am
இணுவிலில் : 8.00 am

A/L Day Class வாரத்தில் 7 நாள்களும் நடைபெறுகின்றன.

Note: 2015 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இந் நிறுவனத்தில் தமிழ் கற்ற 52 மாணவர்கள் 'A' தர சித்தியையும் 30இற்கும் மேற்பட்ட மாணவர்கள் 'B' தர சித்தியையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உங்கள் அனுமதிகளை விரும்பிய இடங்களில் பெற்றுக் கொள்ளவும்

## வீட்டுப் பணிப்பெண் தேவை

உணவு, தங்குமிடம் இலவசம்.
இடம் - வல்வெட்டித்துறை
077 599 5659

2016 சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு...

இந்தியன் செலக்‌ஷனின்
இந்தியன் பஜார்
வழங்கும்
மாபெரும் விசேட விலைக்கழிவுகள்



உங்களுக்குத் தேவையான திருமண பட்டுப் புடைவைகள் விதம் விதமான அழகிய சாறி வகைகள் மற்றும் அனைத்து வகையான ஆடைகளையும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.



சல்வார் துணிகள்
சில்க் 2 டொப் சல்வார் துணி ~~1500/-~~ 1000/-
சில்க் 3 டொப் சல்வார் துணி ~~2000/-~~ 1500/-
குண்டன் 2 டொப் சல்வார் துணி ~~1500/-~~ 1200/-
கொட்டன் 3 டொப் சல்வார் துணி (Special) ~~3000/-~~ 2500/-

இடம் : யாழ். வீரசிங்க மண்டபம்.
காலம் : 30.03.2016 முதல் 15.04.2016 வரை

## ஜோகோவிச் நேர்செற் வெற்றி

நடைபெற்றுவரும் மியாமி ரென்னிஸ் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் நேர்செற் கணக்கில் வெற்றி பெற்றுள்ளார் ஜோகோவிச். மியாமி சர்வதேச ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடந்து வருகிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலகின் முதல் நிலை வீரரும், நடப்பு சம்பியனுமான ஜோகோவிச் (செர்பியா), செக் குடியரசு வீரர் ஜாசோவாவை சந்தித்தார். 78 நிமிடங்கள் நடந்த இந்த ஆட்டத்தில் ஜோகோவிச் 6-4, 6-1 என்ற நேர் செட்டில் ஜாசோவாவை தோற்கடித்து 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.